

கல்கி
குடும்பத்துடன் படிக்க...
KALKI
12.11.2006 ரூ.8.0
80 பக்கங்கள்
SAHARA
"காட்ஃபாதர் இல்லாத
தமிழ்நாடு!"



எப்போதும்
எல்லோருக்கும் சாரதா's
BKB-304
CSP-902
சாரதா's
சுப முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்

விமர்சனம்



ஆர்யாவுக்கு எது மாதிரியும் இல்லாத புது மாதிரியான ரோல். துப்பாக்கி விக்கறவரு. மாடல் பெயரைச் சொன்னதுமே அதனோட மேக்கிங் பத்தி கடகடன்னு கொட்டற அழகு அருமை! அரியாசனத்துக்காக அவர் அமைக்கற படிக்கட்டுங்க பயங்கர சுவாரஸ்யம். 'ஆக்கவலி' வார்த்தைய வச்சு காமெடி பண்றது நல்ல கலகல. நாய் சாப்பிட்ட தட்டுல சாதம் வச்சாலும் சாப்பிடுற அவரோட கதாபாத்திரம் படத்துல நல்லா வடிவமைக்கப்பட்டிருக்கு. ஹாட்ஸ் ஆஃப்டு சரண்.

அண்டர்ப்ளே பண்ணி அற்புதமா செஞ்சிருக்கற இன்னொரு ஆளு நம்ம நெப்ஸ். தான் நம்பி ஏத்துக்கிட்டவன் நல்லவனா, கெட்டவனான்னு தெரியாம குழம்பி நிக்கறதும், அடுத்தவன் காலப் பிடிச்சு வாழக்கூடாதுங்கற தன்னோட கொள்கையாலயே தான் காவு வாங்கப்படறதுமா பின்னியெடுத்திருக்கார்.

படத்தை மெதுவா கொண்டு போனாலும் விறுவிறுப்புக்குக் குறை வைக்கல டைரக்டர் சரண். கதாநாயகிங்களுக்கு காதலிக்கறது மட்டும்தான் வேலை. வேற எதைப் பத்தியும் பெருசா அலட்டிக்கல. ரெண்டாவது நாயகியா வர்ற பொண்ணோட முரட்டுக் (சொந்தக் குரலா?) குரல் ரொம்பவே பர வசப் படுத்துது.

நட்புக்காக வந்தாலும் படத்தோட முதுகெலும்பே நாசர் தான். ஆனா காமெடி போர்ஷன் படுவீக். கண் (Gun) நகைச்சுவையெல்லாம் ரொம்பப் பழசுங்ண்ணா. நெப்ஸுக்கு ரைட் ஹேண்டா வர்ற 'காதல்' தண்டபாணி 'கலக்கல்' தண்டபாணி. ராம்ஜியோட முடிவு பரிதாபமானது.

சரண், பரத்வாஜ் கூட்டணின்னாலே பாட்டுங்க பிச்சிக்கும். வட்டாரத்துல அப்படி எதுவும் பிளான் பண்ணல போல. 'யார் தருவார் இந்த அரியாசனம்' மட்டும் முணுமுணுக்க வைக்குது. இருந்தாலும் பின்னணில ஸ்கோர் பண்ணிடறார் பரத்வாஜ்.


நம்பிக்கை துரோகி தன் கூடவே இருந்தும் க்ளைமாக்ஸ்லதான் நெப்ஸுக்குத் தெரிய வருதுங்கறது நம்பும்படியா இல்ல. 'கத்தி, கபடா'ன்னே ரவுடிகளைப் பார்த்துப் பழகின தமிழ் ரசிகர்களுக்கு இப்படியொரு உலகமும் இருக்குன்னு காட்டியிருக்கார் சரண் - ஸ்டைலா, கூலா, அலம்பலா!

- லஜ்ஜாவதி

வட்டாரம்



வட்டமேஜை



கலங்கரை

"நற்பெயரைக் கெடுத்துக் கொண்டார் கலைஞர்" தா.பாண்டியனின் பேட்டி சரவெடி!

- ஆர்.ராமசுப்ரமணி, இருவாரூர்

முதல் பக்கத்தை கம்யூட்டர் Open screen range-க்கு arrange செய்து இருப்பது வாசகர் என்ற mouse தனக்குப் பிடித்த பகுதியை click செய்து படிப்பதற்கு வசதியாக உள்ள அளவு இருந்தது. Excellent.

- எஸ்.மீனா, ஸ்ரீரங்கம்

வஞ்சகக் கேலிக்கூத்து தலையங்கம் + விஜயகாந்த்தின் வளர்ச்சி பற்றிய கார்ட்டூன் நச்!!

- கே.ரெங்கநாதன், இருவாரூர்

'மண்ணில் ஒரு சொர்க்கம்!' இன்ஃபர்மேஷன் டெக்னாலஜியைப் பற்றிய தகவல் கட்டுரை, கம்ப்யூட்டர் படித்து வேலை தேடும் கண்மணிகளின் கண்களைத் திறக்கும் 'கலங்கரை விளக்கம்!'

- எஸ்.கே.மூர்த்தி, கும்பகோணம்

மனிதாபிமானம் முற்றிலும் அழிந்து விடவில்லை. ஆங்காங்கே சில இடங்களில் துளிர்விட்டுக் கொண்டுதான் இருக்கிறது என்பதை மனிதக் குடைகள் சிறுகதை எடுத்துக்காட்டிய விதம் அருமை.

- வே.ஈஸ்வரன், இராஜபாளையம்

பாட்டில் விருப்பும், பட்டில் ரஸிப்பும் ஸாரதா ரகுநாதனின் தனிப்பட்ட உரிமை. அவர் யாரையும் எதற்கும் வற்புறுத்தவில்லையே! வலிக்காத விமர்சனம் கல்கியின் பண்பாடு. ஸ்ருதி பேதத்தை பயங்கர அபஸ்வரம் என்கிறாரே தராசு! நியாயமா?

- என்.பாலு, பெங்களூர்

கருணாநிதி அவரால் ஆதாயம் அடைந்த திராவிடர்களிடையே நற்பெயர் பெற்றிருக்கலாமே ஒழிய. பாண்டியன் நினைப்பதைப் போல் ஒட்டு

ெமாத்த தமிழர் களிடையே அவ நக்கு மதிப்பே கிடையாது என்பது உண்மை.

- இரா.கலியாண ராமன், பெங்களூர்



மண் கவிதை சுரங்கத்தின் மூலம் மண்ணின் ரகசியம், வாசம், மொழி, பேச்சு, மணக ஆகியவற்றை அறிந்து மனம் மகிழ்ந்தோம்.

- என்.கௌரி, கோவை

'வாரம் ஒரு வேலை' இளைஞர்கள் வாழ்வின் திசைகாட்டி.

- இராஜலட்சுமி, பெரம்பலூர்

பிலக்கம்...

டாக்டர்களின் பதில் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

- தீபா,
திருப்பரங்குன்றம்

தலையங்கத்திலிருந்த விஜயகாந்தின் கார்ட்டூனைப் பார்த்து சிலரின் வயிற்றில் புளிகரைந்திருக்கும்!

- தமிழரசு, மதுரை

ஆர்யாவின் வளர்ச்சி ஆச்சரியப்படுத்துகிறது. இதனைத் தக்க வைத்துக் கொள்வாரா ஆர்யா?

- மதிசூடி,
கோடம்பாக்கம்

திலகவதி ஐ.பி.எஸ்.ன் கட்டுரை அனைவருக்கும் ஆரோக்கியம் அளிக்கக் கூடியதாக இருந்தது. அவருடைய மருந்தே உணவு - உணவே மருந்து கூற்று உண்மை.

- சசிகலா, அரியலூர்

கல்கி
ஒவ்வொரு இதழும் உங்கள் பேழைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
எம். மோகன்
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com


சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

கவர் ஸ்டோரி

டபிள்யூ.வி.ராமன்... பத்து வருடங்களுக்கு முன்பு இந்திய அணிக்காக ஆடியவர். இன்று தமிழக கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர். ரஞ்சி சீஸன் களைகட்டப் போகிற இவ்வேளையில், இவரால் (மட்டும்) தமிழக அணிக்கு என்ன பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்துவிட முடியும் என்பதுதான் கிரிக்கெட் ஆர்வலர்களின் கேள்வியும் எதிர்பார்ப்பும். இதை டபிள்யூ.வி.ராமனிடமே கேட்டோம்.

“ஒரு காலத்துல நாம ஆடின தமிழ்நாடு ஸ்டேட்டுக்கே நாம கோச்சா வந்திருக்கிறது த்ரில்லிங்கா இருக்கு. பல்லாண்டு காலமா நடந்து வர்ற ரஞ்சி டிராஃபியை இதுவரைக்கும் நாம ரெண்டு தடவைதான் ஜெயிச்சிருக்கோம். எப்பவும் நாம கடைசிக் கட்டத்துல வந்து தடுமாறிடறோம். இதை மாத்தி எழுதப் போறேன். மும்பை மட்டுமில்ல, எந்த டீமையும் நம்மால ஜெயிக்க முடியும்ங்கிற எண்ணம் வீரர்களோட மனசுல எழணும்” என்கிறார் ராமன் தீர்மானமாக.



• சேப்பல்

வீரர்களின் ஆட்டத்தில் பயிற்சியாளரோட பங்களிப்பு இப்போ எந்த அளவுக்கு மாறியிருக்கு?

“நாங்க ஆடுற காலத்துல கோச்சுன்னு ஒருத்தர் கிடையாது. வீரர்களுக்கு உதவியா மேனேஜர் மட்டும் கூட வருவார். அணியோட கேப்டன்தான் எல்லாமுமா இருப்பார். இப்போ எல்லாமே தலைகீழ். இன்னைக்கு எந்த டீமும் கோச் இல்லாம இருக்கக் கூடாதுன்னு பி.சி.சி.ஐ கட்டளையிட்டிருக்கு. உள்ளூர்ப் போட்டிகள்ல சிறப்பா ஆடி இந்திய அணிக்குத் தேர்வாகிற வீரர்கள், இண்டர்நேஷனல் லெவல்ல ஆடும்போது தடுமாறிடறாங்க. இந்தக் குறையைப் போக்கத்தான் கோச்சுகளோட உதவி தேவைப்படுது.”

சென்னை கிரிக்கெட்டோட தரம் எப்படியிருக்கு?

“சென்னைதான் பெஸ்ட். இங்கே இருக்கிற சவுகரியங்கள், தரமான ஆட்



• டபிள்யூ.வி.ராமன்

டங்கள், வேலைவாய்ப்பு வசதிகள் எதுவும் மும்பையிலே கூட இல்லை. தொடர்ந்து முப்பது, நாற்பது வருடங்களாக டோர்னமென்ட் நடத்து அமைப்புகள் இங்கே இருக்கு. ஆனா இங்கே கெம்பிளாஸ்ட், இந்தியா சிமென்ட்ஸ், முருகப்பா க்ரூப், இந்தியன் வங்கி, ஐ.ஓ.பி.ன்னு கிரிக்கெட்டர்களுக்கு நல்ல சம்பளத்தோட வேலை கொடுக்க நிறைய கம்பெனிகள் இருக்கு.”

இவ்வளவு இருந்தும் ஏன் இந்திய அணியில் இப்போ ஒரு தமிழ்நாட்

"காட்ஃபாதர் இல்லாத தமிழ்நாடு!"

வீரர்கூட இல்லை?


இதுக்கெல்லாம் அதிர்ஷ்டமும் ஆதரவும் தேவை. உதாரணமா வினோத் காம்ப்ளி எப்போல்லாம் அவுட் ஆஃப் ஃபார்மில் இருந்தாரோ, அப்பல்லாம் அவரைத் தூக்கிவிட சச்சின் இருந்தார். சேத்தன் சர்மா, அஜய் ஜடேஜாவுக்கு கபில் தேவ் பக்கபலமாக இருந்தார். நம்ம தமிழக வீரர்களுக்கு அப்படியொரு காட்ஃபாதர் இல்லை. பாலாஜிக்குக் காயம் ஏற்படாட்டி இந்நேரத்துக்கு இந்தியாவுக்காக ஆடிட்டுதான் இருந்திருப்பார். டோனி இவ்வளவு பிரமாதமா ஆடி நம்ம தினேஷ் கார்த்திக் வாய்ப்பைக் கெடுப்பாருன்னு யார்தான் நினைச்சா! இருந்தாலும் பி.வாசு, முஜுபுர் ரஹ்மான், ஷரத், சுனில் சுப்ரமணியன் போன்ற தமிழக வீரர்களும் இந்தியாவுக்காக



ஆடியிருக்கலாம்தான். இதுல ஷரத் ரொம்ப அன் லக்கி. ஒரு கட்டத்துல ட்ராவிட், லக்ஷ்மண், ஷரத் இந்த மூணு பேர்ல ரெண்டு பேர் மட்டும்தான் வேணும்ங்கிற சூழல்ல தம் வாய்ப்பை இழந்தார் அவர்."

சேப்பல் கோச்சிங் பற்றி?

"எக்ஸ்பெரிமென்ட்டுங்கிற பேர்ல சேப்பல் தொடர்ந்து டீம் பேட்டிங் ஆர்டரை மாத்தறது தப்பு. இதனால ரெகுலர் பேட்டிங் ஆர்டர் பார்த்தே ரொம்ப நாளாயிடுச்சு. ஆனா அவர் கங்குலி விஷயத்துல பண்ணினது ரைட்."



அப்போ கங்குலியை நீக்கினதை சரிங்கறீங்களா?

"யாராயிருந்தாலும் அவங்க பேசறதைவிட, அவங்களோட பெர்ஃபாமென்ஸ்தான் பேசணும். தான் இதுவரைக்கும் அடிச்ச பத்தாயிரம் ரன்களைப் பத்தியே கங்குலி பேசிட்டு இருக்கக் கூடாது. அவரை டீமிலிருந்து எடுக்கறதுக்கு ஒரு வருஷத்துக்கு முன்னாடியே அவர் அவுட் ஆஃப் ஃபார்மிலேதான் இருந்தார். அவரை நீக்கினது சரிதான். ஆனா என்ன காரணத்துக்காக அவரை நீக்கினோம்னு யாரும் தெளிவா சொல்லாததுலதான் பிரச்னை வந்தது."

- ச.ந.கண்ணன்

அட்டை மற்றும் படங்கள்: **ஸ்ரீஹரி**



ப்ரிஸ்கிரிப்ஷன்

மருந்து மாத்திரைகள் இல்லாமல் பி.ப்பி. முதல் ஆஸ்துமா வரை அக்குபஞ்சர் முறையில் குணமாகிறதென்பது உண்மையா?

- ஷைலஜா, பாண்டிச்சேரி

டாக்டர் எம்.என்.ஷங்கர், (அக்குபஞ்சர்):

இரத்த அழுத்தம் (பி.ப்பி.) என்பது இதய நோய் அல்ல. நரம்பு உடலிலுள்ள ஓர் உறுப்பு பாதிக்கப்படும்போது மிட்யூட்டரி சுரப்பி வேகஸ் நரம்பு வழியாக சமிக்ஞை அனுப்பி இதயத்தை அதிகப்படியாகத் துடிக்கவைத்து, பாதிக்கப்பட்ட உறுப்புக்கு இரத்தத்தை அனுப்பிம் சமன் செய்கிறது. இது இயற்கையான நடைமுறை. மாறாக இதயத்துச் சுவர்களைத் தடிக்கச் செய்யும் பீட்டா பிளாக்கர், கால்சியம் அண்டகானிஸ்ட்களால் இதயம் பாதிக்கப்படுகிறதேயன்றி, இரத்த அழுத்தம் குணமாவதில்லை.

பாதிக்கப்பட்ட உறுப்பை நாடிப் பரிசோதனை மூலம் கண்டறிந்து அதற்குச் சக்தி அளிக்கும் புள்ளிகளைத் தூண்டினாலே இரத்த அழுத்தம் மட்டுமின்றி கிட்னி பாதிப்பு, டயாபடீஸ், தைராய்டு கோளாறு, வாதநோய்கள், ஆஸ்துமா, அல்சர், கர்ப்பப்பை, சினைப்பைக் கட்டிகள், உடல் பருமன் டான்சில் மற்றும் பல்வேறு உபாதைகளைக் களைய முடியும்! இங்கு சிகிச்சைக்கு வரும் பெரும்பாலானோருக்கு மற்ற சிகிச்சை முடிந்தபின் இரத்த அழுத்தம் நார்மலாகி விடுவது கண்கூடான உண்மை.


எனவே அறிகுறிகளுக்கு கொடுக்கப்படும் சிகிச்சை பின்னர் ஆபத்தான பக்க விளைவுகளை ஏற்படுத்தும். 'நோய் நாடி நோய் முதல் நாடி' என்ற வள்ளுவத்தின்படி மருந்தில்லாத பக்க விளைவுகளில்லாத அக்குபஞ்சர் மருத்துவத்தின் சிறந்த நிபுணரிடம் சிகிச்சை பெற்றுக் கொள்ளும்போது நீங்கள் சொல்ல மறந்த மற்ற நோய்களும் குணமாவது உறுதி!





என்னுடைய பற்கள் சிறு வயதிலிருந்தே இடைவெளிவிட்டு கோணல் மாணலாகவும் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவும் இருக்கின்றன. இதனால் என் முகமே அகோரமாகத் தெரிகிறது. வீட்டில் எனக்கு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். திருமணத்துக்குள் என் பல் பிரச்னைக்குத் தீர்வு







முகம், முகமறிய ஆவல்...

கிடைக்குமா டாக்டர்?

- பெயர் வெளியிட விரும்பாத கல்லூரி மாணவி.

கலைச்செல்வி,
(பல் சீரமைப்பு நிபுணர்):

இந்தப் பிரச்னைக்கு 'Mal occlusion' என்று பெயர். கோணல் மாணலான பற்கள், அளவுக்கு அதிகமான பற்கள், முன் துருத்திய பற்கள், உள்வாங்கிய பற்கள் என்று பலவற்றுக்கு பலகாரணங்கள் உண்டு. தாடை வளர்ச்சி குறைவாக இருப்பதாலும் பரம்பரைத் தன்மையினாலும், சிறுவயதில் விரல் சூப்புவதாலும், நகம் கடிக்கும் பழக்கத்தினாலும் பெரும்பாலும் இவை வரக் கூடும். இதற்காகக் கவலைப்படத் தேவையில்லை. பல் மருத்துவத்தில் நவீன பல சிகிச்சைகள் வந்துவிட்டன. பற்களில் ப்ரேசஸ் என்னும் Fined Clip-ஐப் பொருத்திக் கொண்டால் நாளடைவில் இப்பிரச்னை சரியாகிவிடும். இதைத்தவிர, மேலும் நவீனமுறையில், பல்லின் நிறத்தை ஒத்த 'செராமிக் பிரேசஸ்' கிளிப்பைப் பொருத்திக் கொள்ளலாம். இந்த சிகிச்சை முறையில் நல்ல பலன் கிடைக்கும். உங்கள் பிரச்னைக்கு முடிவுரை எழுத, பல் சீரமைப்பு நிபுணரை அணுகி சிகிச்சை பெறுங்கள்; திருமணத்துக்குத் தயாராகுங்கள்.

தொகுப்பு: **சௌந்தர்யா**

படங்கள்: **பொள்ளாச்சி சுந்தரம்**

அஞ்சல் வழியில் ஹிந்தியில் பேச பயிற்சி பெறுவோமா?
அஞ்சல் வழியில் ஆங்கிலத்தில் புலமைப் பெற்று பேச பயிற்சி பெறுவோமா?

அண்மையில் ஓர் அறிஞரின் சொற்பொழிவு கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர் கூறிய பல கருத்துக்கள் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டியனவாக இருந்தன. அவற்றில் ஒன்று மிக மிக முக்கியமானது. கட்டாயம் பின்பற்ற வேண்டியது. அதிக அளவில் புகழ் பெற விரும்புகிறீர்களா? நிறைய சம்பாதிக்க ஆசையா? அப்படியானால் அதிக மொழிகளைக் கற்றுக் கொள்ளுங்கள், ஆம், அதிக மொழி கற்பவர்களுக்கு வாழ்க்கையில் முன்னேற அதிக வாய்ப்புகள் உள்ளன.

ஆம், மற்றவர்களது மொழிகளை அறிந்திருப்பதால் பல நன்மைகளை அடையலாம். சமீபத்தில் ஒரு முன்னோடி மருத்துவ மனைக்கு சென்றிருந்தேன். அங்கு பணி புரியும் பெரும்பாலானவர்கள் ஹிந்தி, ஆங்கிலம், தமிழ் மற்றும் அண்டை பிரதேச மொழிகளை மிக சரளமாக பேசுகிறார்கள். அங்கு பல மாநிலத்தவரும் வருகின்றனர். அவர்கள் தங்கள் மொழியை மற்றவர் பேச கேட்கும்போது எல்லையற்ற ஆனந்தம் அடைந்தனர். எந்த வேலையில் இருந்தாலும் தாய் மொழியுடன் ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேசுபவர்கள் வெற்றிகரமாக உள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இப்போதெல்லாம் 25 வயதான பிள்ளைகள் கூட குறைந்த பட்சம் மாதம் 25000 ரூபாய் சம்பாதிக்கிறார்கள். படிக்கும்போதே காம்பஸ் இன்டர்வியூ மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு விடுகிறார்கள். அப்படி தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பெரும்பாலும் அவர்களது ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழித் திறமையின் அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எனவே தாய் மொழியுடன் ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் சரளமாக பேசுவது மிக அவசியமானத் தேவையாகிவிட்டது.

தமிழ்நாட்டைக் கடந்து வெளியே சென்ற உடனேயே ஹிந்தி மொழியில் பேசும் அவசியம் இருப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். தமிழ்நாட்டிலேயே இருந்தபடி வாணிபம் போன்றவற்றில் ஈடுபடும்போது ஹிந்தியும் ஆங்கிலமும் அறிந்திருப்பது மிக அவசியமாக உள்ளது. அண்டை மாநிலங்களுடன் வியாபார ரீதியில் உறவு கொள்ள ஹிந்தி மிக அவசியமாகிறது. வாணிபத்தைப் பெருக்க வங்கி முதலியவற்றை நாடும் போதும் மற்றும் பல நேரங்களிலும் ஆங்கிலம் மிகவும் அவசியமாக உள்ளது. ஏன், மெட்ரிக் பள்ளியிலோ மற்ற ஸி.பி.எஸ்.ஸி பள்ளியிலோ படிக்கும் நம் குழந்தைக்கு (குறைந்த பட்சம் அவர்கள் ஆரம்ப வகுப்பில் படிக்கும் போதாவது) பாட சம்பந்தப்பட்ட சந்தேகங்களை நிவர்த்தி செய்யவும் அவர்களது ஆசிரியரிடம் சென்று படிப்பு சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கேட்டறியவும் ஆங்கிலம் மற்றும் தமிழ் அறிவு மிகவும் அவசியமாக உள்ளது.

இவை அனைத்தையும் மனதில் கொண்டு **பாரத ஸ்டேட் பாங்கு அதிகாரிகள் சங்கம் பயிற்சி மையம்** ***பேச்சு மொழி ஹிந்தி*** மற்றும் ***பேச்சு மொழி ஆங்கில*** பயிற்சிகளை அஞ்சல் வழியில் நடத்தி வருகின்றது. இந்த பயிற்சி பற்றிய மற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு கொடுக்கப் பட்டுள்ளன.

பேச்சு மொழி ஹிந்தி டிப்ளமா / பேச்சு மொழி ஆங்கில டிப்ளமா

1. இப்பயிற்சிகளில் மொழி ஆர்வமுடைய எவரும் சேரலாம். (பள்ளிச் சிறுவர் முதல் ரிடையர் ஆனவர் வரை)

2. ***பேச்சு மொழி ஹிந்தி பயிற்சி*** தமிழ் மூலமாகவும், ஆங்கிலம் மூலமாகவும் நடத்தப்படுகிறது.

3. ***பேச்சு மொழி ஆங்கிலம்*** தமிழ் மூலமாகவும், ஹிந்தி மூலமாகவும் நடத்தப்படுகின்றது.

4. அஞ்சல் வழியில் நடத்தப்படுவதால் எங்கிருந்தபடியும் சுலபமாகப் படிக்கலாம்.

5. இரு வழித் தொடர்பு (Two Way Communication) இப்பயிற்சியின் சிறப்பு அம்சமாகும். அதாவது ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் பாடங்கள் கூரியர் / post மூலம் அனுப்பப்படும். ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் பயிற்சிகள் இருக்கும். இப்பயிற்சிகளைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். இவற்றை திருத்தி, பயிலுபவர்

களுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

6. ஐந்து நேர்முக வகுப்புகள் (சனி அல்லது ஞாயிற்றுக் கிழமைகளில்) நடத்தப்படுகின்றது. இவ் வகுப்புகளில் அந்த மாதம் அனுப்பிய பாடங்கள் விளக்கப்படுவதுடன் ஹிந்தி மற்றும் ஆங்கில மொழியில் உரையாட (மதிய உணவுடன்) காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.



* ஒன்பதாவது பட்டமளிப்பு விழாவின் போது தங்கப்பதக்கம் பெற்ற மாணவர்களுடன் SBIOA Institute, நிர்வாகத்தினர்.

7. நேர்முக வகுப்புகளுக்கு வர முடியாதவர்களுக்கு உதவியாக (மொழி விளக்க மேம்பாட்டு மையங்கள்) திருச்சி, கோவை, மதுரை, தஞ்சாவூர், தில்லி, ஹைதராபாத், மும்பை, ராஜஸ்தான் போன்ற இடங்களில் உள்ளன. தவிர 15 பேர்களுக்கு அதிகமான எண்ணிக்கையில் மாணவர்கள் உள்ள இடங்களில் மொழி விளக்க நிபுணர்கள் உள்ளனர்.

8. பேச்சு மொழி ஹிந்தி ஒலி நாடாக்கள் : அகர உச்சரிப்பிலிருந்து பலவகை சூழ்நிலைகளில் பேசும் பயிற்சிகளைக் கொண்ட இரட்டை ஒலி நாடாக்கள் (Twin Cassettes) வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுடன் வழங்கப்படும் துணை நூலை படித்த வண்ணம், ஒலி நாடாக்களைக் கேட்டால் மிக விரைவில் மொழியைக் கற்றுக் கொள்ளலாம். இந்த ஒலிநாடாக்களைப் பெற விரும்புபவர்கள் ரூபாய் 150க்கான டிமாண்ட் டிராப்ட் **SBIOA Institute, Chennai** என்ற பெயருக்கு எடுத்து தனியாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

9. பேச்சு மொழி ஆங்கிலம் ஒலி நாடாக்கள் தயாரிக்கப்பட உள்ளன.

10. பயிற்சியில் தேறியவர்களுக்கு வருடா வருடம் நடக்கும் பட்டமளிப்பு விழாவில் "Diploma in Conversational Hindi / Diploma in Conversational English" சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இதுவரை ஆற்காடு இளவரசர், முன்னாள் பிரதமர் சந்திரசேகர், பாரத ரத்னா சி. சுப்ரமணியம். டாக்டர் கிரண்பேடி - ஐ.பி.எஸ். பாரத ஸ்டேட் வங்கியின் தலைமைப் பொது மேலாளர் திரு R.C. ஷர்மா, அருட்செல்வர் Dr. N.மஹாலிங்கம், திரு எஸ். குருமூர்த்தி, Chartered Accountant and Eminent Columinist, Dr. V.C. குழந்தைசாமி, தென்னக ரயில்வேயின் பொது மேலாளர் திரு தாமஸ் வர்கீஸ்- போன்றவர்கள் இம்மையத்தின் பட்டமளிப்பு விழாவில் முக்கிய விருந்தினராக உரை நிகழ்த்தியுள்ளனர்.

11. பயிற்சி காலம் ஆறுமாதம் (ஜனவரி முதல் ஜூன் வரை, மற்றும் ஜூலை முதல் டிசம்பர் வரை) அடுத்த வகுப்பு ஜனவரி 2007ல் துவங்க உள்ளன.

12. பயிற்சி கட்டணம் ரூ.600/- (ரூபாய் அறுநூறு மட்டுமே) நேர்முகப் பயிற்சி, தேர்வுக் கட்டணம் உட்பட)

ஜனவரி 2007ல் துவங்கவிருக்கும் பயிற்சியில் சேர விரும்புபவர்கள் டிமாண்ட் டிராப்ட் அல்லது உள்ளூர் காசோலை (ரூ.100) SBIOA Institute, Chennai என்ற பெயரில் எடுத்து சுய விலாசமிட்ட, தபால் தலையுடன் (ரூ.10) கூடிய உறையில் கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதவும். (ஒவ்வொரு பயிற்சிக்கும் தனியாக ரூ.100 அனுப்ப வேண்டும்) உறையின் மேல் பேச்சுமொழி ஹிந்தி அல்லது பேச்சு மொழி ஆங்கிலம் மற்றும் பயிற்று மொழியைக் குறிப்பிட வேண்டும். (இந்த ரூபாய் 100/- பயிற்சிக் கட்டணத்திலிருந்து கழித்துக் கொள்ளப் படும்.)

The Executive Director,
SBIOA Institute,
229, N.S.C.Bose Road,
P.B.No.1279, Chennai - 600 001.
Phone : 044 - 25340226
email: sbioacc@yahoo.com

வட இந்தியாவில் இருந்து வந்த அன்பர்கள் தமிழ் கற்றுக் கொள்ள ஏதுவாக ஹிந்தி மூலம் தமிழ் அஞ்சல் வழியில் கற்பிக்கப்படுகின்றது.

சூப்பர் BRAND

சினிமா நட்சத்திரங்களை வைத்து விளம்பரம் செய்தால் விற்பனை பெருகும் என்பது விளம்பரத் துறையின் அரிச்சுவடிப்பாடம். இதனை ஆரம்பம் முதலே வெற்றிகரமாகக் கடைப்பிடித்து வருகிறது லக்ஸ். 1926-ல், ஹாலிவுட் நடனத் தாரகையான ஜிஞ்சர் ரோஜெர்ஸ், லக்ஸ் விளம்பரத்தில் தோன்றியவுடன், அமெரிக்கச் செல்வந்தர்களது ஆடம்பர மாளிகைகளின் குளியல் அறைகளில் நுழைந்தது லக்ஸ். அதனைத் தொடர்ந்து, உலகப் புகழ்பெற்ற ஹாலிவுட் நட்சத்திரங்களான மர்லின் மன்ரோ, எலிசபெத் டைலர் போன்றவர்கள் லக்ஸ் சோப்பு விளம்பரங்களில் தோன்றி 'லக்ஸ்தான் என்னுடைய அழகின் ரகசியம்' என்று சொன்னவுடன், அது உலகமெங்கும் வாடிக்கையாளர்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கம் அசாத்தியமானது.

பிரிட்டன், போல்டன் நகரில் வசித்த பலசரக்கு மொத்த வியாபாரி ஒருவருக்கு வில்லியம் லீவர், ஜேம்ஸ் லீவர் என்று இரண்டு பிள்ளைகள். 1885-ஆம் ஆண்டு, அவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து ஒரு சிறிய சோப் தொழிற்சாலையினை வாங்கி, பாமாயிலைப் பயன்படுத்தி சோப் தயாரித்தார்கள். தங்கள் உற்பத்தியை விரிவுபடுத்துவதில் பெரிய அளவில் ஆர்வம் காட்டிய லீவர் சகோதரர்கள், கடுமையான உழைப்பின் மூலம் தங்களது விற்பனையைப் பெருக்கினார்கள். மாதத்துக்கு சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு டன் அளவுக்கு விற்பனையான அவர்களது சோப்பின் பெயர் 'சன்லைட்'. லீவர் சகோதரர்கள், இங்கிலாந்திலிருந்த ஏராளமான சிறிய சோப்பு தொழிற்சாலைகளை வாங்கினார்கள். அடுத்த கட்டமாக கொஞ்சம் பெரிய சோப்பு கம்பெனிகளையும் வாங்கிப் போட்டுத் தங்களது 'லீவர் பிரதர்ஸ் லிமிடெட்' என்ற நிறுவனத்தை விரிவுபடுத்தினார்கள்.

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் லக்ஸ் கம்பனித் துணிகளைத் துவைப்பதற்கான சோப்பாகத்தான் இருந்து வந்தது. 1925-ஆம் ஆண்டிலிருந்துதான் அது ஒரு குளியல் சோப்பாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியாவில் லக்ஸ் அறிமுகமானது 1929-ல். இந்தியாவில் வெளியிடப்பட்ட அப்போதைய லக்ஸ் விளம்பரங்களில் ஹாலிவுட் நட்சத்திரங்களே இடம்பெற்றனர். 1934-ஆம் ஆண்டு முதல் லக்ஸ் விளம்பரத்தில் இந்தியப் பெண்கள் இடம் பெற்று வருகின்றனர். அப்படித் தோன்றிய முதல் இந்திய மாடல் என்ற பெருமைக்குரியவர் 'சாயா' என்ற இந்திப் படத்தின் மூலம் பெற்ற புகழ் லீலா சிட்னிஸ். மதுபாலா, ஹேமமாலினி, மாதுரி தீட்சித், ஜூஹி சாவ்லா, ஸ்ரீதேவி, ஐஸ்வர்யா ராய், கரீனா கபூர், கரிஷ்மா கபூர் என்று ஐம்பதுக்கும் மேற்பட்ட இந்தி, தமிழ், தெலுங்கு, மலையாளம்,



எஸ்.சந்திர மௌலி



அழகின் இரகசியம்!



கன்னடம் மற்றும் தெலுங்குப் படவுலகில் கொடிகட்டிப் பறந்த நட்சத்திரங்கள்.

நாளொரு ரகமும், பொழுதொரு வாசனையுமாக புதிய சோப்புகள் அறிமுகப் படுத்தப்படுகின்றன. வாடிக்கையாளர்களை ஒரே சோப்பினைத் தொடர்ந்து வாங்கவைப்பது என்பது பெரும் சவாலாக இருக்கிறது. ஆனாலும் கூட, இன்று இந்திய சோப் மார்க்கெட்டில் பதினேழு சதவிகிதம் அளவுக்கு லக்ஸ் விற்பனையாகிறது என்றால், அது சாதாரணக் காரியமில்லை.

லக்ஸ், இந்தியாவில் அறிமுகமான எழுபத்தைந்து ஆண்டுகளில் லக்ஸ் விளம்பரத்தில் ஒரு புதிய முயற்சி செய்திருக்கிறார்கள். இதுவரை சினிமா நடிகைகளே தங்களது அழகின் ரகசியம் லக்ஸ் என்று சொன்னதற்குப் பதிலாக, முதல் முறையாக ஒரு நடிகர் லக்ஸ் விளம்பரத்தில் இடம் பெற்றிருக்கிறார். அது ஷாருக் கான்! அவருடன் முன்னாள் லக்ஸ் நட்சத்திரங்களான ஹேமமாலினி, ஜூஹி சாவ்லா, கரீனா கபூர், ஸ்ரீதேவி ஆகிய நான்கு பேரும் இடம்பெற்றிருக்கிறார்கள். இந்த விளம்பரம் நல்ல பலன் அளித்துள்ளது.


நடுத்தர மற்றும் எளிய மக்களும் வாங்கக் கூடிய வகையில் ஐந்து ரூபாய் விலையில் மினி லக்ஸ் சோப்பு அறிமுகப்படுத்தப்பட்டது இன்னொரு புதுமை.

பிங்க், நீலம், மஞ்சள், பச்சை என்று வண்ணங்களில் லக்ஸ் சோப்பை அறிமுகப்படுத்திய ஹிந்துஸ்தான் லீவர், மேல் தட்டு மக்களுக்காக லக்ஸ் இன்டர்நேஷனல் என்ற உயர் ரகத்தை விற்பனை செய்யத் தொடங்கியதுடன், ரோஜா மலர் வாசம், பாதாம் எண்ணெய், பாலின் க்ரீம், பழச்சாறு ஆகியவற்றைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட சோப்பு வகைகளை அறிமுகப்படுத்தியது இன்னொரு சிறப்பான விஷயம். இந்த வரிசையில் அறிமுகமான இன்னொன்றுதான் லக்ஸ் பாடிவாஷ்.

சினிமா நட்சத்திரங்களைப் பயன்படுத்தி, 'சினிமா நட்சத்திரங்களின் அழகு சோப்' என்று விளம்பரம் செய்தது மாறி 'உங்கள் அழகு வெளிப்பட...' என்று சினிமா நட்சத்திரங்கள் சொல்லும் வகையில் வாசகத்திலும் மாறுதல் வந்துவிட்டது. மாற்றப்பட முடியாதது மாற்றம் ஒன்றுதான் என்பதை ஹிந்துஸ்தான் லீவர் புரிந்து கொண்டிருக்கிறது.

லக்ஸ் - சில தெரியாத தகவல்கள்:

* இந்தியாவிலேயே முதல் முறையாக உற்பத்தி செய்யப்பட்ட லக்ஸ் சோப்பின் விலை இரண்டு அணா.
* தமிழ்த் திரையுலகில், ஜெயலலிதா முன்னணி நட்சத்திரமாக இருந்தபோது லக்ஸ் விளம்பரத்தில் தோன்றியிருக்கிறார்.
* அண்மையில் சாக்லேட் வாசனை கொண்ட சோப்பினை லக்ஸ் அறிமுகப் படுத்தியது. உடல் முழுவதும் சாக்லெட்டைக் குழைத்துப் பூசிய கரீனா கபூரின் படங்கள் கொண்ட காலண்டரை ஹிந்துஸ்தான் லீவர் நிறுவனம் வெளியிட்டுப் பரபரப்பூட்டியது.
* லக்ஸ் தயாரிக்கும் ஹிந்துஸ்தான் லீவரின் இணைய தளம்: www.hll.com



விழிப்புணர்வு

"தும்மலைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? அதைச் சாதாரண ஒரு விஷயமாக இதுவரை எண்ணியிருந்தால், அந்த எண்ணத்தை அடியோடு மாற்றிக் கொள்ளுங்கள். உண்மையில் அது பல நோய்களுக்கு அறிகுறி'' என்கிறார் சென்னை சாந்தோம் சைனஸ் அண்ட் நோஸ் மருத்துவமனையின் காது, மூக்கு, தொண்டை நிபுணரான டாக்டர் ஹரிணி. தும்மல் குறித்து அவர் நம்மிடம் பேசப் பேச பகீரென்கிறது.

"தும்மல் என்பது ஒரு நோயல்ல. அது இறைவன் நமக்களித்த ஒரு வரப்பிரசாதம். ஒரு பென்சிலைக் கொண்டு நம் கையை ஒருவர் குத்த வரும்போது 'குத்த வருகிறார்... கையை எடு' என்று கட்டளையிடுகிறது நம் மூளை. அதைப்போலத்தான் அந்நியப் பொருட்கள்- அதாவது, நம் உடலுக்கு ஒத்துக் கொள்ளாத பொருட்கள், நமது உடலுக்குள் குறிப்பாக மூக்கின் வழி செல்கையில், அதை உடனே உணர்ந்து சுதாகரிக்கும் மூளை, அந்த அந்நிய வஸ்துவை வெளியேற்ற தும்மலை பிரசவிக்கிறது. இந்த தும்மலானது ஓரிரு முறை வந்தால் எந்தப் பிரச்னையுமில்லை. மாறாக அளவு கடக்கும்போதுதான் ஆபத்து உண்டாகிறது.

தும்மலின் எஜமானன் அலர்ஜி!

நமது உடல்நிலைக்கு ஒத்துக் கொள்ளாத பொருட்கள் உள்ளே நுழைகையில் அதைத் தெரியப்படுத்த மனித உடலில் இரண்டு உறுப்புகள்தான் உதவுகின்றன. ஒன்று தோல்பகுதி. இன்னொன்று மூக்கு. அதிலும் தோலைக் காட்டிலும் மூக்கு மிக நுட்பமானது. தோல் உடலில் தடிப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் அலர்ஜியை அறிவிக்கிறது. அதற்கு சிறந்த உதாரணம், ஒரு சில மாத்திரைகள் ஒத்துக் கொள்ளாத போது உடலில் தடிப்பு ஏற்படுவது. அதே போல் மூக்கானது ஒவ்வாமையைத் தெரியப்படுத்த மூளையின் உத்தரவுப்படி தும்மலை உண்டாக்குகிறது.

ஓர் ஆரோக்கியமான மனிதனுக்கு தும்மல் என்பதே பெரும்பாலும் வரக் கூடாது. ஒருவருக்கு ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில்தான் தும்மல் வரத் தொடங்குகிறது. சிலருக்குக் குளிர்ந்த பொருட்கள் ஒத்துக்கொள்ளாது. இன்னும் சிலருக்கு பெட்ரோல் வாசனை, பூக்களின் மகரந்தத் துகள்கள், தூசி, வாகனப்புகை, ஏர் கண்டிஷனர், நாய், பூனை போன்ற பிராணிகளின் முடி போன்றவை ஒத்துக் கொள்ளாது. இப்படிப்பட்ட ஒத்துக் கொள்ளாத பொருட்களை ஒருவர் நுகர நேருகிறபோது, தும்மலானது ஆரம்பித்து விடுகிறது. அதை நிறுத்த வேண்டுமெனில், உடனடியாக அந்த ஒத்துக்கொள்ளாத பொருள் நம் உடலை அண்டாது பார்த்துக்கொள்ள வேண்டும். ஒரு மனிதனுக்கு அலர்ஜி வந்துவிட்டால், அதற்கு சரியான சிகிச்சை, அந்த அலர்ஜி ஏற்படுத்தும் பொருளை விட்டு அம்மனிதன் ஒதுக்கியிருத்தலே. மற்றபடி அலர்ஜிக்கு நிரந்தரத் தீர்வு என்பது கிடையாது. ஆங்கில மருத்துவத்தில் என்றில்லை; வேறு எந்த மருத்துவ முறையிலுமே அலர்ஜிக்கு நிரந்தரத் தீர்வு கிடைப்பது அரிதான விஷயம். ஆனால் சமீப காலங்களில் மருத்துவர்கள் அலர்ஜிக்கு ஒரு புதிய வகை ட்ரிட்மெண்ட்டை அளித்து வருகிறார்கள். அது கிட்டத்தட்ட 'வாக்ஸின்' போடும் முறையைப் போன்றதுதான். அதாவது, ஒருவருக்கு அலர்ஜியை ஏற்படுத்தும் காரணியைக் கண்டறிந்து அதையே குறைந்த அவரின் உடலுக்குள் செலுத்துவது.



• டாக்டர் ஹரிணி

இந்த முறை மூலம் அந்தக் காரணியானது உடலுக்குள் பிரவேசிக்கையில் இயல்பாகவே நமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகிறது. பிறகு மெள்ள மெள்ள காரணியின் கான்சன்ட்ரேசன் அளவை அதிகரித்து, அலர்ஜிக்கு எதிரான முழு நோய் எதிர்ப்பு சக்தியை உடலில் உண்டாக்குகிறார்கள். ஆனால், இந்த மருத்துவ முறை இதுவரை வெறும் 50 சதவீத வெற்றியையே தந்திருக்கிறது என்பதுதான் இதில வேதனையான விஷயம்.

தும்மலால் உண்டாகும் நோய்கள்

தும்மலை அலட்சியப்படுத்தும் பட்சத்தில் அது பல்வேறு துன்பங்களுக்கு





ப்ரோ டோசிஸ் எனப்படும் கண் வெளித்தள்ளும் நோயை ஏற்படுத்தும். இந் நிலையின் நோயாளி யின் கண்கள் வெளித் தள்ளப்பட்டுவிடும். நினைத்தாலே ஒருவித அச்சத்தை ஏற்படுத்தும் மோசமான நிகழ்வு இது. பாதிப்பு அத்தோடு முடிகிறதா என்றால் அதுதான் இல்லை. மூளை யிலுள்ள மிக முக்கிய பன்னி ரெண்டு நரம்புகள் 'பாதிக்கப் பட்டு 'மூளை நரம்பு செயலிழப்பு' ஏற்படலாம். மேலும், மூளையில் கட்டி, சைனஸ் அறைகளில் வீக்கம் ஏற்பட்டு சீழ் நிறைந்த கட்டி என... கவனிக்காமல் விடப்படும் தும்மலின் இன்னல்களை அடிக்கிக் கொண்டே போகலாம்.

தும்மல் - ஒரு ரெட் சிக்னல்!

வழிவகுத்துவிடும். மெல்ல மெல்ல ஆரம் பித்து அதன் பாதிப்புகள் கட்டுக்கடங் காமல் செல்லும். முதலில் அலர்ஜிக் ரிகினிட்ஸ் எனப்படும் பிரச்னை உண்டா கிறது. அதாவது மூக்கின் உள் சவ்வு பகுதியில் வீக்கம் ஏற்பட்டு மூக்கானது முழுவதுமாக அடைத்துக்கொள்ளும். இதை கவனிக்காமல் விட்டால் அடுத்த நிலையான 'பாலிப்' என்னும் சதை வளர்ச்சியில் கொண்டுபோய் விட்டு விடுகிறது.

இதை அதிகப்படுத்தும் பட்சத்தில் பூஞ்சைக் காளான் தொற்று அபாயம் ஏற் படும். இந்த நிலையை ஒரு நோயாளி எட்டிவிடும் பட்சத்தில் அவரின் இந்த பூஞ்சை காளான் தொற்றானது மெல்ல மெல்ல பரவி, மூளையைத் தாக்கும் பேராபத்து உள்ளது. அத்தோடு நிற்காமல்

தும்மல் அடுத்தவருக்கு பரவுமா?

ஒருவருக்கு தும்மல் இருவகைகளில் ஏற்படலாம். அலர்ஜியால் ஏற்படும் தும்மல் அடுத்தவருக்கு தொற்றாது. தும்மும் நபர் தவிர, இந்த வகையில் மாற்றவருக்கும் பாதிப்பு இல்லை. ஆனால் கவனிக்காமல் விட்டுவிட்டால் பிரச்னை தான். ஆனால் ஜலதோஷம் போன்ற வைரஸால் உண்டாகும் நோய்களின் போது தும்மல் வரும் பட்சத்தில் அது அடுத்தவரை நிச்சயம் பாதிக்கும். ஆனால், இப்படி வைரஸால் உண்டான ஜலதோஷ தும்மலின் ஆயுட்காலம் வெறும் ஏழு நாட்களே.

- வினோ

படங்கள் : **பொள்ளாச்சி சுந்தரம்**



கல்கி



2006 நவம்பர் 12
விய ஐப்பசி 26
மலர் : 65
இதழ் : 15

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்.*

உள்ளாட்சித் தேர்தல் - சங்கிலித் தொடர் தவறுகள்!


சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, கூட்டணி ஆட்சியை அமைப்பதற்குப் பதிலாக மைனாரிட்டி அரசை நிறுவிய மிகப் பெரிய தவறின் தொடர்ச்சியை தமிழக அரசியலில் பார்த்து வருகிறோம். அமைச்சரவையில் ஏற்கப்படாத ஏமாற்றத்திலிருந்து காங்கிரஸ் இன்னும் மீளவேயில்லை.


இந்நிலையில், உள்ளாட்சித் தேர்தல்களில் தி.மு.க. கூட்டணி பிளவுபட்டுப் போகாமல் போட்டியிட்டது. ஆனால், தி.மு.க.வுக்கு ஆதரவு அளித்த கட்சிகள் மனத்தளவில் பிளவுபட்டுவிட்டன என்பதால், தேர்தலின்போதே இடப் பகிர்வில் தகராறு ஏற்பட்டு, போட்டி வேட்பாளர்கள் தோன்றினர். பல இடங்களில் கூட்டணியைப் போலன்றி எதிரெதிர் கட்சிகளைப் போல் பணியாற்றியிருக்கின்றனர், தி.மு.க. கூட்டணியைச் சேர்ந்த கட்சியினர்!

இத்தேர்தலில், ஆளுங்கட்சியினால் வன்முறை தூண்டப்பட்டது என்ற கம்யூனிஸ்டுகளின் புகாரும், தேர்தலுக்குப் பின் நடைபெற்ற ஊராட்சி மன்றத் தலைவர்கள் பதவிக்கான மறைமுகத் தேர்தலில் தாங்கள் புறக்கணிக்கப்பட்டதென்ற பா.ம.க.வின் அதிருப்தியும் கூட்டணியை ஆட்டம் காணச் செய்திருக்கின்றன.

உள்ளாட்சித் தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்வு செய்யும் முறையை, தி.மு.க. தலைமையிலான அரசு மாற்றியதற்கு உள்நோக்கம் இருப்பதாகக் கூறப்படுகிறது. நேரடித் தேர்தலில் அ.தி.மு.க. அணியினர் அதிக அளவில் வெற்றி பெற்றுவிட்டால், அரசுக்குப் பெரிய தர்மசங்கடமும் தலைவலியும் விளையும் என்பதாலேயே மறைமுகத் தேர்வுமுறை கொண்டு வரப்பட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இக்குற்றச்சாட்டை மெய்ப்பிக்கும் விதமாக மட்டுமின்றி,





மேலும் பல குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் விதமாகவும்தான் மறைமுகத் தேர்தலும் நடந்திருக்கிறது. உள்ளாட்சி மன்றத் தலைவரைத் தேர்வு செய்ய வேண்டிய வார்டு உறுப்பினர்கள் கடத்தப்பட்டிருக்கிறார்கள்; மறைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்; குதிரை பேரம் மும்முரமாக நடந்திருக்கிறது. இத்தனைக்கும் பிறகு, அதிக அளவில் தி.மு.க.வினரே மன்றத் தலைவர்களாகத் தேர்வாகியிருப்பதில் என்ன பெருமை இருக்கிறது!

உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரம் வேண்டும், கூடுதல் நிதி வேண்டும் என்று கேட்கிறபோது மட்டும் தி.மு.க.வின் குரல் ஓங்கி ஒலிப்பதில் பயன் என்ன? அந்த அமைப்பையே அர்த்தமற்றதாக்கியிருக்கின்றன - சமீபத்தில் நடந்த உள்ளாட்சித் தேர்தலும், அதைத் தொடர்ந்து நடந்த மன்றத் தலைவர்கள் தேர்தலும்.

மதுரையில் வெற்றி பெற்ற ஒரு பா.ஜ.க. கவுன்சிலரைப் புறக்கணித்துவிட்டு, தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்க, தேர்தல் அதிகாரி வற்புறுத்தப்பட்டிருக்கிறார் என்பது இல.கணேசனின் குற்றச்சாட்டு. தேசியக் கட்சியின் பொறுப்புள்ள தலைவர் ஆதாரமின்றி இவ்வாறு குற்றஞ்சாட்ட வாய்ப்பில்லை. இதற்கு ஆளும் தரப்பிலிருந்து எவ்வித விளக்கமும் இல்லை.

வன்முறையைக் கட்டுப்படுத்தத் தவறியது; உள்ளாட்சித் தேர்தலைப் பற்றிய அறிஞர்கள் கூட்டத்துக்குத் தடை விதித்தது; ஊராட்சி மன்றத் தலைவர் தேர்வு முறையை மாற்றியது; அதன் மூலம் அராஜகமும் குதிரை வியாபாரமும் தழைக்க அனுமதித்தது... சங்கிலித் தொடராக இத்தேர்தலில் நிகழ்ந்த அநீதிகளுக்கு என்ன காரணம் என்று தி.மு.க. தலைமை சிந்திப்பது நல்லது.

பேரம் பேசி பெறப்பெற்ற உள்ளாட்சிப் பதவிகளில் உள்ளவர்கள், செலவழித்த பணத்தைச் சம்பாதிக்கும் முறைகேடான வழிகளில்தான் கவனத்தைச் செலுத்துவார்களே யொழிய, நிர்வாகத்திலோ, மக்கள் குறை தீர்ப்பதிலோ தங்கள் கவனத்தையும் உழைப்பையும் செலுத்தப் போவதில்லை. இதனால் மக்களுக்கு மேலும் ஏமாற்றமே ஏற்பட்டு, தி.மு.க. பேரில் நம்பிக்கை குறைந்து போய்விடும்!

கூட்டணி விரிசல்களை ஒட்டுப்போடுவதா? எதிர்க்கட்சித் தாக்குதல்களைச் சமாளிப்பதா? எதிர்கட்சியாக இயங்கப் போகிற பா.ம.க.வைச் சமாதானப்படுத்துவதா...? தி.மு.க.வின் பிரச்னைகள் பெருகப் பெருக, நிர்வாகமும் மக்கள் பணியுமே மீண்டும் பாதிப்புக்குள்ளாகும். அப்போது, மக்களுக்கு எஞ்சியுள்ள நம்பிக்கையும் விடைபெற்றுக் கொள்ளும். ●

என்றும் முடிவில்லை...!



மன வளர்ச்சி குன்றிய சிறப்புக் குழந்தைகளின் பெற்றோர் இனி நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொள்ளலாம். இக் குழந்தைகள் தம் அறிவுத் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் மென்பொருட்களை உருவாக்கியிருக்கிறார் திருச்சி இந்திராகாந்தி மகளிர் கல்லூரி முதல்வர், பேராசிரியை மீனா. இதன் மூலம், ஒளி மங்கிக் கிடந்த சிறப்புக் குழந்தைகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. கணினி மூலம் அவர்கள் கல்வியறிவு பெற வழிவகுக்கப்பட்டிருக்கிறது.

"கண்களால் பார்க்கும் விஷயங்கள் குழந்தைகள் மனத்தில் எளிதாகப் பதிந்துவிடும். மென்பொருளைப் பயன்படுத்திக் காட்சி வழியாக அவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்துவதுதான் எங்கள் நோக்கம். மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான மொழித்திறன் மதிப்பீட்டு மென்பொருள், மூன்று வயதுக்குட்பட்ட காது கேளாத குழந்தைகளின் மொழித்திறன் அறிய உதவும் மென்பொருள், பச்சிளம் குழந்தைகளின் குறைந்த கணக்கீட்டுத் திறனை அதிகரிக்க உதவும் மென்பொருள், ஆட்டிஸக் குறைபாடுடைய குழந்தைகளின் மொழித்திறனை வளர்க்க கணினி உதவியுடன் அமைக்கப்பட்ட அடிப்படை மென்பொருள், உணர்வாற்றல் சார்ந்த கற்றலில் குறைபாடுடைய குழந்தைகளின் திறனை அறிந்துகொள்ள உதவும் மென்பொருள், மூன்று வயதிலிருந்து ஏழு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் கேட்கும் திறனை இழப்பீடு செய்ய உதவும் மென்பொருள் என்று எங்கள் கல்லூரியின் மென்பொருள் உருவாக்கக் குழுவின் உதவியுடன் கண்டறியப்பட்டுள்ளவை பல.

இவற்றை, சிறப்புக் குழந்தைகளின் பெற்றோர், குறிப்பாக அம்மாக்கள் எவ்விதம் கையாள்வது என்பதற்கான பயிற்சியும் தரப்பட்டுள்ளது. ஏறத்தாழ முப்பது பயிற்சிப் பட்டறைகளை நடத்தியுள்ளோம். ஆயிரத்து ஐந்நூறு குழந்தைகளுக்கு இலவச மென்பொருட்களை வழங்கியுள்ளோம்" என்று கூறும் மீனாவுக்குத் தமிழக அரசு அண்மையில் மரியாதை செய்துள்ளது. அவருக்கு, மகளிர் நலனுக்கான சிறந்த சமூகப் பணியாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.

"என்னை இவ்விருது ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் செயல்படத் தூண்டியுள்ளது. சிறப்புக் குழந்தைகளுக்கான என் பணிகளுக்கு என்றும் முடிவில்லை..." என்கிறார் மீனா.

• விருது பெறும் மீனா...





• மென்பொருள் விநியோக விழாவில்...

செய்தி, சித்திரம்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

ஆங்கிலம் பேசினால் அடி விழ வேண்டும்...

சீறும் சீமான்

'தம்பி' பட வெற்றிக்குப் பிறகு அமைதியாக இருக்கிறார் இயக்குநர் சீமான். தமிழ் ஆர்வம், அரசியல் ஆர்வம் என்று மிக நிதானமான பயணம். மீண்டும் மாதவனையே வைத் துக் களமிறங்கப் போவதாகப் பேச்சு. 'உண்மையா?' என்றால் "ஆமாம்" என்கிறார்.

"விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. 'தம்பி' படம் தந்த புகழைவிட இன்னும் அதிகமாகவே இப்படத்தில் அவர் எதிர்பார்க்கலாம். இதில் காதலை இன்னொரு கோணத்தில் சொல்லியிருக்கிறேன்."

தாய்மொழியில்தான் எல்லோரும் பேச வேண்டும் என்று அடிக்கடி பேசி வருகிறீர்களே... தனியொருவர் சம்பந்தப்பட்ட இவ்விஷயத்தில் சட்டம் போட்டோ, கட்டாயப்படுத்தியோ மாற்றங்களை ஏற்படுத்த முடியுமா?

"மொழி என்பது இனம் சார்ந்த விஷயம். மொழியை இழக்கிறவன், முகவரியற்றவனாகிறான். ரஷ்யாவிலிருந்து பிரிந்துபோன நாடுகளில், பொது இடங்களில் பிறமொழி பேசுபவர்களைக் கண்டு தண்டிக்க ஒரு குழுவே இயங்குகிறது. ஆனால் நம் ஊர்ப் பள்ளிகளில் தாய்மொழியில் பேசினாலே தண்டிக்கிறார்கள். இந்த அவலம் வேறு எங்கும் இல்லை. இங்கிலாந்தில் நின்று கொண்டு தமிழில் பேசுங்கள் என்றால் குற்றம். நம் சொந்த மண்ணில், சொந்த மொழியைப் பேச சட்டம் போடுவது அவலம்தான். முதலில், பிற மொழிகளில் பேசவிட்டது குற்றம். 'பேசினால் அடி விழும்' என்றால் யாரும் பேசியிருக்க மாட்டார்கள்."

ஆங்கிலத்தில் பேசினால் தண்டனை கொடுக்க வேண்டும் என்கிறீர்களா?

"அப்படிச் சொல்லவில்லை. வெள்ளைக்காரனிடம் 'வணக்கம்' சொல்லத் தேவையில்லை. ஆனால் நம் சொந்தங்களிடம் 'குட்மார்னிங்' சொல்ல வேண்டுமா? நம் மொழியை நன்றாகப் படித்துவிட்டு மற்ற மொழிகளையும் கற்றுக்கொள்ளலாம். தமிழை மொழிப் பாடமாக்காமல் விருப்பப் பாடமாக்குவதால்தான் ஆங்கிலம், ஹிந்தி, ஃபிரெஞ்ச், சமஸ்கிருதம் முன்னுக்கு வந்து தமிழ் பின்னுக்குத் தள்ளப்படுகிறது."

தமிழ்த் திரையுலகில் பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாக இருக்கிறதே?

"திரையுலகம் தோன்றிய காலத்திலிருந்தே உள்ள பிரச்னை இது. சினிமாவுக்கு வந்துள்ள எல்லோரும் பணக்காரர்கள் அல்லர்; சாதாரணக் குடும்பத்தில் பிறந்து, இங்கு வந்து போராடிக் கொண்டிருப்பவர்கள். இத்தகையவற்றுக்கு பெண்கள் தயாராக இல்லை. சினிமாக்காரர்கள் என்றாலே நாயை விடக் கேவலமாக, சமூக விரோதிகளைப் போல சமூகம் பார்ப்பதால்தான் தமிழ்ப் பெண்கள் இத்துறைக்கு வருவதில்லை. உலகின் பார்வையிலும் புரிதலிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். அப்போதுதான்

தமிழ்ப் பெண்கள் திரைத்துறைக்கு வருவார்கள்; நிலைப்பார்கள்."

குஷ்பு கற்பு குறித்து கருத்துச் சொன்ன பிரச்னை, அவர் பெண் என்பதால்தான் பெரிதாக்கப்பட்டதா?

"யார் சொன்னாலும் பிரச்னை கண்டனத்துக்குரியதுதான். பெரியாரே சொல்லியிருக்கிறார், 'திரைத்துறையில் உள்ளவர்களை அரசியலில் பயன்படுத்தாதீர்கள். காரணம் அவர்கள் உள்ளத்தில் உள்ளதை உணர்ச்சி வசப்பட்டுக் கொட்டிவிடுவார்கள்' என்று. இது அரசியலுக்கு மட்டுமில்லாமல் எல்லாவற்றுக்கும் பொருந்தும்."

ஆனால் இப்பிரச்னை 'பெரியார்' படம் வரை தொடர வேண்டுமா? இப்போது அவர் சம்பந்தப்பட்ட காட்சிகளை தங்கர்பச்சான் ஒளிப்பதிவு செய்ய மறுத்திருப்பது ஆரோக்கியமாக இல்லையே?

"தந்தை பெரியார் மாபெரும் தலைவர்; புரட்சியாளர். சத்யராஜ் நீண்ட காலமாக அவரின் கொள்கைகளைப் படித்தறிந்தமையால் அவர் நடிக்கும்போது அவருக்குள் பெரியார் தெரிவார். ஆனால் மணியம்மை என்கிற தியாகப் பெண்மணியின் வேடத்துக்கு குஷ்பு எள்ளளவும் பொருந்த மாட்டார். ஆனால் அவர் 'நான்தான் நடிப்பேன்' என்பதும், 'அதை நான் ஒளிப்பதிவு செய்ய மாட்டேன்' என்று தங்கர்பச்சான் கூறுவதும்.... இதில் நான் எந்தக் கருத்தும் சொல்ல விரும்பவில்லை."

பொதுவாகவே திரைத்துறையினர் ஒரு கட்சியைச் சார்ந்திருப்பது ஆரோக்கியமானதா?

"அரசியல் என்பது நமக்கு அப்பாற்பட்டது அன்று. நமக்கான அரசியலை நாம் தீர்மானிக்காமல் வேறு யார் தீர்மானிப்பது! வரிவிலக்குக்கும், திருட்டு வி.சி.டி.க்கும் மட்டும்தான் அரசியல் வேண்டுமா? யோசியுங்கள்..."

- ம. மனோ,

படம் : **பொள்ளாச்சி சுந்தரம்**



புது மேயர்

கிண்டி தொழிற்பேட்டையின் நடுவிலுள்ள தொழிலாளர்கள் காலனியில் இருக்கிறது புதிய சென்னை மேயர் மா.சுப்பிரமணியத்தின் வீடு. தொடர்ச்சியாக மாலை, சால்வைகளுடன் வந்து கொண்டிருப்பவர்களை எந்தவித அலுப்புமில்லாமல் வரவேற்று உபசரிக்கிறார். பேச ஆரம்பித்தால் நொடிக்கொரு முறை 'தளபதி'யைத் தவழ விடுகிறார்.

"1976லிருந்தே நான் கட்சிப் பணிக்கு வந்துட்டேன். சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஆர்.எஸ்.ஸ்ரீதரின் பரிந்துரையின் பேரில் 1987-ல் பகுதி இளைஞரணிச் செயலாளராக நியமிக்கப்பட்டேன். 1992ல் என் உழைப்பை அங்கீகரிக்கும் விதமாக, தென்சென்னை மாவட்ட இளைஞரணி அமைப்பாளராக பதவி உயர்த்தப்பட்டேன். 2002-ல் என்னை மாநிலத் துணைச் செயலாளராக ஆக்கிவிட்டார் தளபதி" என்று பெருமிதத்துடன் பேசிக்கொண்டே போகிறார், தொண்டர்களால் அன்போடு மா.சு. என்றழைக்கப்படும் மேயர்.

சென்னை சைதாப்பேட்டையில்

• மனைவியுடன் மா.சு...





பள்ளிப் படிப்பை முடித்தவரால் கல்லூரிக்குப் போக வசதியில்லை. ஜீவனத்துக்காக கல், மணல், ஜல்லி, ஐஸ்க்ரீம் வியாபாரமெல்லாம் செய்திருக்கிறார். பிறகு கார்மெண்ட்ஸ் நிறுவனமொன்றில் வேலை செய்தபோது, அங்கு தொழிற்சங்கத்தை ஏற்படுத்தி உரிமைக் குரலை எழுப்ப, நிர்வாகத்துடன் மோதல்! அதே நேரத்தில் அங்கே பணிபுரிந்து கொண்டிருந்த காஞ்சனாவைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறார். ஒரே மகன் இளஞ்செழியன், மாஸ்கோவில் மருத்துவம் பயின்று வருகிறார்.

'சென்னை மாநகராட்சியைச் சீராக்க உங்கள் திட்டம் என்ன?' என்றால் மிக ஆர்வமாகப் பேசுகிறார்.

"சென்னையைக் குப்பைகளில்லாத நகரமாக மாற்றுவேன். சுகாதாரத்துக்கு முன்னுரிமை கொடுத்து, கொசு ஒழிப்புத்திட்டம் செயல்படுத்தப்படும். சாலைப் பராமரிப்பு, தெருவிளக்குகள் மீது கவனம் செலுத்தப்படும். தளபதி மேயராக இருக்கும்போதே நான்கு மேம்பாலங்கள் கட்ட மன்ற அனுமதி பெறப்பட்டிருக்கிறது. அந்தப் பாலங்களை விரைவில் கட்டி முடித்துப் போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைப்போம். சொன்னவை குறைவுதான்... சொல்லாமல் செய்யப்போவதுதான் நிறைய...'' என்று கூறும் மா.சு., மேயர் வேட்பாளராகத் தாம் அறிவிக்கப்பட்டவுடன் டாக்டர் ராமதாஸைச் சந்தித்து நகர மேம்பாட்டின் உடனடித் தேவைகள் குறித்து விவாதித்திருக்கிறார்.

"அ.தி.மு.க. ஆட்சியின்போது நான் இரண்டு மாத காலம் மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாதென்று தீர்மானம் நிறைவேற்றிவிட்டார்கள். உயர்நீதி மன்றத்தின் கதவைத் தட்டி, மன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் உரிமையைப் பெற்றேன்."

மாநகராட்சியில் எதிர்கட்சி இல்லாத நிலையில் உங்களால் எப்படி ஆரோக்ய அரசியலைத் தர முடியும்?


"1996ல் தளபதி ஸ்டாலின் மேயராகப் பொறுப்பேற்றபோதுகூட, அ.தி.மு.க. விலிருந்து இருவர் மட்டுமே மன்றத்தில் இருந்தார்கள். இப்போது நாங்கள் தனிப் பெரும்பான்மையாக இருந்தாலும், காங்கிரஸ் மற்றும் பா.ம.க. உறுப்பினர்களின் ஆலோசனைகளைக் கேட்டுச் செயல்படுவோம். தவிர, எதிர்க்கட்சியாக செயல்படத்தான் மீடியா இருக்கிறதே.." என்று இடித்துச் சிரிக்கிறார் மா.சு. பிழைத்துக் கொள்வார்!

சொல்லாததையும் செய்வோம்!



- ப்ரியன்

படம் : ராஜன்



இரண்டாவது இந்தியர்!

"டாடா தொழில் சாம்ராஜ்யத்தின் சரித்திரத்தில் இது ஒரு மகிழ்ச்சியான தருணம்" என்று சந்தோஷப்பட்டிருக்கிறார் ரத்தன் டாடா. சில ஆண்டுகளுக்கு முன்பு ரத்தன் டாடா, 'இந்திய எல்லைகளுக்கு அப்பாலும் டாடா நிறுவனங்களின் சிறகுகள் விரிய வேண்டும் என்பதுதான் என் கனவு' என்று அறிவித்தார். அண்மையில் அந்தக் கனவு நிறைவேறியிருக்கிறது.



* கோரஸ் நிறுவனத்தாருடன் டாடா

ஆம்... பிரிட்டனில் உள்ள கோரஸ் குழுமத்தின் ஆங்கிலோ - டச்சு ஸ்டீல் தொழிற்சாலையினை, டாடா ஸ்டீல் நிறுவனம் வாங்கிவிட்டது. சமீப காலத்தில், அயல்நாட்டு கம்பெனி ஒன்றை இந்திய நிறுவனம் வாங்கியிருப்பது இது இரண்டாவது முறை. பிரபல ஸ்டீல் தொழிலதிபரான லட்சுமி மிட்டல், ஆர்சலர் நிறுவனத்தை முதலில் வாங்கினார்.

உலக ஸ்டீல் உற்பத்தியில் அறுபத்திரண்டாவது இடத்தில் இருந்தது டாடா ஸ்டீல். கோரஸ் நிறுவனம் எட்டாவது இடத்தில் இருந்தது. டாடா ஸ்டீல், கோரசை வாங்கியதன் மூலமாக உலகின் ஆறாவது இடத்துக்கு வந்துவிட்டது. இந்த இரு நிறுவனங்களின் மொத்த உற்பத்தி இனி ஆண்டுக்கு சுமார் இரண்டேகால் கோடி டன்னாக இருக்கும். டாடா ஸ்டீல் நிறுவனம், பிரேசில் உள்ளிட்ட சில நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களுடன் கடுமையாகப் போட்டியிட்டு, வெற்றிகரமாக இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளது.

ஒரு டன் இரும்பு தயாரிக்க, டாடா ஸ்டீல் நிறுவனத்துக்கு ஆகும் செலவைப் போல இரண்டு மடங்கு கோரஸ் நிறுவனத்தில் ஆகிறது. இதனால், டாடா நிர்வாகத்தின் கீழ் வந்தால் தாங்கள் வேலையை இழக்கும்படி நேருமோ என்ற பயம் கோரஸ் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இருந்தது. ஆனால், ரத்தன் டாட்டா 'நாங்கள் ஆட்களைக் குறைப்பதாக இல்லை' என்று எடுத்த எடுப்பிலேயே அறிவித்தது தொழிலாளர்களை நிம்மதிப் பெருமூச்சு விடச் செய்துள்ளது.

"பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் நுழைந்து, பல்வேறு துறைகளிலும் பிரம்மாண்டமான முறையில் வளர்ச்சி கண்டு கொண்டிருக்கும்' இந்தக் கால கட்டத்தில், இந்தியத் தொழில் நிறுவனங்கள், அயல்நாடுகளுக்குச் சென்று தங்களை விரிவுபடுத்திக்கொள்வது, இந்தியத் தொழில்துறை வளர்ச்சிக்கும், இந்தியப் பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மைக்கும் எடுத்துக்காட்டு" என்று பெருமைப்பட்டுள்ளது இந்தியத் தொழில் அமைப்புகளின் சம்மேளனம்.

- மானஸா


SS MUSIC
SING YOUR WAY TO FAME
WIN 6 LAKHS WORTH JEWELLERY
RELIANCE Mobile
SS MUSIC
LAUNCH PAD
Dial 1234200 From Your Reliance Mobile OR Hello Subscribers
Head to the nearest Reliance Mobile Launch Pad Kiosk in your city...
In Chennai – Abirami Mega Mall & Spencer's Music World
In Coimbatore – The Nilgiris Departmental store, Avinashi Road
In Trichy – The Nilgiris Departmental Store, Cantonment
In Madurai – Tornado, Gokale Road
You can also be a part of the show by recording your voice on a CD or Cassette and send it to Southern Spice Music, Po Box 431, Chennai – 5.
Also Log On To www.ssmusic.tv
In Association
veta
FAIR AND TEEN
Pg3 LAWMAN
Orbit




2

என் கடவுள்... என் தோழன்!

ஒரே மந்திரத்தை இருபது லட்சம் தடவைகள் எழுதுவதும், இருநூறு முறைகள் உச்சரிப்பதும், புத்தகத்திலிருந்து நகலெடுப்பதுமாக ஒன்றையே செய்து கொண்டிருப்பார்கள். மடம் ஒன்றில் புதிதாக ஒரு துறவி வந்து சேர்கிறார். வழக்கம் போல் புனிதப் புத்தகத்தைப் பார்த்து அப்படியே பிரதியெடுக்குமாறு அவரிடமும் கூறப்படுகிறது. பிரதிகளையே எல்லோரும் நகலெடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டவர், மடத்தின் தலைமைத் துறவியிடம் சென்று, "ஐயா, எல்லோரும் இப்படியே காப்பியடித்துக் கொண்டிருக்கிறார்களே... நீங்கள் எப்படி இதை அனுமதிக்கிறீர்கள்? ஒரு பிரதியில் ஏதேனும் சின்னத் தவறு இருந்தாலும் அத்தனை பேரும் அதையே இயந்திரத்தனமாய் எழுதிக் கொண்டு போவார்களே? அசல் புத்தகத்தைப் பார்த்து எழுதுவது தானே நல்லது?" என்கிறார். "நூற்றுக் கணக்கான வருஷங்களாக இப்படித்தான் செய்து வந்திருக்கிறோம்... என்றாலும் உன் பேச்சில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது" என்ற தலைமைத் துறவி, மடத்திலுள்ள காப்பகத்துக்குச் சென்று அசல் புத்தகத்தைத் தேடத் துவங்குகிறார். மலையாய்க் குவிந்திருந்த நகல்களுக்கடியில் அசல் நூல் எங்கேயோ புதைந்து கிடந்தது. தலைமைத் துறவிக்காக சீடர்களும் சேர்ந்து தேடத் துவங்குகின்றனர். நிலவறையிலும் இதர இடங்களிலும் தேடி அலைந்து கொண்டிருக்கையில், ஒரு மூலையிலிருந்து விசும்பல் ஒலி கேட்கிறது. தலைமைத் துறவிதான் அழுதுகொண்டிருக்கிறார்... "முட்டாள்களைப் போல் அப்படியே நகலெடுத்துக் கொண்டிருந்தோமே... செலிப்ரேட் (Celebrate) என்ற சொல்லை செலிபேட் (Celebate) என்று யாரோ தவறாக எழுதியதையே இவ்வளவு காலமும் காப்பியடித்திருக்கிறோமே..." என்கிறார் அழுகையினூடே! ஒற்றை எழுத்தைத் தவறாக எழுதி, அதைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றி வந்ததால், வாழ்க்கையைக் கொண்டாடுவதற்குப் (celebrate) பதிலாக, பிரம்மச்சர்யத்தை அனுசரித்து வந்திருக்கிறார்கள்!

இப்படியெல்லாம் கடவுளைப் பல விதங்களில் உருவாக்கி வெளிப்படுத்தியது நாம்தான். எனவே நமக்குத்தான் குழப்பம். கடவுளுக்கு எந்தக் குழப்பமும் இல்லை; அவருக்குப் பிரச்னையும் கிடையாது. கடவுளை உணர, முதலில் நம்மைப் புரிந்துக் கொள்வதில்தான் துவங்க வேண்டும். நம்மை உணராமல் அவரை உணர முடியாது. நமது உடலை எடுத்துக் கொண்டால், அதில் நூறு எலும்புகள்

சுவாமி சுத்தானந்தா





தன்னை அறிதலே ஆத்ம ஞானம்!


இருப்பதாகத்தான் முன்காலத்தில் விஞ்ஞானிகள் நினைத்திருப்பார்கள். பிறகு, நூற்றைம்பது இருக்கலாம் என்ற முடிவுக்கு வந்து, இப்போது இருநூற்று ஆறு எலும்புகள் உள்ளதாகக் கண்டு பிடித்து உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். சரியான எண்ணிக்கையைக் கண்டறிந்ததால் நமது அறிவுதான் வளர்ந்திருக்கிறது. நமது எல்லைதான் விரிந்திருக்கிறதே தவிர, நூறா நூற்றைம்பதா என்ற எண்ணிக்கையைப் பற்றி உடலுக்கு எந்தக் கவலையுமில்லை.

எந்தப் பொருளைக் குறித்தும் நமக்குச் சரியான விழிப்புணர்வு இல்லையென்றால், அதனால் அந்தப் பொருளுக்கு எந்த நஷ்டமுமில்லை; நஷ்டம் நமக்குத் தான். நாம் கற்பது மற்றவர்களுக்காக அல்ல; பெற்றோருக்காகவோ, சமுதாயத்துக்காகவோ அல்ல; நாம் செய்வது முதலில் நமக்காகத்தான் இருக்க வேண்டும்.

சோகம், அழுகை, சுயநலம், அழிவு, இறப்பு, பயம் - என்று நாம் எந்த உணர்வால் தீவிரமாகப் பீடிக்கப்பட்டிருந்தாலும், நம்மால் யாருக்கும் எந்த நல்லதும் செய்ய முடியாது. நமது அறியாமையினால் பொருட்களுக்கோ, உலகத்துக்கோ எந்தப் பாதிப்புமில்லை; கடவுளுக்கும் பாதிப்பில்லை. பாதிப்பு நமக்குத்தான்.


ஆகவே, கடவுளை உணர்வதால் அவருக்கு ஏதோ நன்மை என்றோ, படைப்பை உணர்வதால் படைப்புக்கு நன்மை என்றோ நினைப்பது அர்த்தமில்லாதது.

தண்ணீரில் நீந்துவதற்கு நமக்குத் தெரியவில்லையென்றால், தண்ணீருக்குச் சிக்கல் ஏதுமில்லை. தண்ணீர் மூழ்கிப் போவதில்லை; நாம் தான் மூழ்கிவிடுவோம். நம்மை மூழ்கச் செய்வது தண்ணீரின் வேலையுமல்ல; தண்ணீர் வெறுமே ஓடிக்கொண்டிருக்கிறது. நீந்தப் பழகாத காரணத்தால் நாம்தான் அதனுள் மூழ்குகிறோம். நீச்சல் பழகிவிட்டால், தண்ணீர் ஒரு சுவாரஸ்யமான விளையாட்டு! நெருப்பும் அப்படித் தான்... அதைக் கொண்டு உணவு சமைக்கலாம். அல்லது நம்மையே எரித்துக் கொள்ளலாம். மோட்டார் காரை வைத்துக் கொண்டு சவாரி



கை கொடுப்பாரா?

ஏ.எம்.ரத்னம் தயாரிப்பில் விக்ரம் நடிக்கும் 'பீமா' படம் சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறது. ஏ.எம்.ரத்னம் தயாரிப்பில் வெளிவந்த தெலுங்குப் படமும், விஜய்காந்த் நடித்த 'தர்மபுரி'யும் எதிர்பார்த்த அளவுக்கு லாபத்தைத் தராததால், இப்போது 'பீமா' தயாரிப்புக்குப் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டு, படப்பிடிப்பு நின்றுள்ளது. போதாக்குறைக்கு அதில் நடிப்பவர்களின் கால்ஷீட்டும் இன்னொரு பிரச்னையாம்!



சிக்கலில் மாட்டும் படங்களையெல்லாம் காப்பாற்றி வருபவர் ஆஸ்கார் ரவிச்சந்திரன். இவர் இந்தப் படத்துக்கும் கைகொடுப்பாரா?

- நிலவெழில்

யும் செய்யலாம்; யாரையாவது கடத்தவும் பயன்படுத்தலாம். விமானத்தை எடுத்துக் கொண்டு உலகையே வலம் வரலாம்; அல்லது உலக வர்த்தக மையத்தின் மீது மோதி தாங்கவியலாத அழிவை ஏற்படுத்த லாம். இவை அந்தந்தப் பொருட்களின் கோளாறுகள் அல்ல; மனிதனின் கேடு கெட்ட குணம்தான் இவற்றைக் கொண்டு உலகம் முழுவதையுமே நாசமாக்குகிறது.

நம் உடம்பில் இலட்சக்கணக்கான உயிரணுக்கள் உள்ளன. அவற்றில் ஒன்றைப் புற்றுநோய் தாக்கினாலும், இலட்சோப லட்சம் இதர உயிரணுக் களும் அழிந்து விடும். ஒரே ஒரு ஹிட்லர். ஒரே ஒரு முஸோலினி, ஒரே ஓர் ஒஸாமா பின்லேடன் போதும்... மாபெரும் அழிவை உண்டாக்க! வெளியுலகைப் பற்றி நினைப்பானேன். நமக்குள் இருக்கும் ஒரு பாத்திரமே அழிவைக் கொண்டு வந்துவிடும். தகப்பன், தாய், ஆண், பெண், பணிபுரிபவர்! இன்னாருடைய கணவர், இன்னாருடைய மனைவி, இளைஞன், முதியவர் - இவற்றில் ஏதேனும் ஒரு பாத்திரம், உள்ளுக்குள் இணைந்துள்ள அத்தனை இதர பாத்திரங்களையும் பாதிக்கலாம்.

தன்னை அறிதலும், தன்னை உணர் தலும் கடவுளுக்காக அல்ல. என்னை நானே உணராதவரை, என்னால் கடவு ளையும் உணர முடியாது. அதனால்தான், தாம் யார் என்பதை அர்ஜுனனிடம் முதலில் தெரிவிக்காத கிருஷ்ணர், அர்ஜுனன் யார் என்பதைத்தான் 'த்வம் பத' என்று உணர்த்தினார். நாம் யார் என்ற புரிதலுக்குப் பிறகுதான், கடவுள் யார் - 'தத் பத' - என்பதை உணர முடியும். அதுதான் மிக அழகானது. ஆனால், தெரிந்தோ தெரியாமலோ நாம் ஒவ்வொருவரும் கடவுளைத்தான் தேடு கிறோம். நம்மை உணர முயல்வதே யில்லை. அது ஒரு பிரமிக்கத்தக்க பரி மாணம். ஆனால், வெகு சுலபமானது. எந்த விஷயமுமே கடினமாக இருப்பதற்கு அந்த விஷயம் காரணமல்ல. அதை யாரோ அவ்வளவு கடினமாக ஆக்கி வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, ஈஸ்வர னைப் பற்றிய ஆத்மஞானம், மிக மிகச் சுலபமானது. நாம் அதைப் புரிந்து கொள்ளத் தவறவே முடியாது. ஏனெனில் அது நாமேதான்!

அது எப்படியென்று பார்ப்போம். உங்களிடம் ஒரு கடிகாரத்தைக் காண்பித்து, "இதைப் பாருங்கள்" என்று சொல்லும்போது, உங்கள் கண்ணுக்கு முன்னால் கடிகாரத்தைக் காட்டுகிறேனே தவிர, அதைப் பார்க்கும் திறமையை நானா உங்களுக்குத் தருகிறேன்? பார்க்கும் திறன் உங்களிடம் ஏற்கெனவே இருக் கிறது. "மாங்காயை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்' என்று நான் சொல்வதாக வைத்துக்கொள்ளுங்கள். ஓர் எண்ணத்தை நான் உங்களிடம் ஏற்படுத்துகிறேனே தவிர, உங்கள் உணர்வை நானா வர வழைக்கிறேன்?

உணர்வு தரும் சுகத்தில் நீங்கள் மூழ்கி விட்டால் என்ன நிகழும்...?

(தொடரும்)



உங்களில் பலருக்கு
எஸ்டேட் ஃப்ரெஷ்
ஃபில்டர் காபி
ஒரு மரபாகும்
E/G ESTATE FRESH Coffee
வெகு காலமாக, புதிதாக தயாரிக்கப்பட்ட தரம் வாய்ந்த காபியை உங்கள் விருப்பத்திற்கேற்ற வகையில், உங்கள் ஒவ்வொருவருக்கும் நாங்கள் வழங்கி வருவதை நீங்கள் நன்கறிவீர்கள். மறுக்கவியலாத மற்றும் மிக உயர்ந்த தரத்துடன் எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காபி உற்பத்தி செய்யப்படுவதால், பலகாலமாக எங்கள் வாடிக்கையாளர்களால் அது பெரிதும் விரும்பப்பட்டு வருகிறது. தரத்தை விரும்பும் எங்கள் வாடிக்கையாளர்களின் வசதிக்காக, அவர்களுக்கு அருகாமையில் உள்ள கடைகளில் எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காபி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காலம் காலமாக உங்கள் ஆதரவையே எங்கள் நோக்கமாக கொண்டுள்ள நாங்கள், உங்கள் பகுதி மற்றும் தமிழ்நாடு முழுவதிலும் எங்களது தரம் வாய்ந்த தயாரிப்பான எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காபியை புதிய எழில்மிகு மற்றும் சிறப்பான பேக்கிங்கில் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உங்கள் ஒவ்வொருவரின் நாவின் சுவையை திருப்தி செய்து, நீங்கள் சுவைக்கும் காபியின் மணம் உங்கள் நாவில் நெடுநேரம் நிலைத்திருக்கச் செய்வதே எங்கள் நோக்கமாகும். எனவே உங்கள் அருகாமையிலுள்ள பலசரக்கு கடைக்குச் சென்று, எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காபியை கேட்டு வாங்கிப் பருகி, உங்கள் காபியின் விசேஷ மணம் மற்றும் சுவையை அனுபவித்து மகிழுங்கள்.
இதுபோன்ற நிறைவில்லை வேறெந்த காபியிலும்
COFFEE 85%
CHICORY 15%
E/G ESTATE FRESH Coffee
E/G ESTATE FRESH Coffee
EfG
Estate Foods & Grains
சென்னை மற்றும் தமிழகமெங்கும் வியாபார விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
தொடர்பு கொள்க: Chennai:9841221796, Rest of Tamilnadu: 9486263342

தொடர்கதை

பதற்றம்



துப்பாக்கி முனையில் ஆகாஷ் வெலவெலத்துப் போனான். உடனடியாக வியர்த்தான். குமரனின் உத்தரவுக்குத் தாமதமின்றி பணிந்தான். குறிப்பிட்ட சி.டி.யை உடனே எடுத்துக்கொண்டு வரச் சொல்லி போனில் சொல்லிவிட்டு வைத்ததும் குமரன் தன்னை விட்டுவிடுவான் என்றுதான் எதிர்பார்த்தான்.

மாறாக... 'இப்ப உன்னைச் சுடலாம்! இல்ல?' என்று குமரன் கேட்டதும் மனத்தை மரண பயம் கவ்வியது. கண்கள் இருண்டன. நாக்கு வார்த்தை பேசத் திராணியற்றுச் சிக்கிக் கொண்டது. அவன் கைகள் தாமாகக் கூப்பின.

''இல்லை! என்னைச் சுட்டுடாதே! அதான் கொண்டாரச் சொல்லிட்டேனே குமரன்... கொண்டு வந்து குடுத்துடுவாங்க'' என்று திக்கித் திக்கிப் பேசினான்.

''அதனால நீ செஞ்ச எல்லா தப்புகளும் சரியாயிடுமாடா முட்டாள்?'' என்று வெறியோடு கேட்டான் குமரன்.

"தப்பு! எல்லாமே தப்புதான்!"

"சாகறதுக்கு ஒரு நிமிஷம் முன்னாடிதான் உங்களை மாதிரி ஆளுங்களுக்கெல்லாம் புத்தி வருமா? அநியாயமா எங்க காதலை சதிசெஞ்சு பிரிச்சியே... அது எவ்வளவு பெரிய பாவம்! உடம்பைக் கொல்றதைவிட மனசைக் கொல்றது பெரிய கொடுமைடா!''

"மன்னிப்பு கேட்டுக்கறேன்...''

"இப்ப நீ மன்னிப்பு கேட்டு என்னடா பிரயோஜனம்? ஆனா மன்னிக்கிற மனசு எனக்கு இல்லை. நீ பேசாம செத்துடு!''

சும்மா மிரட்டலுக்காகத்தான் இப்படியெல்லாம் பேசுகிறான் என்று நினைத்துக் கொண்டிருந்த பூஜா, குமரனின் கண்களில் இருந்த தீவிரத்தைப் பார்த்துக் கலவரமடைந்தாள்.

''குமரன்! நோ! வேணாம்'' என்றாள் தீர்மானமாக.

''இல்லை, பூஜா. இவனை விட்டு வைக்கிறது நல்லதில்லை.''

''கொல்றதும் நல்லதில்லை.''

''என்ன பேசறே? அதான் நிரந்தர நிம்மதி!''

''இவன் மேல் இரக்கப்பட்டுக் கொல்ல வேணாம்னு நான் சொல்லலை. உங்க மேல உள்ள அக்கறையாலதான் சொல்

பட்டுக்கோட்டை பிரபாகர்

ம்!

றேன். நீங்க எதுக்குப் பாதிக்கப் படணும் குமரன்? போலீஸ்ல மாட்டிடுவீங்க. வேணாம். உங்க கல்யாணம் நடக்கணும்; நீங்க நல்லா இருக்கணும். இதெல்லாம் யோசிச்சுப் பார்த்துதான் சொல்றேன்."

ஒரு சில விநாடிகள் அமைதியாக ஆகாஷ் மீது வைத்த குறியை மாற்றாமல் நின்றிருந்த குமரன், "ஆகாஷ், உன்னைச் சுடலை!" என்றான்.

"தேங்ஸ்" என்றான் பெருமூச்சுவிட்ட ஆகாஷ்.


"அதுக்காக உன்னை மன்னிச்சிட்டதா அர்த்தம் இல்லை. இன்னொரு தடவை எந்த வகையிலாவது பூஜாவுக்குத் தொந் தரவு கொடுத்தே... அப்போ மன்னிப்பே கிடையாது."

"இல்லை... சத்தியமா இனிமே எந்தத் தொந்தரவும் தர மாட்டேன். பூஜா, நீயும் என்னை மன்னிச்சிடு. அப்போ... நான் புறப்படலாமா?"

"டேய்! என்னை என்ன முட்டாள்னு நினைச்சியா? சி.டி. கைக்கு வரட்டும். நீ அந்த ரூமுக்குள்ளே போ! ம்... போடான்னா!"

ஆகாஷ் அறைக்குள் வந்தான்.

துப்பாக்கி முனையிலேயே அவனை ஒரு நாற்காலியோடு நைலான் கயிறு கொண்டு கைகளை அசைக்க முடியாமல் கட்டிப் போட்ட குமரன், ஒரு துண்டை எடுத்து, அவன் வாயையும் கட்டினான். அவன் சட்டைப் பையிலிருந்து செல் போனை எடுத்துக் கொண்டான்.



"உங்காளு சி.டி.யைக் கொண்டு வந்து ஒப்படைச்சுட்டுப் போற வரைக்கும் இப் படியே இரு. செஞ்ச பாவத்துக்கெல்லாம் எப்படிப் பிராயச்சித்தம் தேடலாம்னு யோசிச்சிட்டே இரு. பொழுது போயிடும்."

குமரன் அந்த அறையை விட்டு வெளியே வந்து கதவை மூடினான்.

இரவு எட்டு மணி சுமாருக்கு அழைப்பு மணி ஒலிக்க, அதற்காகக் காத்திருந்த பூஜா படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை எடுத்து வைத்துவிட்டுச் சென்று கதவைத் திறந்தாள்.

குமரன் உள்ளே வந்தான்.

"ஆகாஷ் ஊருக்குப் போய்ட்டானா, குமரன்?"

"அவன் பெங்களூர் விமானத்துல ஏறி, விமானம் பறந்தப்புறம்தான் புறப்பட் டேன் பூஜா. அந்த சி.டி.யை உடைச்சுப் போட்டுட்டியா?"

"போட்டுட்டேன்."

"விமான நிலையத்துல வெச்சு நிறைய அட்வைஸ் செஞ்சேன். தலையைத் தலையை ஆட்டினான். கொஞ்சூண்டு திருந்தின மாதிரி தெரியுது. ஆனால் நம்பறதுக்கில்லை."

"முக்கியமான பிரச்னைலேர்ந்து என்னை மீட்டுட்டீங்க குமரன். இனிமே எதை வெச்சியும் அவன் என்னை மிரட்ட முடியாது. அவன் திருந்தினா என்ன, திருந்தலைன்னா என்ன? எங்கிட்ட வம்பு பண்ண வேலை இல்லை!"

"சொல்ல முடியாது பூஜா. அடிபட்ட பாம்பு! பழி வாங்கணும்னு ஒரு துடிப்பு இருக்கும். அதனால நான் சொல்ற மாதிரி நீ நடந்துக்கணும்."

"என்ன செய்யணும், குமரன்?"

"முதல்ல உன் செல்போன் நம்பரை மாத்திடணும். இதோ... ஒரு புது சிம் கார்டு என் பேர்ல போட்டு வாங்கிட்டு வந்திருக்கேன். கொண்டா, இப்பவே

மாத்திடலாம்."

சோபாவில் அமர்ந்து அவள் போனை வாங்கி அதில் உள்ள சிம் கார்டை நீக்கி, தான் வாங்கி வந்ததைப் பொருத்தி அதை ஆக்டிவேட் செய்தான்.

"இந்த நம்பர் உனக்கும், எனக்கும் தவிர வேற யாருக்கும் தெரிய வேணாம். உன் குடும்பத்துக்குக்கூட கொடுக்க வேண்டாம்."

"என் குடும்பம்னு இப்ப யாரும் இல்ல, குமரன்."

"அடுத்து... அடையாறுல உள்ள கஸ்தூரிபா பெண்கள் விடுதிங்கற வொர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டல்ல வர்றப்ப பணம் கட்டிட்டு வந்துட்டேன். உனக்கு ஒரு தனி ரூம் ஒதுக்கித் தந்திருக்காங்க. இங்கேர்ந்து பக்கம்தான். ஒரு மணி நேரத்துல இங்கே இருக்கிற எல்லாத்தையும் மூட்டை கட்டிட்டுப் புறப்படு. உன்னை அந்த ஹாஸ்டல்ல விட்டுட்டு அதுக்கப்புறம் நான் பாண்டிச்சேரிக்குப் புறப்படறேன். அந்த அட்ரஸையும் யாருக்கும் தராதே..."

"சரி..."

"அப்புறம்... இப்ப நீ எந்த ஆபீஸ்ல வேலை பாக்கறேன்னு ஆகாஷுக்குத் தெரியுமா?"

"தெரியும்."

"அப்போ நாளைக்கே அந்த வேலையை ராஜினமா பண்ணிடு. உடனே வேற வேலை தேடிக்கோ. உன் அழகுக்கும் படிப்புக்கும் சிரமமே இல்லாம வேலை கிடைச்சிடும். முடியலைன்னா சொல்லு... போன்ல பேசியே பத்து வேலை வாங்கித் தர என்னால முடியும்."

"இல்ல... நானே பாத்துக்கறேன்."


"அப்புறம்... உன் டைவோர்ஸ் கேசை நடத்துற வக்கீலுக்குக்கூட உன் போன் நம்பர், அட்ரஸ் சொல்ல வேணாம். இந்த வீட்டை காலி பண்ணிக் கணக்கு செட்டில் பண்ணிடு. இந்தா... செலவுக்கு உனக்குப் பணம் தேவைப்படலாம்..."

பர்ஸிலிருந்து எடுத்து, பத்து ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை எண்ணி அவளிடம் நீட்டியபோது, அதுவரை உணர்ச்சிகரமாக நின்றுகொண்டிருந்த பூஜாவின் கண்கள் உடைப்பெடுத்துக் கொண்டன.

"போதும் குமரன்! யோசிச்சு யோசிச்சு இவ்வளவு செய்றீங்களே! இப்படி அன்பாலயே அடிக்கிறீங்களே! உங்களுக்குத் துரோகம் செஞ்ச எனக்கு இவ்வளவு பிரியத்துக்கு என்ன தகுதி இருக்கு?"

அருகில் வந்து அவள் கைகளில் பணத்தைத் திணித்த குமரன், "சுய இரக்கம் போதும்! என் முதல் காதலிங்கிற தகுதி உனக்கு இருக்கு. இன்றைய தோழிங்கற தகுதி இருக்கு. நான் நல்லா இருக்கணும்னு ஆசைப்படற ஒரு வெல் விஷர்ங்கிற தகுதி இருக்கு. போதாதா? லேட் பண்ணாம எல்லாத்தையும் பேக் பண்ணலாம். வா, நானும் ஹெல்ப் பண்றேன்" என்றான்.

கண்ணீரைத் துடைத்துக்கொண்ட பூஜா அவனைப் பெருமையாகப் பார்த்தாள்.



"நீங்க ஒரு பல் டாக்டரா...?"
"இல்லீங்க... முப்பத்திரண்டு பல்லுக்கும் நான்தான் டாக்டர்!"
- 'குலசை' க.மீ. நஜ்முதீன்

வியாழக்கிழமை.

குமரன் - மஞ்சரி ஜோடியின் திருமணம் நடைபெற இருக்கும் வெள்ளிக்கு முதல் நாள்.

மஞ்சரி, அவள் அண்ணன், அண்ணி மற்றும் முப்பது, நாற்பது உறவினர்கள் பஸ் பிடித்து வந்திறங்கி, திருமண மண்டபத்துக்குப் பக்கத்திலேயே இருந்த பெரிய ஹோட்டல் அறைகளில் தங்கியிருந்தார்கள்.

முழுவதும் குளிரூட்டப்பட்ட திருமண மண்டபம், மறுநாள் காலை முகூர்த்தம் மற்றும் மாலை வரவேற்பு நிகழ்ச்சிகளுக்காகத் தயாராகிக் கொண்டிருந்தது.

மேடை அலங்காரத்துக்கான பூ வேலைகளை, தரையில் அமர்ந்து பத்துப் பேர் பார்த்துக் கொண்டிருக்க... ஜிகினா தோரணங்களை மண்டபம் பூராவும் கட்டிக் கொண்டிருந்தார்கள். ஓர் அறைக்குள் கேஸ் சிலிண்டர் வைத்து வண்ண வண்ண வட்ட பலூன்களில் காற்றடைத்துக் கட்டிக்கொண்டிருக்க... மண்டபத்தின் வெளிப்புற முகப்பில் எலெக்ட்ரீஷியன்கள் பல்ப் தோரணங்களைப் பொருத்திக் கொண்டிருந்தார்கள். சமையற்கட்டில் வெளியூர் கோஷ்டி வந்து இறங்கி மளிகை சாமான்களைப் பிரித்து வைத்து, காய்கறிகள் கழுவத் துவங்கியிருந்தார்கள்.


மண்டபத்தின் விசாலமான ஹாலின் ஓரத்தில், நாளைக்கு வரிசை வரிசையாக ஆக்ரமிக்கப் போகிற நாற்காலிகள் அடுக்கடுக்காகக் காத்திருக்க... அதிலிருந்து இரண்டு நாற்காலிகளை உருவி எடுத்துப் போட்ட குமரன், ''உக்காரு, பத்ரி'' என்றான். அவனும் அமர்ந்தான்.

பத்ரி அமர்ந்து கைகளைக் கட்டிக் கொண்டு அவன் முகத்தையே பார்த்தான்.

"ரொம்ப ஆச்சரியமா இருக்கு, குமரன். சினிமால வர்ற மாதிரி என்னென்னவோ காரியமெல்லாம் செஞ்சிட்டு வந்திருக்கியே..."

''பத்ரி, இப்பல்லாம சினிமால கற்பனைப் பஞ்சம் வந்துடுச்சுன்னுதானே எல்லாரும் சொல்றாங்க. ஆனா வாழ்க்கைல சம்பவங்களுக்கு எப்பவுமே பஞ்சம் இல்ல! அந்த ராஸ்கல் ஒரு சினிமா வில்லன் மாதிரி நடந்துக்கறப்ப... பதிலுக்கு மிரட்டி, உருட்டி அதே மாதிரிதானே நடந்துக்க வேண்டியிருக்கு...''

"செஞ்சது தப்புன்னு சொல்லலை; சரியான்னும் தெரியலை. ஆனா... பூஜாவுக்கு இடம் மாத்தினது, போன் நம்பர் மாத்தினது இதெல்லாம் புத்திசாலித்தனமான வேலைதான்! சரி, அதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். கல்யாணப் பொண்ணு ஊர்லேர்ந்து வந்தாச்சில்ல... மாப்பிள்ளை போய்ப் பார்த்துப் பேசணும்னு விரும்பலையா?''



''சிரசாசனம் செய்வதின் மூலம் என்ன தெரிஞ்சுக்கிட்டே?''
''எல்லாம் தலைகீழாய்த் தெரியும்னு புரிஞ்சுக்கிட்டேன்!''
– சி. இராமலிங்கம்

அமைதியாக இருந்தான் குமரன்.

"என்னாச்சு குமரன்?''

"பத்ரி, நேத்து அம்மா, அப்பாவோட குலதெய்வம் கோயிலுக்குப் போயிருந்தோமில்லையா... சாமி பாதத்துல பத்திரிகை வெச்சு எடுத்தாங்க. அப்ப அந்த நிமிஷம் கூட என் மனசுல ஒரு தடுமாற்றம் வந்துச்சு பத்ரி. அங்கேயே வெச்சு பூஜாவைப் பத்தின எல்லாத்தையும் சொல்லிடலாமான்னு ஒரு நினைப்பு ஏற்பட்டுச்சு. சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக்கிட்டேன்.''

''இந்தத் தடுமாற்றம் நாளைக்குக் காலைல மஞ்சரி கழுத்துல தாலி கட்ற வரைக்கும் இருக்கத்தான் செய்யும் குமரன். பூஜா இனிமே என் தோழிதான்னு மனசுல தீர்மானமா நீ நிச்சயம் செஞ்சுட்டதால இதுக்கெல்லாம் கலங்க வேணாம்.''

''பத்ரி... எனக்கென்னவோ மனசு பதற்றமாவே இருக்கு. நாளைக்கு இந்தக் கல்யாணம் நல்லபடியா நடக்குமில்லையா?'' என்றான் குமரன்.

"தேவையில்லாம மனசைப் போட்டுக் குழப்பிக்காதே! எல்லாம் நல்லபடியா நடக்கும்'' என்றான் பத்ரி.

"நடக்கக் கூடாது! என்றான் ஆகாஷ்- தன்னெதிரில் நின்றவனைப் பார்த்து.

(தொடரும்)

ஜகி வாசுதேவின் சென்ற வார பேட்டி தொடர்கிறது...



உங்கள் யோகாவும் தியானமும் மனிதனை எப்படி மேம்படுத்துகின்றன?

"மரம், செடி, கொடி, மனிதன் என்று எல்லாவற்றிலும் உயிர் இருக்கு. இதைப் புரியவைக்கத்தான் ஈஷா மையத்தைத் துவக்கினோம். கிரகிக்கிற தன்மை அதிகமானால்தான், புரிஞ்சுக்கிற, பார்க்கிற தன்மை பிரதியட்சமாக இருக்கும். நாம் இருவரும் தனித்தனி மனிதர்கள். யதார்த்தமா ஒன்றாக முடியாது. ஆனால் இதையும் தாண்டிப் பார்த்தா, இந்த மண்ணுக்கும், உடம்புக்கும் வேறுபாடு இல்லை என்று உணரத் துவங்குவீர்கள். இதைப் புரிந்துகொள்வதற்கு கிரகிக்கிற தன்மையை அதிகப்படுத்தணும். அந்த அனுபவம் கிடைக்கும்போது எதை நாம் விட வேண்டும் என்று நினைக்கிறோமோ, அது 'நாம்'தான் என்று உணரத் துவங்குகிறோம். இந்த நிலையில் வாழும்போது, மனிதன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற ஒரு அடிப்படையான மாற்றம் வந்துவிடும். அடிப்படையில் 'யோகா' என்றால் இதுதான் அர்த்தம். 'யோகா' என்பது பயிற்சியல்ல... எல்லாமே ஒன்றுதான் என்பது அதன் பொருள். நம் 'அனுபவத்தில்' எல்லாமே ஒன்றாகத்தான் இருக்கு. ஒரே சக்திதான்; பலவிதமாக வெளிப்படுகிறது. இதைத்தான் விஞ்ஞானமும் சொல்கிறது.



படம்: ஸ்ரீஹரி

"எல்லாமே ஒன்றுதான்!"

தியானத்துக்கு கடவுள் பக்தி அவசியமா?

"பக்திக்கும் தியானத்துக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. தொழில் நுட்பமாகத் துவங்கிய ஒன்று, ஒரு பொதுக் கருத்தாகப் போய்விட்டது. ஒவ்வொரு மனிதனும் தன்னை மேம்படுத்திக் கொள்ளணும் என்றால், நான்கு வழிகள்தான் இருக்கு. உடம்பைக் கையாண்டு ஒரு நோக்கமாகப் போக முடியும். இதைக் கர்ம யோகா என்று சொல்லுகிறோம். மனசு - புத்திக் கூர்மையைக் கையாண்டால் அது ஞான யோகா. இதே உணர்வுபூர்வமா போனால் பக்தி யோகா. அடிப்படையான உயிர்ச் சக்தியைப் பயன்படுத்தினால் கிரியா யோகா. மனிதனை உய்விக்க இந்த நான்கு வழிகள்தான். ஆனால் தனித்தனியாக இந்தப் பாதையில் பயணம் செய்ய முடியுமா? நீங்கள் வெறும் உடலா; மனமா? உணர்வா? இல்லை வெறும் சக்தியா? நான்கும் சேர்ந்துதான் மனிதனாக இருக்கிறீர்கள். எனவே இந்த நான்கு விதமான யோகாக்களும் மனிதனுக்குத் தேவை. அது எந்த அளவுக்கு ஒவ்வொரு மனிதனுக்கும் தேவை என்பதைக் கண்டறியணும். மனிதனுக்கு மனிதன் இது வித்தியாசப்படும். இந்த இடத்தில்தான் ஒவ்வொரு மனிதனுக்கும் குரு அவசியமாகிறார். அவரால்தான் ஒரு மனிதனுக்கு எந்தவிதமான யோகா தேவை என்று தீர்மானிக்க முடியும்."

உடல், மனம் சம்பந்தப்பட்ட எல்லாப் பிரச்னைகளுக்கும் தியானம் தீர்வாகிவிடுமா?

"மனிதன் தம்முடைய ஆற்றலையும், சக்தியையும் முழுமையாக உபயோகப்படுத்த முயன்றால், அதற்கு நூறு தடைகள் இருக்கு. 'உள்' போராட்டத்தை ஒடுக்கத்தான் தியானம். அப்படி ஒடுக்கிவிட்டால் முழுச் சக்தியை உபயோகப்படுத்தலாம்."

- ப்ரியன்

தயங்கும் உணர்வுகள்... தளும்பும் கனவுகள்!

முருகா - அந்த டைட்டிலே நம் தோள்மீது கைபோட்டுப் பேசுவதுபோல் இருக்கிறது. "படமும் அப்படித்தான் இருக்கும்" என்கிறார் புதுமுக இயக்குனர் ஆர்.டி.நேசன். கோடம்பாக்கத்தில் கொடி நாட்ட வந்திருக்கும் இளமை ஆர்.டி.எக்ஸ்.

"இந்தப் படத்தோட தயாரிப்பாளர் ராம்செந்தில், கேமராமேன் பத்மேஷ், நான் மூணு பேரும் ஒரு கூட்டுப் பறவைங்க. ஃபிலிம் இன்ஸ்டிடியூட்ல ஒண்ணாப் படிச்சு வாழ்க்கைய ஆரம்பிச்சவங்க. அனுபவப் பாடமும் தேவைன்னு உணர்ந்து, எங்களைத் தகுதிப்படுத்திக்கிற வரைக்கும் உதவியாளரா வேலை செஞ்சோம். நம்பிக்கை மனசுல அழுத்தமா விழுந்ததும் இதோ கௌம்பிட்டோம்... புதிய பாதை வகுக்க" என்று பேசும் நேசனின் கண்கள் முழுக்கத் தளும்புகின்றன சாதிக்கத் துடிக்கும் கனவுகள்.

'கதை என்ன?' என்றால், டிசைன் டிசைனாகக் கையாலேயே ஆங்கிள் அமைத்து வீடு கட்டுகிறார். "காதல்தான் பாஸ் என்னைக்கும் எவர்க்ரீன் சப்ஜெக்ட். அதுதான் 'முருகா'வோட பேஸும். ஆனா என் காதலன் ரொம்ப வித்தியாசமானவன். சந்தர்ப்பம்தான் அவனைப் பண்படுத்துது; பக்குவப்படுத்துது; பரவசப்படுத்துது. அவனோட தயக்க உணர்வுகளைத் தடுமாற்றமில்லாம சொல்லியிருக்கோம். புதுமுக நாயகன் அஷோக், திருவையாற்றுக்காரர். ரொம்ப யதார்த்தமா நடிச்சிருக்கார். நடனத்துல பின்னி எடுத்திருக்கார். இன்னைக்குத் திரையுலகம் போட்டி நிறைஞ்சதா இருக்குங்கறதை நல்லா உள்வாங்கிட்டு அசத்தியிருக்கார். கதாநாயகியா ஸ்ருதி சர்மாங்கற பொண்ணு. நம்ம சமீக்ஷாவுக்கும் இதுல நல்ல ரோல்."



'முருகான்ற டைட்டில்ல ஆன்மிக வாசம் வீசுதே?'

"இது ஆன்மிகப் படமில்ல. அன்பைச் சொல்ற படம். எல்லாரையும் எளிமையா சென்றடையணும்ங்கிறதுக்காகத்தான் அப்படியொரு டைட்டில். படம் வந்தப்புறம் பாருங்க, அதோட மகத்துவம் புரியும்."

இராமேஸ்வரம், சென்னையில் படப்பிடிப்பு நடத்தப்பட்டு, நவம்பரில் திரைக்கு வரத் தயாராக இருக்கும் இப்படத்தை சுவை குன்றாமல் கொடுத்திருப்பதாகக் கூறுகிறார் நேசன். ஆல் தி பெஸ்ட் முருகா!

- நிலவெழில்




* ஸ்ருதி சர்மா - அசோக்

ஐ.நா.வைத்

சூடான் அரசு தங்கள் நாட்டில் உள்ள ஐ.நா. சிறப்புத் தூதரை வெளியேற்றியது உலக அரங்கில் பரபரப்புச் செய்தியாகியிருக்கிறது. சூடானின் ஐ.நா. தூதர் ஜான் ப்ராங்க், தமது வலைத் தளத்தில் டார்ஃபர் பிரச்னையைக் குறித்து எழுதியதுதான் வெளியேற்றத்துக்கான பிள்ளையார் சுழி.

'டார்ஃபர் மோதலில் சூடான் இராணுவம் புரட்சியாளர்களிடம் இரண்டுமுறை தோல்வியைச் சந்தித்தது' என்று அவர் கருத்துத் தெரிவித்ததால் சூடான் அரசு சூடானதைத் தொடர்ந்துதான் இந்த வெளியேற்றம்!



● ஜான் ப்ராங்க்

''இராணுவத்துக்கும் அரசுக்கும் எதிரான உணர்வுகளை அவர் வெளிப்படுத்துகிறார். அவரை வெளியேற்றியது நியாயம்தான்'' என்கிறது சூடான்.

ஐ.நா. திகைத்துப் போயிருக்கிறது. தமது அமைதிப்படையை டார்ஃபர் பகுதியில் அனுமதிக்க வேண்டுமென்று சூடான் அரசை அது கேட்டிருந்த நிலையில், இந்த வெளியேற்றம் நடைபெற்றது ஐ.நா.வுக்குச் சங்கடத்தைத் தந்திருக்கிறது.

சூடானின் வடக்கில் உள்ளது டார்ஃபர் பகுதி. இங்கு இரண்டு புரட்சி இயக்கங்கள் தீவிரமாக இயங்கி வருகின்றன. அவை 'ஜெம்' (JEM) எனப்படும் சமநீதி இயக்கம் மற்றும் சூடான் விடுதலை இராணுவம் (SLA).

1978-ல் கடும் பஞ்சம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அரேபியர்களுடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது சூடான். இதைத் தொடர்ந்து சத்தம் போடாமல் சூடான் அரசு ஆப்ரிக்கர்களிடமிருந்து ஆயுதத் தளவாடங்களைப் பறித்து, அவற்றை அரபு நாட்டவரிடம் அளித்தது. இதைப் போன்ற செயல்கள் தங்களுக்கெதிராகத் தொடுக்கப்படும் போருக்குச் சமம் என்று கருதினார்கள் ஆப்ரிக்காவிலுள்ள விவசாயிகள்.

1989-ல் சூடான் அரசு கவிழ்க்கப்பட்டது. புரட்சிக்குத் தலைமை தாங்கியவர் துராபி. பின்னர் அவர் சூடானின் பிரதமரானார். 1991-ல் அவர் அரேபிய இஸ்லாமிய மாநாடு ஒன்றை நடத்தி, அதற்குத் தலைமை தாங்கினார். தமது ஆட்சிக் காலத்தில் சூடானின் (டார்ஃபர் உள்ளிட்ட) எல்லைப் பகுதிகளில் வசித்தவர்களுக்குக் கணிசமான அரசுப் பதவிகளை அளித்தார்.

துராபிக்கும், ஜனாதிபதி அல் பஷீருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. 1999-ல் ஜனாதிபதியின் அதிகாரங்களை துராபி குறைக்க முயன்றனர். உடனே பஷீர் நாடாளுமன்றத்தைக் கலைத்தார்; அவசர நிலையைப் பிரகடனம் செய்தார். துராபி ஆதரவாளர்களின் பதவிகள் பறிக்கப்பட்டன. டார்ஃபர் பகுதியைச் சேர்ந்த ஆப்ரிக்க முஸ்லிம்கள் இதனால் கடும் கோபமடைந்தனர். அரேபியர்களுக்கு முக்கிய பதவிகள் அளிக்கப்பட்டதால் மேலும் கோபம் அதிகமானது.

இப்படி வெளியேற்றப்பட்ட ஆப்ரிக்க முஸ்லிம்களால் உருவான இயக்கம்தான் 'ஜெம்.'

ஜி.எஸ்.எஸ்.



துரத்திய சூடான்!

சூடான் விடுதலை இராணுவத்தின் குறிக்கோள்களில் ஒன்று ஒன்றிணைந்த ஜனநாயக சூடானை உருவாக்குவது; இரண்டாவது அதற்கான போராட்டத்தை டார்ஃபர் பகுதியிலிருந்து நடத்துவது.

வேறுபட்ட பின்னணிகளைக் கொண்ட இந்த இரண்டு இயக்கங்களும் இப்போது ஓரணியில். காரணம், பொது எதிரியாக அரசும் இராணுவமும் இருப்பதுதான். இராணுவத்தால் புரட்சியை ஒடுக்க முடியவில்லை என்பதே உண்மை. பல இராணுவத் தளபதிகள் பதவி நீக்கம் செய்யப் பட்டனர்.

அதேசமயம் போராட்டக் குழுக்களிடையேயும் கருத்து வேறுபாடுகள் வலுத்து வருகின்றன. பலசாலி நீயா, நானா என்கிற மோதல்.

இந்த நிலையில் ஐ.நா. அமைதிப் படையின் சமாதான முயற்சிகளை ஏற்க பெரும்பான்மையான டார்ஃபர் புரட்சிக்குழுக்கள் ஒப்புக் கொண்டன. ஆனால் சூடான் அரசு ஒப்புக் கொள்ளவில்லை. "மேற்கத்திய காலனி ஆதிக்கத்தைப் போன்றதுதான் ஐ.நா.வின் அமைதிப்படை தலையீடும்'' என்றார், சூடானின் ஜனாதிபதி ஓமர் அல் பஷீர். அதோடு நிற்காமல் தமது தனிப்பட்ட கருத்தாக ''அவர்களுக்கெதிராக ஜிஹாத்' (புனிதப் போர்) நடத்துவதிலும் தவறில்லை'' என்று சூளுரைத்திருக்கிறார். ஜனாதிபதி இவ்வளவு தூரம் உணர்ச்சிவசப்பட இன்னொரு காரணம், சூடானுக்கும் அதன் அண்டை நாடான 'சாட்'டுக்குமிடையே பகைமை என்றும் 'சாட்' நாட்டின் புரட்சியாளர்களை சூடான் அரசு பயன்படுத்துகிறது என்றும் ஐ.நா. தூதர் குறிப்பிட்டுள்ளதுதான்!

''எங்கள் தூதர் வலைத்தளத்தில் வெளியிட்டது அவரது தனிப்பட்ட கருத்து'' என்று அறிவித்திருக்கிறது ஐ.நா. சபை. இருந்தும் பலன் பூஜ்யம் தான்!



வாடாத மல்லிகை!

திரைப்படத்தில் யதார்த்தம் கூடிவர வேண்டுமானால் பாடல்களைத் தவிர்ப்பது நல்லது என்கிற கருத்து பலகாலமாகப் பலராலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால், அக்கருத்து ஜனரஞ்சக ரசனையை முன் வைத்தும், பாடலால் உருவான தமிழ் மரபை உத்தேசித்தும் நடைமுறைக்கு வருவது இயலாத நிலை. பாடல்கள் திரைப்படத்துக்குப் பலமா? பலவீனமா? யதார்த்த வகைப் படங்களுக்குத் தேவையா? தேவையில்லையா? என்பன போன்ற விவாதங்கள் ஒருபுறமிருக்க, 'படங்களில் பாடல்கள் இல்லாமலிருந்தால் பாதகமில்லை' என்று எழுதியவர் ச.து.சு. யோகியார்.

திரைத்துறையோடு நெருங்கிய தொடர்பும் பங்களிப்பும் செய்த யோகியார், புதுமைக் கவி என்று புகழப்படுபவர். ஆங்கிலம், ஹிந்துஸ்தானி, அரபி, உருது, பார்ஸி ஆகிய மொழிகளில் பாண்டித்யம் உடையவர். இவருடைய 'தமிழ்க் குமரி' கவிதைத் தொகுப்பை வாசிக்க நேர்ந்த யாரும் இவரைவிட சிறந்த கவிஞர் இல்லையென சொல்லும் விதமாக அமைந்த அற்புதக் கவிதைகளை யாத்திருப்பவர். திரைப்பாடல்களைக் குறித்து அவர் கொண்டிருந்த அபிப்ராயம் வேறுவிதமானது.

1939-ல் வெளிவந்த 'அதிர்ஷ்டம்' திரைப்படத்தில் ஏழைப் பெண் பாடுவதாக ஒரு பாடல். வாழ்வியல் நெருக்கடியை விவரிக்கக் கற்பனை தேவையில்லை. கனிந்த மனதும் காட்சியை உணர்வுதளத்தோடு பொருத்துகிற சாதுர்யமும் இணைந்தால் போதும். இதில் யோகியார் தனித்துத் தெரிபவர். இவருடைய கவிதைத் தொகுப்புகளில் அத்தகைய சாட்சியங்களை நிறைத்து வைத்திருப்பவர். சர்ரியலிசம், சிம்பாலிசம் என்னும் இயக்கங்களின் தோற்றுவாயாக விளங்கிய பிரெஞ்சுக் கவிஞர் சார்லஸ் போதலேர் (1821-1867), கலையைக் கலைக்காகச் சமர்ப்பித்த கருணையாளன்.

'சாவே!
தெய்வீகப் பெரும் புகழே!
தேடலுக்குப்
புலப்படாத
கற்பனைக் களஞ்சியமே
ஏழை விரும்பும்போது
எடுத்துச் செலவிடும்
பரம்பரைச் சொத்தே!
புரிந்துகொள்ள
முடியாத
வானுலகின் வாயிற்
கதவே!' என்று போதலேர் எழுதிய வரிக்கும் யோகியார் 'அதிர்ஷ்டம்' திரைப்படத்தில் எழுதிய வரிக்கும் உள்ள பொருத்தத்தை நுண்ணுணர்வுமிக்கவர்கள் உணரக்கூடும். வறுமையின் நாற்காலியில் அமர்ந்திருக்கிற ஏழைகள், அதைவிட்டு எழ முடியாமல் அதிலேயே மரணித்துவிடத் துடிக்கும் நிலையை,

'ஐயா சிறுபெண்
ஏழை என்பால்
மனமிரங்காதா - ஐயா
மனமிரங்காதா - உம்
மனமிரங்காதா?
அந்தோ
வயிறு வாடுதுங்க
சாவு வராதா - தெய்வம்
சோறு தராதா?' என்று குமைந்திருப்பார்.

அப்படத்தில் கதை, வசனம், பாடல், இயக்கம் ஆகிய பொறுப்பையும் யோகியார் ஏற்றிருந்தார். எதிலும் புதுமையைத் திணிக்காமல், இயல்

யுகபாரதி



பாகவே அவரிடமிருந்து வெளிப்பட்ட மாற்றுச் சிந்தை மனத்தைக் கவரும். ஒருமுறை எம்.ஜி.ஆர். யோகியாரைப் பற்றி நினைவு கூர்கையில், அவருடைய வசன நடையைக் குறித்து தாம் கொண்டிருந்த எண்ணத்தைத் தெரிவித்தார்.

'வாருங்கள், தாங்கள் எவ்விடம் செல்ல இருக்கிறீர்கள்?' என்பது மாதிரி பேசிக்கொண்டிருந்த தமி திரை வசனத்தை 'வாங்க, எங்க (றீங்க?' என்று மக்கள் நடைக்கு மா மறியவர் சா.து.சு.யோகியார். ஆரம்பத்தில் இவருடைய வசனத்தைக் கேட்டுச் சிரித்த நாங்கள், பின்னாளில் அதுவே சரியான வசனமென ஏற்கும்படியாயிற்று' என்றார்.

1936-ல் வெளிவந்த 'இரு சகோதரர்கள்', 37-ல் வெளிவந்த 'பக்த அருணகிரி' ஆகி ங்களுக்குப் பாடல், க

இயக்கம் செய்த யோகியார், நான்காவது படிவம் படிக்கும்போதே தேசபக்தி கீதம் வெளியிட்டு 'பாலபாரதி' எனும் அடைமொழியைப் பெற்றவர். புதுமைப் பித்தன் அடியெடுத்துக் கொடுக்க, அற்புதமான கவிதைகளை மனத்தில் தைக்கும்படி பாடுபவர் எனப் புகழப்படும் இவருக்கு யோகம், சாஸ்திரம், மேஜிக் ஆகிய கலைகளிலும் ஆர்வம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இவருடைய கம்யூனிச எதிர்ப்புக் கவிதைகளான 'கம்யூனிசத் தெம்மாங்கை' அவரே பாடக்





• ச.து.சு.யோகியார்

கேட்பது தனி அனுபவமாக அமையும் என்கிறார்கள்.

'பாடு நீ என்பார்
எங்ஙனம்
பாடுவேன்?
உண்மை அறிந்திலர்
உலகத்து மக்கள்
பாடும் குரல் நான்;
பாடுபவள் காளி:
அன்னையே நின்னுடைய
யமுதக் கவிதைக்
கடலில் யானொரு
சிறுநுரை கலக்கம்' எனத் தம் கவிதைச் செயல்பாட்டைப் பற்றி மொழிந்த யோகியார், திருமந்திரத்தில் ஆய்வுசெய்து அன்றைய அரசிடம் ரூ.2,000/- பரிசு பெற்றவர். கொடிநூல், பித்தன், ஆனந்த போதினி, குமார விகடன், சுதந்திரச் சங்கு ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றிய யோகியார் தம் மானசிக குருவாகக் கொண்டது தாயுமானவரை.

1956-ல் எஸ்.வி.வெங்கடராமன் இசையமைப்பில் வெளிவந்த 'நன்னம்பிக்கை' படத்தில் 'வாராமலே இருந்திடுவானோ' எனும் பாடலில்

பெ: அன்னை பராசக்தி
நம்மகத்து ஊட்டிய
ஆசை விளக்கு
அவிந்திடுமோ?

ஆ: எட்டு திசையும்
இடித்திட பேரிடி
எக்காளமிட்டு
குதிக்குது பார்
கொட்டும் இசைக்குயில்
கோமளமே - புயல்
கோபத்தை எப்படி
மாற்றிடுவோம்?' - என்று எழுதியிருப்பார்.

இடி, மழை, மின்னல், புயல் போன்ற இயற்கைக் காட்சிகளையும் சீற்றங்களையும் ஏனையோர் பாடியிருக்கிறார்கள் என்றாலும், யோகியாரின் சொற்கட்டு பிறவற்றிலிருந்து, பிறருடைய பார்வையிலிருந்து வேறுபட்டிருப்பதை உணர முடிகிறது. யோகியாரின் வசனத்தில் அமைந்த 'அதிர்ஷ்டம்' திரைப் படத்து நீதிமன்ற வாதங்களை புகழ்வாய்ந்த நீதிபதிகளும் வழக்குரைஞர்களும் பெருமைபடப் பேசிய பாராட்டுரைகள் காற்றுள்ளவரை நிலைத்திருப்பவை. யோகியார் தமது, கவிதைகளிலும் இத்தகைய வாத நுட்பங்களைச் செய்து காட்டியிருக்கிறார்.

அகலிகை சாபம்பெற்ற கதையை விவரிக்கும்போதுகூட ராமனிடத்தில் அவர் வைக்கும் காத்திரமான கேள்விகள் நெஞ்சைச் சுடும். கணவன் வடிவிலே வந்த இந்திரனால் அகலிகை தவற நேர்கிறது. முனிவனான கணவன் வெளியே போன சமயத்தில், அவன் வடிவத்தில் வந்த இந்திரன், அகலிகையைத் தீண்ட, அதனால் களங்கம் ஏற்படுவதாக அமைந்த கதையை வைத்துக்கொண்டு யோகியார் அந்த முனிவரைக் கேட்கிறார். "மூன்று காலமும் உணர்ந்த உன்னாலேயே, நடந்த நிகழ்ச்சியின் உண்மை உணர முடியாதபோது, யாதுமறியாத அகலிகை என்ன செய்வாள்?" என்பார்.

'அகல்யா', 'மேரி மேக்தலேனா, 'கண்மணி ராஜம்', 'காசில்லா கனகரத்தினம்' ஆகிய குறுங்காவியக் கவிதைகளை அதற்கான சான்றுகளாகப் பகரலாம்.

'போதுக்கும் பாட்டு
பொழுதெல்லாம் சங்கீதம்
யாதுக்கும் அஞ்சோம்
அவனியெலாம் எம் உடைமை
சூதுக்கும் வஞ்சனைக்கும்
சூழ்ச்சிக்கும் மாந்தர் செயும்
வாதுக்கும் மாமருந்து
யாங்கள் செய்யும் வண்கவிதை'

என்பதுதான் யோகியாரின் சாரம். எண்ணிக்கை அடிப்படையில் பார்த்தால் யோகியாரின் பங்களிப்பு திரைப்பாடலில் குறைவு. எனினும், நவகவிதையைக் கைகொண்ட யோகியாரும் திரைப்பாடலை வசமாக்க முயன்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் பேசும்படத் தொடக்கமான 1931-லிருந்து இன்றுவரை திரையிசையுடன் தம்மை இணைத்துக் கொள்ள ஆர்வம் காட்டியோர் பட்டியல் மிக நீளமானது. அத்தனை பேரிலிருந்தும் ஆய்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒரு சிலரில்

யோகியாரும் இடம்பெறுகிறார்.

'படத்தின் உரையாடல்கள் மிக மட்டமான கொச்சை பாஷையிலோ, உயர்ந்த இலக்கிய நடையிலோ எழுதப்படுவது சரியல்ல' என்றவர் அவர். அதேபோல 'சினிமா ஒரு கலை, கதை எழுதுவது மற்றொரு கலை. கதையின் இலக்கணம் வேறு; படத்தின் இலக்கணம் வேறு' என்னும் தெளிந்த கருத்தோடு சினிமாவை அணுகிய யோகியார், சக்தி உபாசனை செய்தவர். வறட்டு வேதாந்தத்தில் சரணாகதி அடையாதவர். 'மனத்தை விட்டு அகலாத கவிஞர்கள்' எனும் தலைப்பில் பெ.கி.பிரபாகரன் எழுதியிருக்கும் நூலிலுள்ள யோகியாரைப் பற்றிய குறிப்பும் இதையே சாற்றுகிறது.

'புதுமைக் கவியோகி' என பி.ஸ்ரீ.யால் புகழப்பட்ட யோகியார் வாழ்ந்த ஆண்டுகள் 59 மட்டுமே. ஆனால், வார்த்த கவிதைகளின் செழுமை நிலைக்கும் ஆண்டுகள் கணக்கிடப் பட முடியாதவை. சென்னைப் பெருநகர வீதிகளில் மதிய வெயில் சூடு பரப்ப, காலில் செருப்பில்லாமல் நடந்துபோன ஆரம்ப காலத்தில் யோகியாரின்'காசில்லா கனகரத்தினம்' கவிதை எனக்குப் பாதை போட்டது. வெப்பம் தணித்துக் கண்களில் ஆவேசக் குளிர்ச்சியை வழங்கியிருக்கிறது.

'வெயில் படபடக்கும்
வெப்பம் கொழுந்துவிடும்
நெய்யில் நெருப்புருக்கும்
தார் போட்ட நெடுவீதி
இருபுறமும் மச்சு மச்சாய்
கட்டடங்கள் எத்தனையோ
ஒரு மனிதன் தங்குதற்கோர்
ஒதுக்குப்புறம் இல்லை
காரோடும் டிராமோடும்
கானல் அலையோடும்
நீரோடும் பைப்பில்லை
நிழலோட சென்னையிலே'

- வரிந்து கட்டி வார்த்தைகளைத் தொடுக்காமல் வெகு இயல்பான வர்ணிப்பில் நம்மை மெய் சிலிர்க்க வைப்பவர் யோகியார். இவருடைய படைப்புகளையும் பாடல்களையும் குறித்து கல்கி எழுதியதே மிகச் சரியானது. யோகியாரின் படங்களைக் குறித்து எழுதும் இடத்தில் 'கதை சர்வ சாதாரணமானது; சம்பவங்கள் எல்லாம் வாழ்க்கையில் எதிர்பார்க்கக் கூடியன. இயற்கையாகப் பேசி இயற்கையாக நடந்துகொள்ளும் மனிதர்களையும் ஸ்திரிகளையும் பார்க்கிறோம்' என்று வியந்திருந்தார்.

இயற்கையாகப் பேசி, இயற்கையாக நடந்துகொள்ளும் விதமே யதார்த்தம். அதனை வழுவாத யோகியாரின் படைப்பு இலக்கியக் கிளையில் என்றும் வாடாத மல்லிகை. கூத்த நூல் சூத்திரங்களைச் சேகரித்துப் பதிப்பித்த யோகியார், யாத்த கவிதைகளும் இலக்கியச் சூத்திரங்களே!

(காற்று வீசும்)

அபூர்வமான பிரம்ம கமலப்பூ



பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் 'குறிஞ்சி', ஐம்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் 'தாழிப்பனை' போல் பிரம்ம கமலப் பூ என்னும் 'நிஷாகந்தி' மலர், ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும். இம்மலர் பிரதான தண்டிலிருந்தோ, கணுப் பகுதியிலிருந்து தோன்றுவதில்லை. இலையின் நுனியிலிருந்து இரவு பன்னிரண்டு மணிக்குப் பூக்கத் தொடங்கி அதிகாலை நான்கு மணிக்குச் சுருங்கி விடும். வெளிச்சத்தைக் கண்டால் வெட்கப்படும் நிஷாகந்தி இரண்டு நாட்கள் மட்டுமே பூத்துவிட்டுப் பின் வாடிவிடும். இது ஒரு மூலிகைச் செடியும் கூட!

- இசக்கி முத்து, கோவை.



கல்லூரி வாசல்



அன்றைய தொலைக்காட்சி முதல் இன்றைய கேமரா செல்போன் வரை அனைத்தும் ஆர்ப்பாட்ட அறிவியல் வளர்ச்சியின் சின்னங்களாக உலவிக் கொண்டிருக்கும்போதே இன்னொரு பக்கம் 'இளைய சமுதாயத்தைக் கெடுக்க வந்த குட்டிச்சாத்தான்கள் இவை' எனும் கூப்பாடும் எழாமல் இல்லை. இந்தக் குற்றச்சாட்டு உண்மைதானா என்று குரோம்பேட்டை

மௌஸ் பாய்ண்ட்





எஸ்.டி.என்.பி வைஷ்ணவா கல்லூரியின் மாணவிகள் சிலரிடம் கேட்டபோது...

கண்மணி: கலிலியோ காலத்துலேர்ந்தே அறிவியல் கண்டுபிடிப்புகள் மேலே குற்றங் குறை சொல்றது சகஜமான ஒண்ணுதான். ஆனா, டி.வி, செல்போன், இண்டர்நெட் இதையெல்லாம் நாங்க எங்களோட முன்னேற்றத்துக்கு பாஸிடிவ்வாத்தான் பயன் படுத்துறோம்.

கல்யாணி: வீ இஸ் கரெக்ட். நெட்ல நாங்க பொழுதுபோக்குக்குன்னு இல்லாம, பாடம் சம்பந்தமான விஷயங்களையும் பார்க்கறோம். டெக்ஸ்ட் புக் இல்லாம எக்ஸ்ட்ரா நாலேட்ஜுக்கு அதுல நிறைய இன்ஃபர்மேஷன்கள் கிடைக்குது.

சித்ரா: இன்னொரு விஷயம், நாங்க செல்போன்ல ஃப்ரீ எஸ்.எம்.எஸ்.லேயே எங்க பாடத்துல இருக்குற சந்தேகங்களைத் தீர்த்துக்குறோம். எல்லாருமே செல், நெட்டை மிஸ்யூஸ் பண்றதில்ல. சில பேருக்காக எல்லாரையும் குற்றம் சொல்றது சரியாகாது.

கல்யாணி: நெட்ல எத்தனை வேலைவாய்ப்பு தர்ற வெப்சைட்ஸ் இருக்கு தெரியுமா? உட்கார்ந்த இடத்திலிருந்தே வேலை தேட முடியுது. அதுமட்டுமல்ல இன்னைக்கு நெறய ஆன்லைன் கோர்ஸஸ் வந்திருக்கு. நெட்லயே எந்தப் பாடம் குறித்த சந்தேகங்களையும் தீர்த்து வைக்க முடியுது. அது இன்னிக்கு நல்ல தொழிலாவும் மாறிட்டு வருது. கேம்பஸ் இன்டர்வியூல செலக்ட் ஆகணும்ங்கிறதுக்காகவே தமிழ், இங்கிலீஷ் சேனல் நியூஸை டி.விக்கள்ல பாக்குறோம்.

மூவரும் கோரஸாக... நாங்க ஸ்ட்ராங்க சொல்வோம், யங்கர் ஜெனரேஷன் எல்லா அறிவியல் அதிசயங்களையும் நல்லதுக்குத்தான் பயன்படுத்துறோம். ஓ.கே!

- சுகந்தி ஜி.பாரதி

படம்: **பொள்ளாச்சி சுந்தரம்**





பக்தி செலுத்துவதால் முக்தி கிடைத்துவிடுமென்று சொன்னால், நாம் செலுத்தும் அந்தப் பக்தியே நேராக முக்தியைக் கொடுத்து விடுகிறது என்று அர்த்தமில்லை. நாம் செய்கிற எதுவுமே தானாக எந்தப் பலனையும் தருவதில்லை. பலன்களைத் தருகிற ஆதாரமாக ஈச்வரனே இருக்கிறான். அவன்தான் பாப புண்யம் பார்த்து எல்லாருக்கும் எல்லாப் பலன்களையும் கொடுக்கிறான். அவ்விதத்தில் நாம் பண்ணுகிற பக்திக்குப் பலனாக அவன் பரம கிருபை செய்து, ஞானத்தைத் தந்து, அந்த ஞானத்துக்குப் பலனாக மோக்ஷானுபூதியைக் கொடுக்கிறான். ஆக, பலன் தருவது நாம் பண்ணும் பக்தியே அல்ல; அதற்குப் பிரதியாக ஈச்வரன் செய்யும் கிருபைதான் பலனைத் தருவது.



பக்தி நிஜமானதாக இருந்தால் பக்தி பண்ணுகிறவன் அதற்குப் பிரதியே எதிர்பார்க்க மாட்டான். பிரதி பிரயோஜனம் எதிர்பார்த்துவிட்டால் அது வியாபாரம்தானேயொழிய பக்தி இல்லை என்றே பாகவதாதி நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப் பக்தன் பிரதி வேண்டாமல் இருந்தாலும் இவனிடமிருந்து நிஜமான பக்தியைப் பெற்றுக்கொண்ட

பிரதி உபஹாரம்!

பகவானுக்கு மனசு கேட்குமா? அதனால் அவன் கிருபை பண்ணத்தான் பண்ணுவான். ஞானத்தை அனுக்ரஹிக்கத்தான் செய்வான். பக்தனை சம்ஸாரத்திலிருந்து விடுவித்து மோக்ஷத்தில் சேர்க்கத்தான் செய்வான்.


- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

அனுபவம்

நெஞ்சில் உறைந்த அம்மன்!


எங்கள் ஊரில் கோயில் கொண்டுள்ள மாரியம்மன் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம். தினசரி அம்மனுக்கு அபிஷேகம் விமரிசையாக நடைபெறும். ஒரு சமயம் நாங்கள் அபிஷேகம் செய்து பிரசாதம் பெற்றபோது, குங்குமப் பொட்டலத்தினுள், மஞ்சள் கயிற்றில் கோர்த்த தங்கத் தாலி மின்னியது. இதனைப் பூசாரியிடம் சொன்னபோது, 'நாங்கள் எதுவும் வைக்கவில்லையே' என்று சொல்லிவிட்டார். அதன் பிறகு விரைவிலேயே எனக்குத் திருமணம் நிச்சயமானது. கல்யாணத்தில் கட்டிய தாலியோடு அம்மன் அருளால் கிடைத்த தாலியையும் அணிந்துகொண்டேன். அம்மனையே நெஞ்சில் இருத்திக் கொண்டேன்.

- ஆர். ராஜலட்சுமி, கரூர்



நான் ஊட்டியில் வங்கி மேலாளராக இருந்த சமயம். ஸ்ரீசத்தியசாய்பாபா அவர்கள் ஊட்டிக்கு வந்திருந்த வேளையில், எனது நண்பர், அவருடைய மகன், நான் மூவருமாக அவரைத் தரிசிக்கச் சென்றோம். நாங்கள் புல்வெளியில் நின்று கொண்டிருந்தபோது பாபா அவர்கள் எங்களுக்குத் தரிசனம் தந்தார். யாரும் எதிர்பாராத விதமாகத் தம் கையில் வைத்திருந்த ரோஜா மலரை என் நண்பனின் மகனிடம் கொடுத்து "இதை உன் காதலியிடம் கொடு" என்றாரே பார்க்கலாம்! என் நண்பர் அசந்து விட்டார். பிறகு பையனிடம் விசாரித்தபோது தாம் ஒரு பெண்ணைக் காதலிப்பதாகக் கூறியதை இன்றுவரை என்னால் மறக்க முடியவில்லை.

- ஆர். ரங்கநாதன், சென்னை - 17



பதினைந்து வருடங்களுக்கு முன்பு ஓர் ஆகஸ்ட் மாதம் திருவண்ணாமலையில் நடக்கும் உறவினர் வீட்டு விசேஷத்துக்கு அழைப்பு வந்தது. அதே தேதியில் சென்னையில் ஸ்ரீராகவேந்திரரின் ஆராதனையில் பங்கெடுக்க ஆவல். திருவண்ணாமலை 'ட்ரிப்'பை விடவும் மனதில்லை... காரணம் அருணாசலேஸ்வரரைத் தரிசிக்கவும் அவா. என் கணவரிடம் என் குழப்பத்தைத் தெரிவித்தேன். 'அருணாசலேசுவரரை ஸ்ரீராகவேந்திரராக நினைத்துக்கொள். எல்லாவற்றுக்கும் நம் மனம்தான் காரணம்" என்றார் அவர்.

சரியென்று திருவண்ணாமலைக்குக் கிளம்பிவிட்டோம். கிரிவலத்தின்போது ஒரு ஹோட்டலில் நுழைந்து காபிக்கு ஆர்டர் செய்தோம். காபிக்கு முன்பு வாழை இலையில் ரவா கேசரி வந்தது. அதைக் கொண்டு வைத்தவரை வியப்புடன் நோக்கினேன். "இன்று ஸ்ரீராகவேந்திரர் ஆராதனை தினமல்லவா? அதற்காகத்தான் இந்தப் பிரசாதம்!" என்றார். எங்களுக்கு மெய் சிலிர்த்துவிட்டது.

- நிர்மலா மாத்ருபூதம், சென்னை - 44

V.I.P. ஹெல்த்

“நான் இதைப் பெருமைக்காகச் சொல்லவில்லை... ‘ஐம்பத்திரண்டு வயதிலும் இருபத்தைந்து இளைஞனாக காணப்படுகிறீர்களே எப்படி?’ என்றுதான் என்னிடம் பேச்சையே ஆரம்பிக்கிறார்கள். இது ஏன் என்று ஒவ்வொருவரும் யோசிக்க வேண்டும். விடை ‘கட்டுப்பாடு’ என்பதாகத்தான் இருக்கும். எதிலும், எவற்றிலும் வாழ்க்கையில் கட்டுப்பாடு மிக முக்கியம். நேரக் கட்டுப்பாடு வெற்றிக்கு வலை விரித்தால், உணவுக் கட்டுப்பாடு உடலுக்கு நலன் பயக்கும்.

என் தந்தை தமிழ்வாணன்கூட நூறு வயதுவரை வாழ்வதெப்படி என்று புத்தகம் எழுதினார். ஆனால் ஐம்பத்தொரு வயதிலேயே காலமானார்! எழுதுவது வேறு, எழுதியவற்றைக் கடைப்பிடிப்பது வேறு. நான் எப்போதும் என் உடல்நலத்தைப் பற்றிய விழிப்புணர்வோடே இருக்கிறேன். முதலில் உணவில் ஆரம்பிக்கிறேன். உப்பு, சர்க்கரை, பால் இவற்றை அதிகம் பயன்படுத்துவதில்லை. அரை உப்புச் சாப்பிடுகிறவன், சர்க்கரையை நேரடியாகச் சேர்த்துக்கொள்வதில்லை. பால் அறவே கிடையாது. ஆனால் பாலில் கால்ஷியம் இருக்கிறதே... அதற்காக மோர், தயிர் சேர்த்து சமன் செய்துகொள்கிறேன். டீ, காபிக்குத் தடா. செயற்கை நிறச் சாயங்கள் பயன்படுத்தப்பட்ட ஃபாஸ்ட் ஃபுட் உணவு வகைகள், மாமிசம், குளிர்பானங்கள் எல்லாம் கண்ணோடு சரி; வாய்க்கும், வயிற்றுக்கும் அவற்றை விருந்தாக்குவதில்லை. ஊறுகாய், நம் நலத்துக்கு ஊறு விளைவிக்கும் காய். அதனால் அதனை நான் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. இதைச் சாப்பிட மாட்டேன்... அதைச் சாப்பிட மாட்டேன் என்று சொல்லிவிட்டு எதைத்தான் சாப்பிடுகிறேன் என்கிறீர்களா?

காலையில் பொதுவாக நான்கு இட்லி. பூண்டு, வெங்காயக் குழம்பு என்றால் ஆறு இட்லி. மதியம் சாம்பார், ரசம், மோர், இரண்டு அவியல் அல்லது கூட்டோடு சாதம். மாலை பஜ்ஜி, போண்டா மாதிரியான சிற்றுண்டி. இரவு எட்டரை மணிக்கு எண்ணெய் இல்லாத தோசை. இதுதான் என் தினசரி மெனு. சனிக்கிழமைகளில் மட்டும் முழுக்க முழுக்கப் பச்சைக் காய்கறிகள். வெளியில் சென்றால் பழச்சாறு, இளநீர் நிறையக் குடிப்பேன்.



லேனா தமிழ்வாணன்

உடலுக்குப் பயிற்சி தருவது மிகச் சிறந்த விழிப்புணர்வு! தினமும் காலையில் பேட்மிண்டன் விளையாடுவேன். சனி, ஞாயிறுகளில் என் நண்பரின் கிரிக்கெட் அகாடமியில் பயிற்சியாளராகப் பந்து வீசுவேன். கொஞ்ச நாட்களாக ஜாகிங் செல்வதில்லை. ஆனால் தினமும் மூன்று கிலோ மீட்டர் நடக்கிறேன். மகரிஷி மகேஷ் யோகி யோகாசன மையத்தின் மாஸ்டர் கிருஷ்ணனிடம் முறையாக யோகா, தியானம் கற்று, செய்து வருகிறேன். இருபது ஆசனங்கள் செய்வேன், சிரசாசனம் உட்பட. யோகாசனம் மூலம் கல்லீரல், கணையக் கோளாறுகள் விலகும். கால் தசைப் பிடிப்பு, மூட்டு வலிகள் குணமாகும்.



உணவு, உடற்பயிற்சியைத் தவிர, மனத்தையும் புத்துணர்ச்சியாக வைத்துக்கொண்டால் ஆயுளை அதிகரிக்கலாம். 'எப்படி இருக்கிறீர்கள்?' என்று கேட்டால் 'ஏதோ இருக்கிறேன்' என்று அலுத்துக் கொள்பவர்களை எனக்குப் பிடிக்காது. நான் எப்போதும் நன்றாக இருக்கிறேன். அதற்கு மிக முக்கிய காரணம் எந்தவித இடர்ப்பாடுகளையும், சிக்கல்களையும் சந்திக்கும்போது நான் அதிர்ந்து விடுவதில்லை; மலைத்து நிற்பதில்லை; கவலைப்படுவதில்லை. பிரச்னையின் தீர்வைப் பற்றி மட்டுமே யோசிப்பேன். வாழ்க்கையின் இயல்பை ஏற்று ஒரு பார்வையாளனாகி விடுகிறேன். இந்த மனோபாவம்தான் என்னை எந்தச் சிக்கலையும் தைரியமாகச் சந்திக்க வைக்கிறது; வெற்றி பெற வைக்கிறது. நீங்களும் முயன்று பார்க்கலாமே...

- அருள்செல்வன்

படங்கள் : ஸ்ரீஹரி



"எனக்குப் பிடிக்காத விஷயம்!"



கடவுள் இருக்கிறாரா?

கடவுளைப் பற்றிய பிரச்னைகளில் மிகவும் முக்கியமானது, 'கடவுள் உண்டா, இல்லையா' என்பதுதான். மனிதன் தோன்றின காலத்திலிருந்து இந்தப் பிரச்னையும் இருந்து வருகிறது. ஒரு சாரர் 'கடவுள் உண்டு' என்கிறார்கள். இன்னொரு சாரர் 'கடவுள் இல்லை' என்கிறார்கள். ஆனால் இரு சாரரும் கடவுள் இல்லாதது போலவே காரியம் செய்கிறார்கள்!

கடவுள் இருந்தாலும் சரி, இல்லாமற் போனாலும் சரி, அவர் மனிதனுடைய காரியங்களில் தலையிடுவதாகத் தெரியவில்லை. அப்படித் தலையிட்டாலும் தம்மிஷ்டப்படி தலையிடுகிறாரேயன்றி, மனிதனுடைய வேண்டுகோளை முன்னிட்டுத் தலையிடுவதாகக் காணப்படவில்லை. ஒரு சமயம் ஒரு பாட்டி பின்வருமாறு பிரார்த்தனை புரிந்து கொண்டிருந்ததை நான் கேட்டேன் : "சுவாமி! பகவானே! ஊரெல்லாம் காலராவும், வைசூரியுமாயிருக்கிறதே! என் பெரிய நாட்டுப் பெண்ணுக்கு ஒரு காலரா வந்து கொண்டு போகாதா? அவள் இன்றைக்குச் செத்தால் இன்னும் மூன்று மாதத்துக்குள் இரண்டாயிரம் ரூபாயும் பெண்ணுமாய் என் பிள்ளைக்குக் கலியாணம் பண்ணி வைப்பேனே?..."

பகவான் ஒருவர் இருந்தால், இந்தப் பிரார்த்தனையை நிறைவேற்றி வைப்பார் என்று நினைக்கிறீர்களா?

மேற்சொன்னதைப் போன்ற தீய பிரார்த்தனைகளைக் கடவுள் நிறைவேற்ற மாட்டார்; நல்ல பிரார்த்தனைகளைத்தான் நிறைவேற்றுவார் என்று சொல்லலாம். அப்படியும் காணப்படவில்லை. ஆங்கிலேயர் பாடும் தேசிய கீதத்தில் "கடவுளே! எங்கள் அரசரைக் காப்பாற்றும்; அவருடைய சத்துருக்களை நிர்மூலம் செய்யும்; எங்களுக்கு வெற்றியைக் கொடும்" என்று பிரார்த்தனை செய்து வருகிறார்கள். சென்ற 300 வருடகாலமாக ஆங்கில ஜாதியாரின் மேற்படி பிரார்த்தனை ஏறக்குறைய நிறைவேறியும் வருகிறது. ஆனால் ஏழை இந்தியர்களாகிய நாம் "சுவாமி எங்கள் தேசத்தில் நாங்கள் இராஜ்யம் நடத்த அருள் புரியுங்கள்" என்றுதான் கேட்கிறோம். இந்தப் பிரார்த்தனைக்கு பகவான் செவிடாயிருக்கிறார்.

கடவுளுக்கு மனிதன் நன்றி செலுத்த வேண்டும். அப்படியானால் எதற்காக? "மனிதனைக் கடவுள் படைத்ததற்காக" என்று சிலர் சொல்கிறார்கள். இந்த விஷயத்தில் கடவுள்தான் மனிதனுக்கு நன்றி செலுத்த வேண்டுமென்று நான் நினைக்கிறேன். மனிதனைப் படைத்தது கடவுள் என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை; கடவுளை மனிதன் சிருஷ்டித்தது என்னவோ நிச்சயம். ஆனால் மனிதன் தம்மைப் படைத்ததற்காகக் கடவுள் அவனிடம் நன்றி செலுத்துவார் என்று தோன்றவில்லை. தம் பெயரால் உலகில் நடக்கும் கோர கிருத்யங்களைப் பார்க்கும்போது அவருக்குத் தம்மைப் படைத்த மனிதன் மேல் கோபம் உண்டாகுமென்றே தோன்றுகிறது.

"மலைகளையும், நதிகளையும், மரங்களையும், தானியங்களையும் பகவான் மனிதனுக்காகப் படைத்திருக்கிறாரே!" என்று சிலர் சொல்கிறார்கள். சூரியனும், சந்திரனுங்கூட மனிதனின் உபயோகத்துக்காக பகவான் படைத்தவைதான் என்பது அவர்கள் கருத்து. இருக்கட்டும்; மேற்கண்டவற்றையெல்லாம் மனிதனுக்காகப் படைத்த பகவான் எரிமலை



களையும், தேள், பாம்புகளையும் ரெஜினால்டு கிராடாக்குகளையும், ஏ.பி. பாத்ரோக்களையும் ஏன் படைத்தார்?

இந்த விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தபோது நண்பர், திருநெல்வேலி ஜில்லாவில் இருந்துவரும் ஒரு நம்பிக்கையைக் குறிப்பிட்டார். அந்த ஜில்லாவில் தாமிரபரணி நதி வளைந்து வளைந்து ஓடுகிறது. நதிக்கரையில் திருநெல்வேலி, அம்பாசமுத்திரம் போன்ற பட்டணங்கள் இருக்கின்றன. "பாரேன்! பெரிய பட்டணங்கள்



வழியாய்ப் போகவேண்டுமென்றே தாமிரப்பரணி வளைந்து வளைந்து போகிறது!" என்று அந்த ஜில்லாவாசிகள் ஆச்சரியமாய்ச் சொல்வதுண்டாம்! 'நதிபோன வழியில் பட்டணங்கள் ஏற்படவில்லை. பட்டணங்கள் உள்ள வழியாகத் தேடி நதி போகிற'தென்பது இவர்களுடைய கருத்து. உலகமும் அதிலுள்ள இயற்கைப் பொருள்களும் மனிதனுக்காகப் படைக்கப்பட்டவை என்பது இதைப் போன்றதுதான்!

''மனிதன் சாப்பிடுவதற்கென்றே பகவான் நெல்லைப் படைத்திருக்கிறார்'' என்பது சாகபக்ஷிணிகளின் எண்ணம். அதை நெல்லாக ஏன் படைக்க வேண்டும்? அரிசியாகவே விளையும்படி செய்திருந்தால் மனிதனுக்கு எவ்வளவு உழைப்பு மீதி? - உண்மையென்னவென்றால், உலகம் மனிதனுக்காக சிருஷ்டிக்கப்பட்டது என்பதைப் போன்ற அகம்பாவமான கொள்கை வேறொன்றுமில்லை. படைப்பில் மனிதன் அற்பத்திலும் அற்பமானவன். சிருஷ்டி இரகசியத்தை ஒருவரும் அறிந்ததில்லை. எவரேனும் அறிந்த போதிலும் அதை வெளியிட்டுச் சொன்னது கிடையாது. கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்.

- வானதி பதிப்பகத்தின்
'அதிர்ஷ்ட கவசம்' நூலிலிருந்து...




தற்போது விற்பனையில்...
கோகுலம் தீம் பார்க்
வித்தியாசமான விளையாட்டுகள்
என் பெயர் தென்றல்!
புதிய தொடர்கதை
நேற்றைய உலகம்
வரலாற்று அதிசயம்
மீண்டும் பெரிய வடிவில்... புதிய பொலிவுடன்...
கோகுலம்
நவம்பர் 2006 ரூ.8/-
குழந்தைகளின் குதூகலம்!

சந்திப்பு

தி.மு.க. சிதறும்!

- ஜெயக்குமார் அதிரடி





உள்ளாட்சித் தேர்தல் அமளிதுமளிகள் இன்னமும் ஓய்ந்தபாடில்லை. நடந்த வன்முறைகளும் வெறியாட்டங்களும் மக்களிடம் ஏற்படுத்திய அச்சம் விலகாத நிலையில், நாம் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரைச் சந்தித்துப் பேசினோம்...

அ.இ.மு.க. சார்பில் சென்னை மாநக ராட்சித் தேர்தலில் வென்ற நால்வரில் இருவர் கட்சியை விட்டு நீக்கப்பட்டு விட்டனர். இருவர் ராஜினாமா செய்து விட்டனர். கடுமையான சூழலிலும் தி.மு.க.வை எதிர்த்து வென்றவர்களை ஜனநாயகக் கடமை ஆற்ற விடாமல் முடக்கியது ஏன்?

"இரண்டு பேர் நீக்கப்பட்டதற்குக் காரணம் அவர்கள் கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதுதான். மீதமுள்ள இரண்டு பேர் ராஜினாமா செய்தது, ஒட்டுமொத்த வார்டுகளிலும் ஜனநாயகப் படுகொலை நடந்திருக்கிறதென்கிற எங்களின் நிலைப்பாட்டுக்காக. சில வார்டுகளில் எங்களது வெற்றியை ஏற்றுக்கொண்டால், நடந்த தேர்தல் முழுவதையுமே நாங்கள் ஏற்றுக்கொண்டதாக ஆகிவிடும். தி.மு.க.வுக்குக் கிடைத்திருக்கும் இந்த வெற்றி தாற்காலிகமானது தான்; நிலைக்காது. வாரிசுப் போராட்டத்தில் தி.மு.க. சிதறுண்டு போகப் போகிறது, பாருங்கள்."

அ.இ.மு.க. ஆட்சியின்போதே - அதாவது, 2004-ம் ஆண்டே உள்ளாட்சிகளுக்கும் கட்சித் தாவல் தடைச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று மாநில தேர்தல் கமிஷன் சொன்னதைக் கண்டுகொள்ளாமல், இப்போது அ.இ.மு.க. அதைப் பற்றிப் பேசுவது ஏன் என்கிறாரே கலைஞர்?

"அ.இ.மு.க. ஆட்சிக் காலத்தில் மாநில தேர்தல் கமிஷன் பரிந்துரை செய்திருக்கலாம். ஆனால் அதற்கான முழு அவசியம் அப்போது ஏற்படவில்லை. காரணம், உள்ளாட்சிகளில் தலைவர் பொறுப்புகளுக்கு நேரடித் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலுக்கு முன் தலைவர், துணைத் தலைவர் பதவிகளுக்கு மறைமுகத் தேர்தல் அதாவது உறுப்பினர்கள் வாக்குமூலம் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டது. அப்போதுதான் புரட்சித்தலைவி கட்சித் தாவல் தடைச் சட்டம் வேண்டும் என்று வலியுறுத்தினார்."

மதுரை இடைத் தேர்தலில் வாக்குப் பதிவு இயந்திரங்கள் தி.மு.க.வுக்குச் சாதகமாக புரோக்கிராம் செய்து வைக்கப்பட்டிருந்ததாக ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். இதெல்லாம் சாத்தியம்தானா? சரிதானா?

"எங்கள் புரட்சித்தலைவி எதையும் ஆய்வு செய்த பிறகே சொல்வார். வாக்குப்பதிவு இயந்திரங்களில் தில்லுமுல்லு நடக்க வாய்ப்பிருக்கிறது என்பதை வெகு காலமாக அவர் சொல்லி வருகிறார். தொழில்நுட்பம் வளர்ந்த நாடுகளில்கூட தேர்தலின்போது இன்னமும் அச்சடித்த வாக்குச் சீட்டுகளையே உபயோகிக்கிறார்கள். ஏன்? வாக்குப் பதவி இயந்திரங்களில் முறைகேடுகள் சாத்தியம் என்பதால்தான்!"

- ஸ்ரீநி

படம் : ராஜன்

நெஞ்சத்தைக் கோயிலாக்கி...

'சோர்வு' என்ற வார்த்தை தமிழில் இன்று ஆயாசம், அலுப்பு என்ற பொருள்களில் பயன்படுகிறது. ஆழ்வார்கள் காலத்தில் சோர்வு என்றால் மறதி என்று பொருள் இருந்தது. நாம் பல காரியங்களைச் செய்ய மறந்துபோய் விடுகிறோம் அல்லது செய்துவிட்டு மறக்கிறோம். வேலைக்காரர்களின் சுலபமான சால்ஜாப்பு 'மறந்துட்டேங்க' என்பது. கணவர்கள் மனைவிகள்கூட சௌகரியமான, சமயங்களில் மறந்து விடுவார்கள். நவீன வாழ்க்கையில் இதை 'செலக்டிவ் மெமொரி' என்பார்கள்.

சாகும் தருவாயில் வரும் மறதி நிஜ மறதி. நம் மூளையின் ந்யூரான்கள் நினைத்து நினைத்துக் களைத்துப் போகின்றன. அந்தக் கட்டத்தில் இடுப்பு வேஷ்டிகூட மறந்துபோய் விடுகிறது. அப்போது போய் 'சொத்து ஏதாவது சேர்த்து வைத்திருக்கிறாயா? அதை எங்கே வைத்திருக்கிறாய்? சொல்லு சொல்லு' என்று சுற்றிலும் உள்ளவர்கள் தொந்தரவு செய்வார்கள். ஏறக்குறைய கோமா ஸ்டேஜில் இருப்பவரிடம் யார் கேட்டாலும் பதில் வராது. அந்தக் காட்சியைப் பெரியாழ்வார் ஒரு திரைப்படத்தைப் போலக் காட்சிப்படுத்துகிறார்.


சோர்வினால் பொருள்
வைத்ததுண்டாகில்
சொல்லு சொல் என்று சுற்றுமிருந்து
ஆர் வினவினும் வாய் திறவாதே
அந்த காலம் அடைவதன் முன்னம்
மார்வமென்பதோர் கோவில்
அமைத்து
மாதவன் என்னும் தெய்வத்தை
நாட்டி
ஆர்வ மென்பதோர் பூவிட
வல்லார்க்கு
அரவ தண்டத்தில் உய்யலு மாமே.

(சோர்வு - மறதி, ஆர்வினவினும் - யார் கேட்டாலும், அந்தக்காலம் - கடைசிக் காலம், மார்வம் - நெஞ்சம், அரவதண்டம் - நரகத்தில் தண்டனை, உய்யல்-பிழைத்துப் போதல், தப்பித்தல்)'

பூதத்தாழ்வார் ஆர்வத்தை அகல் விளக்குக்கு நெய்யாக ஊற்றினார். பெரியாழ்வார் ஆர்வத்தைப் பூவாகத் தூவுகிறார். நெஞ்சை ஒரு கோயிலாக்கி, அதில் மாதவனை (விஷ்ணுவை) தெய்வமாக நட்டு, ஆர்வத்தைப் பூவாகப் போட்டால் போதும், எமதூதர்கள் விலகிச் செல்வார்கள் என உத்தரவாதம் அளிக்கிறார்.

'டாக்டர் நரேந்திரனின் வினோத வழக்கு' என்ற என் மேடை நாடகத்தை நீங்கள் பார்த்திருக்கலாம். அது பலமுறை பூர்ணம் விசுவநாதன் அவர்களால் நடிக்கப்பட்டது. தொலைக்காட்சித் தொடராகவும் வந்தது. அதில் ஒருவர் கோமாவில் படுத்திருப்பார். உறவினர்கள் டாக்டரிடம், 'அவரை எப்படியாவது எழுப்பிடுங்க. சாவியை எங்க வெச்சுத் தொலைச்சிருக்கார்னு தெரிஞ்சா போதும் டாக்டர்' என்று கெஞ்சுவார்கள். அந்தக் காட்சிக்கு எனக்கு உத்வேகம் அளித்தவர் பெரியாழ்வார்தான்!

சுஜாதா



4

மனப்பேய்

என் கணவர் அறைக்குள் வந்து விளக்கைப் போட்டதும் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

"போய்ட்டானா?" என் குரல் எனக்கே அன்னியமாக இருந்தது.

"ஒரு வழியா அனுப்பியாச்சு; லேபர் ஆபீஸர், போலீஸுக்குப் போகப் போறதா சொன்னப்புறம்தான் அசைஞ்சு குடுத்தான்" அவர் குரலிலும் அயர்வு தொனித்தது.

"திரும்பிவர வந்து தொந்தரவு கொடுக்க மாட்டானே?"

"வரமாட்டான்." அவர் சட்டென்று குளியலறையில் அடைக்கலம் தேடினார். நானும் சமையற்கட்டைநோக்கி நடந்தேன். வாய்க்கு ஓய்வு கொடுக்க முடிந்தது; மனதுக்கு?

புதிய நாட்டில் வாழ்க்கை துவங்குவது உற்சாகமாகவே இருந்தது. தனி வீடும் தோட்டமும் கிராமத்தில் இருக்கும் உணர்வைத் தந்தன.

நகரப் பரபரப்பை விட்டு விலகி ஆறு மாதங்கள் ஓடிவிட்டிருந்தனவே! ஆறு மாதங்களில் மூன்று வேலைக்காரர்கள் வந்து போயாயிற்று. எங்கள் வீடு, ஒரு வெள்ளையனின் வீடு போலில்லாதது கஷ்டமாக இருந்தது. 'மாமிசம், சூடான பானம் ஏதும் இல்லாத வீடுகூட ஒரு வீடா?' இப்போது வேலைக்கு வந்துள்ள மார்க் ஒரு தனி ரகம். சுத்தம் என்றால் அப்படி ஒரு சுத்தம்.

என் பத்து வயது மகன் வினு என்னும் வினோத்துக்கு, குத்துச் சண்டை வீரர்களைப் பற்றிய கதைகளையும், பேய், பிசாசுகளின் கதைகளையும் அறிமுகமும் செய்து வைத்தது மார்க்தான் அமெரிக்காவின் ஏதோ ஒரு மூலையில் நடக்கும் முகம்மது அலியின் குத்துச் சண்டை, நாங்கள் இருந்த ஆப்பிரிக்கக் கண்டத்தின் தெற்கு நாடுகளில் விடியற்காலை மூன்று மணிக்கு தொலைக்காட்சிப் பெட்டியில் ஒளிபரப்பாகும். இருவருமாக வரவேற்பறையில் உட்கார்ந்து சண்டையைப் பார்ப்பார்கள். மார்க்கின் விவரணைகளும், அபிப்பிராயங்களும் என் கணவருக்கும் எனக்கும் அடுத்த நாள் மறுஒலிபரப்பு செய்யப்படும்.

ஒரு நாள் எனக்கு உதவி கொண்டிருந்தபோது, "மேடம், ஸ்பிரிட்டைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்றான். நான் உடனே பதில் சொல்ல முடியாமல் தடுமாறினேன்.

"உரக்கப் பேசாதே; அவர் காதில் விழுந்தால் உனக்கு ஏதோ பழக்கமெல்லாம் இருப்பதாக நினைத்து வேலையை விட்டு அனுப்பிவிடுவார்" என்று விளையாட்டாகக் கூறினேன். அவன் முகம் இறுகியது. இருந்தும், கேள்வி கேட்டேன். "அன்று உங்கள் கணவர் பூசை செய்த போது அது இறந்துபோய்விட்ட தன் அப்பாவுக்காக என்று சொன்னீர்களே. எனில் ஆவிகளுடன் தொடர்பு கொள்ள முடியுமென்று நீங்கள் நம்புகிறீர்கள் தானே!"


"இதெல்லாம் இப்படிச் சாதாரணமாகப் பேசிப் புரியவைக்க முடியாது" என்று கூறிவிட்டு நான் வெளியே வந்துவிட்டேன்.

ஆனால் அவன் நாங்கள் பூஜை அறையில் செலவழித்த நேரத்தையெல்லாம் கூர்மையாகக் கவனித்து வந்தானென்பது கூடிய சீக்கிரத்திலேயே தெரிந்தது.

வினு திடீரென்று ஒருநாள் என்னிடம் கேட்டான், "அம்மா, மார்க் என்னிடம் கேட்கிறான், 'உன் அம்மா தினமும் காலையில் குளித்துவிட்டு உங்கள் கடவுள் அறையில் என்ன செய்கிறார்?' நான் சொன்னேன் 'மெடிட்டேஷன்'னு. சரிதானேம்மா?" நான் தலையை அசைத்தேன்.

அடுத்த நாளே வினு மீண்டும் கேட்டான், "மெடிட்டேஷன் செய்தால் பவர் கிடைக்கும்னு மார்க் சொல்றான். உன்னிடம் ஏதோ பவர் இருக்காம்; அவன்

பத்மா நாராயணன்



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை

சொல்றான்'' நான் சிரிப்பை அடக்கிக் கொண்டு, சொன்னேன், "இதோ பார், விநு. அவனுக்குத் தோணறதை அவன் சொல்றான். நீ 'ஹோம்வொர்க்' பண்ணாம ஏமாத்தினா என்னால கண்டுபிடிச்சுட முடியும்; அந்த பவர் நிச்சயமா என் கிட்ட இருக்கு.''

மார்க் என்னை அடிக்கடி உற்றுப் பார்ப்பதுபோல எனக்குத் தோன்றியது. துணிகளை இஸ்திரி செய்து கொண்டிருந்த அவன் திடீரென்று பெட்டியை நிமிர்த்தி வைத்துவிட்டு என்னிடம் கேட்டான், "மேடம் உங்களை எல்லோரும் மாமி என்கிறார்களே, அது நீங்கள் அவர்களுக்கு அம்மா மாதிரியென்பதாலா?''

"நான் இங்கிருக்கும் பல சிநேகிதர்களைவிட வயதில் பெரியவளாக இருப்பதால் என்னை மரியாதையுடன் ஓர் உறவு



"தோண்டி எடுக்கப்பட்ட பிணம் ஒரு அரசியல்வாதியாத் தான் இருக்கணும்னு எப்படி சொல்றே?"

"சூட்கேஸை விடாமல் கெட்டியாப் பிடிச்சிட்டிருக்கே!"

- சம்பத்குமாரி

முறை வைத்து கூப்பிடுகிறார்கள்" என்றேன் நான். அவன் முகத்தில் அதை ஏற்றுக்கொண்டதன் அடையாளம் தெரியவில்லை.

நாளடைவில் மார்க்கின் நடவடிக்கைகளில் மாற்றங்கள் தெரிந்தன. முகத்தில் ஒருவித குழப்பம். வேலைகளிலும் கவனக் குறைவு. அவன் இப்போதெல்லாம் மத சம்பந்தமான கேள்விகளையே அதிகம் கேட்டான். நானும் மதங்களின் சமரஸத் தன்மைப் பற்றியே வலியுறுத்தி வந்தேன். ஒரு நாள் என்னிடம் அவன் கூறினான், "எனக்கு இப்போது என்னவெல்லாமோ சொப்பனங்கள் வருகின்றன. நீங்கள் அதற்கு விளக்கம் சொல்ல வேண்டும்."

"மார்க், அதெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது. உனக்கு உன் மதம் மூலம்தான் சந்தேகங்கள் தீர வேண்டும். உன் பாதிரி யாரிடம் இதைப் பற்றிப் பேசு" என்றேன்.

"இல்லை மேடம், எனக்கு உங்களிடம் நம்பிக்கை இருக்கு. உங்களால்தான் எனக்கு உதவி செய்ய முடியும்."

நிலைமையை எப்படிச் சமாளிப்பதென்று எனக்குத் தெரியவில்லை. என் கணவராலும் யோசனைகள் கூற முடியவில்லை. இந்த விவகாரத்தை வெளியில் யாரிடமாவது கூறினால் பிரச்னை பெரிதாகுமென்று என் உள்ளுணர்வு கூறியது.

வினு ஒரு முறை என்னிடம், "அம்மா, நானும் ஒரு நாள் மார்க்கோட சிமெட்ரிக்குப் போகலாமா? அங்கு மார்க் ஆவிகளையெல்லாம் பார்க்கிறானாம், பேசக்கூட முடியும்ங்கறான்" என்றபோது எனக்குத் 'திக்'கென்றது.

"வினு, நான் சொல்றபடி நீ கேக்கலேன்னா, உன்னை ஊருக்கு அனுப்பி, ஹாஸ்டல்ல சேர்த்துடுவேன். அவ்வளவுதான்" அப்போதைக்கு வினுவை மிரட்டி வைத்துவிட்டாலும் உள்ளுக்குள் மார்க்குடன் இந்தப் பையனை அதிகம் பழக விடக்கூடாதென்று தோன்றியது. என் கணவரும் மார்க்கைக் கூப்பிட்டுப் பேசினார்.

"மார்க், வினு குழந்தை. உன்னையும், நீ சொல்வதையும் அவனால் புரிந்து கொள்ள முடியாது. அவன் தன் ஒத்த வயதுடைய பையன்களுடன்தான் விளையாட வேண்டும். அவன் உன்னிடம் பேச வந்தாலும் நீ அவனை ஊக்குவிக்காதே."

வினுவும் மெள்ள மெள்ள 'பேட்மிண்டன்', 'பியானோ', 'செஸ்' என்று மும்முரமாகிவிட்டான். ஆனால் மார்க் விவகாரம் முற்றத் தொடங்கியது.

நான் அடுப்பில் அப்பளம் பொரித்துக் கொண்டிருந்தேன். மார்க் பாத்திரங்களைச் சுத்தம் செய்துகொண்டிருந்தான். பாத்திரம் கீழே விழும் ஓசை கேட்டு எரிச்சலுடன், "என்ன மார்க்..." என்றேன். அவன் பக்கம் திரும்ப நான் அதிர்ந்துவிட்டேன். அவன் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். கண்களால் ஏதோ இரைஞ்சுவதுபோல் இருந்தது. ஆனால் அவன் உண்மையில் வேறு ஏதோ உலகத்தில் இருந்தான். நான் அடுப்பை அணைத்துவிட்டு வெளியே வந்துவிட்டேன். அதற்குப் பிறகு அவனுடைய கவனம் வேலையில் முழுமையாக இல்லை. அவனை வேலையைவிட்டு அனுப்பவும் மனம் வரவில்லை. என் கணவர் அவனிடம் பேசிப் பார்த்தார்.

"எனக்குப் பயமாக இருக்கிறது. மேடம்தான் எனக்கு உதவணும்" என்று தடுமாற்றத்துடன் பேசினானாம்!

"மேடம் உனக்கு என்ன செய்ய முடியும்?"

"என் சொப்பனத்தில் மேடம்தான் என்னைக் காப்பாற்றினார்; எனக்குத் தெரியும் மேடமிடம் அந்த பவர் இருக்கு; அவர் தினமும் விளக்கு முன்னாடி உக்காந்து ஜபிக்கிறாரே" தேம்பித் தேம்பி அழுத அவனை முதுகில் தட்டிச் சமாதானப்படுத்துவதைத் தவிர வேறுவழி தெரியவில்லை அவருக்கு.

"நீ வேணுமானா லீவுல போயேன்" என்னுடைய கருத்தை அவன் ஒட்டுமொத்தமாக நிராகரித்துவிட்டான்.

"நான் வெளியில போனா அது என்னை பிடிச்சுண்டு..." மேலே கேட்கத் துணிவில்லாமல் தலையைக் கையில் பிடித்துக் கொண்டு வெளியேறினேன். அவனை மனோதத்துவ வைத்தியரிடம் அழைத்துச்

செல்வதா, வேலையை விட்டு அனுப்பி விடுவதா? திடீர் திடீரென்று, முதுகில் யாரோ என்னையே பார்த்துக்கொண்டிருப்பது போல குறுகுறுக்கும். தலையைத் திருப்பினால் வெகு அருகில் மார்க் நின்று கொண்டிருப்பான். நான் பார்த்தவுடன் ஓடிவிடுவான். நான் அவனைப் பலமுறை எச்சரித்தேன்.

"வேலை முடித்துவிட்ட பின் உன்னை இந்த வீட்டருகில் பார்க்கக் கூடாது. உன் வீட்ல இருக்கணும்; இல்லேன்னா வெளியே எங்கேயாவது போயிடணும். இன்னொருமுறை இப்படி பாத்தேன்னா நீ இங்க வேல செய்யமுடியாது; அப்புறம், அவ்வளவுதான்" கண்டிப்பாகத்தான் நான் பேசினேன். அவன் தலையாட்டினானே தவிர, என்னைத் தொடர்வதை நிறுத்தவில்லை. எந்த நிமிஷம் அவன் என்னை.. என்ன செய்வான். நினைக்கவே பயமாக இருந்தது.

"என் கணவர் எனக்கு தைரியம் அளித்து, பணிக்குச் சென்றாலும் பகலில் பல முறை தொலைபேசியில் ஏதாவது காரணம் கூறிப் பேசத் தொடங்கினார். மார்க் சகாப்தம் முடியும் வேளை வந்து விட்டதென்று இறுதியில் நாங்கள் தீர்மானித்தோம்.

ஒரு ஞாயிறு பகல் உணவுக்குப் பிறகு அவனைக் கூப்பிட்டோம். "மார்க், அடுத்த மாதம் நாங்க எங்க ஊருக்குப் போறோம். உனக்குச் சேர வேண்டிய பணத்தை, நாளை மறுநாள் - முதல் தேதி- வாங்கிக் கொண்டு போ" என்று எங்கள் முடிவைக் கூறினோம்.

அடுத்த நாள் மார்க் வேலைக்கு வரவில்லை. தோட்டத்தின் மூலையில் இருந்த அவன் வீட்டருகே வினுவை அனுப்பினேன். வினு வீட்டின் கதவு உள்ளே தாழிடப்பட்டிருப்பதாகச் சொன்னான். திகிலுடன் என் கணவர் சென்று கதவைத் தட்டினார். சற்று நேரத்திற்குப் பிறகு பயமறைந்த முகத்துடன் மார்க் கதவைத் திறந்தானாம். உரத்த குரலில் ஏதோ பாடிக் கொண்டிருந்தானாம்.


"மார்க், நீ எப்ப போகப்போற?" என் கணவரின் கேள்விக்குப் பதில் இல்லை. இன்னும் இருமுறை கேட்ட பிறகு, "நானா... நான் எங்கேயும் போகமாட்டேன். போனா அழிஞ்சுடுவேன். நான் போக மாட்டேன்" மந்திர உச்சாடணம் போல் சீரான குரலில் மீண்டும் மீண்டும் அதையே சொல்லிக் கொண்டிருந்தானாம்.

"ஆபீஸிலிருந்து உள்ளூர்க்காரன் யாரையாவது அழைச்சுண்டு வரேன். இது முத்திப் போச்சு" என்றபடி என் கணவர் அலுவலகத்துக்குச் சென்றார். வினுவும் பள்ளிக்குச் சென்றபின் கதவைத் தாழிட்டுக் கொண்டு நான் வீட்டினுள்ளேயே இருந்தேன். மார்க் பெரும் குரலில் அடிபட்ட மிருகத்தைப் போல் ஓலமிடுவது காதுகளில் அறைந்தது. அவன் சாமான்களை எடுத்து வெளியில் வீசிவிட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டு வந்து எங்கள் வீட்டினுள் உட்கார்ந்து, பிறகு மார்க் தன் துணி மூட்டையுடன் 'கேட்'டை விட்டுப் போவதைப் பார்த்தபின்தான் அவர் அலுவலகத்துக்குத் திரும்பினார்.

வெகு நாட்களுக்கு மார்க்குக்கு நான் உதவவில்லையென்ற குற்றவுணர்ச்சி என்னை வாட்டியது. 'அவனுடைய மனச் சிதைவுக்கு நான் எப்படிக் காரணமாவேன்' என்று எவ்வளவுதான் மனதைச் சமாதானப்படுத்தினாலும் மார்க்கின் இறைஞ்சும் கண்கள் என் மனதைவிட்டு அகல மறுத்தன. என் புறக்கணிப்பு அவனுக்குப் பாதகமாக ஆகலாமென்று நினைத்தபோது மனம் கனத்தது.

எதிர்த்த வீட்டின் வேலைக்காரி ஒரு நாள் கூறினாள், "அம்மா, நல்லவேளை நீங்கள் மார்க்கை அனுப்பினீர்கள். அவனுக்குப் பேய் பிடித்திருக்கிறது. மாதா கோயில் பாதிரியாரும் அவனைப் பேயோட்டியிடம் கொண்டுபோகச் சொல்லிவிட்டாராம். அடுத்த மாதம் அவன் ஊருக்குப் போய்விடுவானாம். அவர்கள் அடித்து அடித்துதான் அவனைச் சரியாக்கணும்" என்றாள்.

நான் பதிலேதும் கூறவில்லை. ●





"ஆபரேஷன் முடிஞ்சு ஒரு மாசம் ஆச்சே...! எப்ப டாக்டர் வீட்டுக்கு அனுப்புவீங்க..?"

"இன்னும் எனக்கு ஒரு லட்ச ரூபா கடன் இருக்குங்க...!"





"இந்த மருந்தை தினம் 12 வேளை சாப்பிடச் சொல்றீங்களே... எப்படி டாக்டர் ஞாபகம் வச்சுக்கறது?"

"ரொம்ப சுலபம். ஒவ்வொரு சீரியல் முடிந்தவுடன் ஒரு கரண்டி சாப்பிடுங்க...!"

- தேனி எஸ்.மாரியப்பன்

கடன் இருக்கே...

"உங்க மாமியாருக்குத்தான் ஒண்ணும் இல்லையே. அப்புறம் ஏம்மா எக்ஸ்ரே, ஸ்கேன் எல்லாம் எடுக்கணும்னு அடம்பிடிக்கிறே?"

"அவங்க மனசுல என்னைப் பத்தி என்ன நினைக்கிறாங்கன்னு தெரிஞ்சுக்கத்தான்!"





"நாளைக்கு ஆபரேஷன் பண்ண வேண்டிய நோயாளியைக் காணலை, டாக்டர்!"

"பிழைச்சுட்டுப் போறார்... விடுங்க!"

- லீலாஜி

5ம் ஆண்டு நினைவு அஞ்சலி



1917-2001

கம்பம் R.K. ராமலிங்கம் பிள்ளை

(அப்பிபட்டி)

"நற்பண்புகளைப் போதித்து எம்மை நல்வழிப்படுத்தி இறுதிவரை கண்ணியத்துடன் வாழ்ந்து மறைந்த எம் தந்தைக்கு கண்ணீர் அஞ்சலி" -குடும்பத்தினர்

நடக்குமென்பார்; நடக்கும்

மேஷம் : நம்பிக்கையுடன் எந்தக் காரியத்திலும் வெற்றி வாகை சூடும் வாரம். பொருளாதாரம் மேன்மை அடையும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். தடங்கல் விலகித் திருமணம் கைகூடும். தொலைதூரப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். வியாபாரத்தில் நல்ல வருவாய் ஏற்படும். ஆஞ்சநேயர் / குரு / ராகு / கேதுவை வழிபாடு செய்தல் நற்பலன் அளிக்கும்.

ரிஷபம் : திருமணக் காரியம் கைகூடும். நண்பர், உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். வீடு / மனை வாங்க நல்ல காலம். எதிர்பார்த்த காரியம் கைகூடும். உடல் ஆரோக்கியம் சீராகும். சுபகாரியப் பேச்சு வார்த்தை இனிதாக முடிவு பெறும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் கிட்டும். உத்தியோகத்தில் நல்ல பெயர் ஏற்படும். ராகு / கேது வழிபாடு செய்து வரவும்.

மிதுனம் : மறைமுக எதிர்ப்புகள் இருந்தாலும், பண உதவி கிடைக்கும். மன உளைச்சல் தீரும். நண்பர் / உறவினர் அனுகூலம் ஏற்படும். திருமணம் கைகூடும். உடல்நிலை நன்றாக இருக்கும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி காணும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். குரு வழிபாடு நற்பலனைத் தரும்.

கடகம் : சுபகாரியம் கைகூடும். புதிய வீடு / வாகனம் வாங்குவீர்கள். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை தேவை. வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். வெளியூர்ப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். வழக்கு வெற்றி அளிக்கும். நீண்டகாலமாக முடிவு பெறாத பிரச்னைகள் முடிந்து விடும். வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் மேன்மை ஏற்படும். ராகு / கேது / சனியை வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

சிம்மம் : குழப்பம் விலகி நற்பலன் தரும் வாரம். முயற்சி செய்யும் காரியத்தில் வெற்றி அளிக்கும். தடை விலகித் திருமணம் கைகூடும். கொடுக்கல், வாங்கல் நற்பலனை அளிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். வராத பணம் கைக்கு வந்து சேரும். மனத்தில் தைரியம் ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காண்பிக்கும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்து வரவும்.

கன்னி : முன்னேற்றமான வாரம். சுபநிகழ்ச்சி கைகூடும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். வெளியூர்ப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். வியாபாரத்தில் நல்ல வருவாய் ஏற்படும். புதிய தொழில் முயற்சி கைகூடும். வீடு / வாகனம் வாங்க நல்ல தருணம். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். செலவுகள் சுபமானதாக இருக்கும். குரு வழிபாடு செய்து வரவும்.


துலாம் : நல்ல யோகமான வாரம். வாக்கு, தனம், மேலோங்கும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். தீராத சிக்கல்கள் தீரும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படாது. உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். புதிய தொழில் கைகூடும். சனி / ராகு / கேது வழிபாடு செய்துவர, நற்பலன் பெருகும்.

விருச்சிகம் : மேன்மையான வாரம். நண்பர், உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். ஏக காலத்தில் பல தொழில் செய்ய நேரிடும். கொடுக்கல், வாங்கல் நன்றாக இருக்கும். உடல்நிலை நன்றாக இருக்கும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். வெளிநாடு தொடர்புள்ள வேலை அமையும். திருமணக் காரியம் கைகூடும். ராகு / கேதுவை வழிபட்டு வரவும்.

தனுசு : தெய்வபலம் நிறைந்த வாரம்.

தஞ்சை பரத்வாஜ்





வாக்கு, கல்வி, தனம் மேலோங்கும். சுப நிகழ்ச்சி கைகூடும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். முயற்சி செய்த காரியம் பலன் அளிக்கும். புதிய தொழில் தொடங்க அனுகூலமான காலம். பூமி மூலம் ஆதாயம் ஏற்படும். குரு / சனி வழிபாடு செய்து வர, நற்பெயர் உண்டாகும்.

மகரம் : திருமணக் காரியம் கைகூடும். நெருங்கியவர்களை விட்டு விலகிச் செல்ல நேரிடும். வாக்கு நாணயம் காப்பாற்றப்படும். யாருக்கும் ஜாமீன் போடக் கூடாது. உடல் ஆரோக்கியத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கவும். வாக்கு வாதத்தைத் தவிர்க்கவும். புதிய தொழில் முயற்சியில் அனுகூலம் ஏற்படும். ராகு / கேது சனி வழிபாடு உத்தமம்.

கும்பம் : மன நிறைவான வாரம். சத்ரு தொல்லை விலகும். கொடுக்கல், வாங்கல் நன்றாக இருக்கும். வராத பணம் வந்து சேரும். வாக்கு வெற்றி அளிக்கும். சொத்துகள் வாங்க நல்ல காலம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கல்வி வளம் மேலோங்கும். ராகு / கேது / குரு வழிபாடு உத்தமம்.

மீனம் : சிறப்பான வாரம். மனக் கிலேசம் விலகும். வெளிநாட்டுப் பணி கிடைக்கும். திருமணம் கைகூடும். புதிய முயற்சி கைகூடும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். வராத நிலுவை வசூலாகும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். வீடு / வாகனம் வாங்க நல்ல தருணம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கல்வி நிலை ஓங்கும். நண்பர், உறவினரால் ஆதாயம் கிட்டும். அந்நிய நாட்டு மனிதர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். ஆஞ்சநேயரை வழிபாடு செய்தால், நற்பலன் கிட்டும்.

5.11.2006 முதல் 11.11.2006 வரை

பொல்லாங்கும்

"உடம்பை வளர்த்தார். உயிர் வளர்த்தாரே" என்பது திருமூலரின் வாக்கு. உடல் நலத்தைப் பேண எண்ணற்ற உடற்பயிற்சிகள் இருக்கின்றன. ஆனால் யோகா உடலோடு உள்ளத்தையும் வளப்படுத்தி, நலப்படுத்தும் பணியைச் செய்கிறது என்கிறார் 'கிருஷ்ணமாச்சாரியார் யோக மந்திர'த்தின் மேனேஜிங் டிரஸ்டி தேசிகாச்சாரி. இனி அவருடனான சந்திப்பிலிருந்து...

யோகா நிலைகள் என்பது என்னென்ன?

யோகா ஆசனம் மட்டுமல்ல. மனத்தின் சலனங்களைப் போக்கி, நிம்மதியைத் தந்து கவனத்தை நிலை நிறுத்தக்கூடிய கற்பகத்தரு.

பொதுவாக, எட்டு யோக நிலைகள் உள்ளன.

யமம் : பொய், புறங்கூறல், திருட்டு போன்றவற்றை நீக்கி ஒழுக்கம், பிரம்மச்சர்யம், தூய்மை துலங்கும் நிலை தருவது யமம்.

நியமம் : உணவுமுறை, சுயபரிசோதனை பேராசைகளைத் தவிர்த்து விருப்பு வெறுப்பற்ற தன்மையை அடைவது.

ஆசனம் : உடல் நலம் பேணிக்காக்கும் பயிற்சி முறைகளை உள்ளடக்கியது.

பிரணாயாமம் : இதில் பல்வேறு முறைகள் உள்ளன. மூச்சினை உள்ளுக்கு இழுத்து வெளிவிடும் முறைமைகளை ஒழுங்கு செய்து மன அமைதி கிடைக்கச் செய்தல்.

பிரத்தியாகாரம் : புலன் ஒழுக்கம் நிலை நிறுத்துப் பெறுவது.

தாரணம் : கவனம் தியானத்துக்கு தேர்ந்தெடுக்கும் ஒன்றில் கவனம் கொள்வது.

தியானம் : கவனத்தின் தன்மையை தானே விலகி நின்று பார்ப்பது.

தன்மயம் (அ) சமாதி

தன்னை மறத்தல், அதுவாகிப் போதல்.

இந்த ஒவ்வொரு நிலையும் ஒவ்வொரு படிகள்.

யோகாவின் நோக்கம்தான் என்ன?

எது உங்களது விருப்பமோ, எது உங்களுக்கு வேண்டுமோ அதை யோகா தரும். ஒரு கடவுள் உருவத்தை, ஒரு மலையை, ஏன் ஒரு பெண்சிலைக் கூட உங்கள் தேர்வாகக் கொள்ளலாம். எதை யோகாவின் மூலம் நீங்கள் மையப்படுத்துகிறீர்களோ அதுவாக நீங்கள் ஆகலாம்.

கற்றுக் கொடுத்து வரும் விஷயமா யோகா?

குருவின் அவசியத்தைப் பதஞ்சலியே குறிப்பிட்டுள்ளார். வெறும் ஆர்வம் மட்டுமே ஒரு காரியம் ஆகிவிடாது. அதை

ஆரோக்கியமான விஷயம்!

யோகா புத்தகங்கள் அதிகளவில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறதா என்று குமரன் பதிப்பகத்தில் அதன் உரிமையாளர் வைரவனிடம் கேட்டபோது...

"யோகா பற்றி அறிந்து கொள்வதில் இன்றைக்கு இளைஞர்கள் அதிக முனைப்போடு இருக்கிறார்கள். எங்கள் பதிப்பகத்தில் ஆரோக்கிய வாழ்வுக்கு யோகாசனங்கள், யோகா சிகிச்சையும் செய்யும் முறையும், இளமைக்கு ரகசிய வழிகள் என மூன்று வித புத்தகங்களும் ஒரு வருடத்துக்கு ஆயிரம் புத்தகம் என மூன்றும் சேர்த்து முப்பதாயிரம் புத்தகங்கள் விற்பனையாகின்றன. யோகாவைப் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே பரவிவருவது ஆரோக்கியமான விஷயமே!

செய்யும் யோகா!

டி.கே.வி. தேசிகாச்சாரி

முறைப்படுத்த, சரிசெய்ய, குறைநிறைகளைச் சுட்டிக்காட்ட நிச்சயம் குரு என்கிற ஆசிரியர் தேவைப்படுகிறார்.

யோகா மத சம்பந்தபட்ட விஷயமா?

இல்லை. இது மனிதர்களுக்குப் பொதுவான விஷயம். என் தந்தை கிருஷ்ணமாச்சார்யாரிடம் இந்து, முஸ்லிம், கிறித்துவ மதங்களைச் சார்ந்த பல பேர் யோகம் பயின்று இருக்கிறார்கள். எங்களது சென்டரில்கூட எல்லா மத மாணவர்களும், ஆசிரியர்களும் உண்டு.


மிகக் குறைந்த காலகட்டத்தில் யோகாவில் ஏன் மக்களுக்கு இவ்வளவு ஈர்ப்பு?

எந்த ஒரு விஷயமுமே மேற்கத்திய நாடுகளில் பிரபலமடைந்தால் அதை நாமும் கொண்டாடிச் செய்வது என்பது வருத்தத்துக்குரிய ஒன்று. அந்த விதத்தில் அமெரிக்காவின் தெருவுக்குத் தெரு யோகா முழக்கங்கள். அதைப் பார்த்து நமக்கும் யோகா கிரேஸ்!

நீங்கள் கூறியபடி தெருவிற்குத் தெரு இருக்கும் யோகா சென்டர்களால் சாதக, பாதகங்கள் எப்படி இருக்கும்?

சரியான முறையான ஆசிரியரால் வழங்கப்படும் யோகப் பயிற்சி, நோயை நீக்கி பரிபூரண வாழ்வளிக்கும். முறையற்ற, அனுபவமில்லா அரைகுறைகளால் சொல்லித் தரப்படும் பயிற்சிகள் நல உடலையும் சீர்கேடு அடைய வைக்கும். உதாரணத்துக்கு எங்கள் சென்டருக்கே நிறைய பேர் இந்தக் குறைகளோடு வருகிறார்கள் - அங்கு போனேன் முதுகுவலி, இவர் சொல்லித் தந்தார் கழுத்து வலி என்று.

இவ்வாறு அனுபவமும், முறையான பயிற்சிமுறையும் இல்லாத நபர்களிடம் கற்றுக் கொள்வதால் தண்டுவட வலி, கழுத்து வலி, தூக்கமின்மை, எலும்புத் தேய்மானம் போன்ற பல வியாதிகள் வர வாய்ப்புண்டு.



உங்களது நிறுவனத்தின் பயிற்சி முறைகள் எப்படி?

நாங்கள் இரண்டரை வருட பயிற்சிக்குப் பின்னரே ஒருவருக்கு ஆசிரியர் என்ற பட்டத்தை வழங்குகிறோம். இப்பயிற்சியில் ஐந்து செமஸ்டர். மூன்று சப்ஜக்ட் மற்றும் ப்ராக்டிகல் வகுப்புகளும் உண்டு. யோகாவுடன் உடலியல் ஆயுர்வேதா, மேற்கத்திய கிழக்கத்திய உளவியல் போன்றவற்றையும் பாடமாக வைத்துள்ளோம்.



எந்த வயதினர் உங்களை அதிகம் நாடுகிறார்கள்?

எல்லா வயதினரும் வருகிறார்கள். பிரச்னை என்றால் வருவார்கள். தீர்ந்தால் போய்விடுகிறார்கள்.

சந்திப்பு : **அருணா. செந்தில்**
படங்கள் : **பொள்ளாச்சி சுந்தரம்**



– ஸ்ரீநிதி கார்த்தி

கொலுசு போட்டுக் கொள்ளும் வயதில் காலில் சலங்கை கட்டிக் கொண்டேன். ஆம்; மூன்று வயதிலேயே என்னை பரத நாட்டிய வகுப்புக்கு அனுப்பி விட்டார்கள். அம்மாவும், அப்பாவும் பிஸியான டாக்டர்கள். ஆதலால் ஜானகி பாட்டிதான் (அம்மாவின் அம்மா) என்னைக் கவனித்துக்கொண்டார். நான் பெரிய டான்ஸராக வேண்டும் என்ற கனவில் என்னை வளர்த்தவர் ஜானகி பாட்டி. எல்.கே.ஜி.யிலிருந்து +2 வரை படித்தது குட்ஷெப்பர்டு கான்வென்ட்டில்தான்! மாலையில் பள்ளி விடுவதற்கு முன்னரே பாட்டி கையில் தேநீரோடும், ரொட்டி ஸ்லைஸ்களோடும் காத்துக் கொண்டிருப்பார். அப்படியே போயஸ்கார்டனிலிருந்து குரு கமலா லட்சுமணன் வீட்டுக்குப் போய் விடுவோம். சில காலம் கழித்து சுவாமிமலை ராஜரத்தினத்திடம் கற்றுக்கொண்டேன். அவர் வீடு சாவி கிராமத்தில் இருந்தது. ஏழு வயதில் அரங்கேற்றம் மியூஸிக் அகாதமியில், அப்போது கவர்னராக இருந்த பிரபுதாஸ் பட்வாரி முன்னிலையில் நடந்தது.

என் வாழ்க்கையில் நாட்டியமும், படிப்பும் இரு கோடுகளாக வந்து கொண்டிருக்கின்றன. பள்ளியில் எல்லா வகுப்புகளிலும் நான்தான் முதல்ரேங்க்! அதன்பின் எம்.எம்.சி.யில் மருத்துவப் படிப்பில் சேர்ந்தேன். முதல் நாலைந்து மாதங்கள் ராகிங் கலாட்டாக்களில் மாட்டிக் கொண்டேன். கோபம், வெறுப்பு ஏற் படாத வகையில் சின்னச் சின்னக் குறும்புகள். எம்.எம்.சி. வாசலில் ஒரு மாணவர் கண்ணைக் கட்டிக்கொண்டு ஜிங்-சக் போட, என்னை அங்கேயே டான்ஸ் ஆடச் சொன்னார்கள்; ஆடினேன். அப்புறம் காலேஜ் கல்சுரல்ஸ் மற்றும் விழாக்களில் முக்கிய அமைப்பாளராகிவிட்டேன். எம்.பி.,பி.எஸ். படித்து முடித்து ஹவுஸ் சர்ஜன் ஆகி, சென்னையில் பல மருத்துவமனைகளில் வேலை செய்தேன். குறிப்பாக, கோஷா மருத்துவமனையில் டியூட்டி பார்த்த அனுபவம் மறக்க முடியாதது. அங்கே எல்லாமே பழைய காலத்து கட்டடங்கள். ஒன்றுக்கொன்று இடைவெளி விட்டு கட்டப்பட்டிருக்கும். ஒரு பிளாக்கிலிருந்து மற்றொரு பிளாக்குக்கு நள்ளிரவில் செல்ல வேண்டுமென்றால், தோளில் மாட்டியிருக்கும் ஸ்டெத் படபடக்கும் அளவுக்கு நடுங்குவோம். இதற்குக் காரணம் என் தோழிகள் ஏற்படுத்திய ஆவி, காத்து, கறுப்புப் பயம்தான். பிறகு மருத்துவத்தில் பட்ட மேற்படிப்பையும் எம்.எம்.சி.யிலேயே முடித்தேன்.

பூந்தமல்லி சாலையில் கீழே மருத்துவமனை; மேலே எங்கள் வீடு. பக்கத்தில் காது, மூக்கு தொண்டை நிபுணர் ராமலிங்கத்தின் வீடும் மருத்துவமனையும். டாக்டர் ராமலிங்கத்தின் மனைவி, எனது மாமியாரின் சகோதரி. வெளிநாட்டுக்குப் போய்ப் படிப்பையெல்லாம் முடித்துக் கொண்டு சென்னைக்கு வந்த கார்த்தி, ஒருநாள் அங்கு வந்திருந்தார். ஏதோ வேலையாக அங்கு சென்றிருந்த நான் அவரைச் சந்தித்தேன். நாங்கள் ஒருவரை

“வாசலில்

யொருவர் விரும்பியது ஒருபக்கம் இருக்க, என் பெற்றோர்களும் அவரது பெற்றோர்களும் எங்கள் திருமணப் பேச்சைத் துவக்கிவிட்டார்கள். கார்த்தி அவருடைய வீட்டில் ஒரே பையன்; நான் எங்கள் வீட்டில் ஒரே பெண். ஒருவகையில் Love cum-arranged marriage ஆகிவிட்டது.

பல பெண்கள் திருமணத்துக்கு முன்னர் வாழ்க்கை சந்தோஷமயமாக

வாழ்வின் மறக்க முடியாத நாட்கள் பற்றிப் பிரபலங்கள் பேசும் பகுதி

இருந்தது போலவும், அதன்பின் முடங்கிப் போய்விட்டது போலவும் புலம்புவார்கள். ஆனால் நான் மனம் கொள்ளா மகிழ்ச்சியுடன் துள்ளித் திரிவது என் மாமியார் வீட்டில்தான். நான் அவருக்குப் பெண்ணாகிவிட்டேன். இங்கு எனக்குக் கிடைக்கும் சுதந்திரத்தைப் பார்த்து எம் அம்மா 'நீ ரொம்பக் கொடுத்து வைத்தவள்' என்று சொல்லும்போது சந்தோஷம் பெருகிறது. ஒவ்வொரு முறை மேடையேறும்போதும் கடைசி நேரப் பரபரப்புகளையும் தாண்டி, முதலில் விநாயகர் ஸ்துதியில் துவங்கி, அலாரிப்பு, சப்தம், ஜதீஸ்வரம் என்று தொடர்ந்து, நிகழ்ச்சியை வெற்றிகரமாக முடிக்கும்போது கிடைக்கும் ஆத்மதிருப்தி இருக்கிறதே... அதற்கு இணை எதுவும் கிடையாது. அதிலும் குறிப்பாக, தஞ்சாவூர், சிதம்பரம் மற்றும் காஜுராஹோ ஆகிய இடங்களில் கோயில்களில் நடந்த என் நாட்டியங்கள் மறக்க முடியாதவை. ஒருமுறை, நிகழ்ச்சி பரபரப்பில் சலங்கையையே மறந்து வீட்டில் வைத்துவிட்டுப் போய் விட்டேன். அதை நினைத்தால் இன்னும் சிரிப்பு வருகிறது.

இருபத்தைந்து வருடங்களாக அரங்கங்களில் நாட்டிய ரசிகர்களைப் பார்த்து வருகிறேன். பல புதுமைகளைப் புகுத்தலாம் என்று மனது குறுகுறுக்கிறது. குறிப்பாக, நாட்டியத்துக்கு மெருகேற்றும் விதமாக மேடையில் ஒலி-ஒளிக் காட்சிகளை புகுத்த முடியும். அதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கிறேன்.



எங்கள் குடும்பத்துக் கலகலப்பைக் கூட்டியிருப்பவர் என் மகள் அதிதி. நான் படித்த அதே பள்ளியில்தான் அவளும் படிக்கிறாள். எனக்குத் தமிழ் ஆசிரியையாக இருந்தவர்தான் அவளுக்குத் தமிழ் ஆசிரியை.

என்னுடன் பள்ளியிலும் மருத்துவக் கல்லூரியிலும் படித்த சஞ்சனா, சுசனி, ஆக்யா ஆகிய தோழிகளோடு ஈமெயிலில் தொடர்பு கொண்டு அரட்டை அடிப்பது எனக்கு மிகவும் பிடித்த ஒன்று. வருடத்தில் சில நாட்கள் நாங்கள் சந்திக்கும் போது அடிக்கும் லூட்டி, டெஸிபலை ஏகத்துக்கு ஏற்றிவிடும்.

- ப்ரியன்

டான்ஸ் ஆடினேன்!”



ஜாலியா கண்டுபிடிங்க!



இங்கேயுள்ள படங்களில் கேரளத்துப் பைங்கிளிகளான கோபிகா, பாவனா, அசின் மூவரின் தலைகள் இடமாறியுள்ளன. அதனைச் சரியாகக் கண்டுபிடித்து, கல்கி பற்றி 'நச்'சென்று இரண்டு வரிகள் எழுதி அனுப்பவும். குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்படும் எட்டு நபர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

முடிவு தேதி : 13.11.2006

ஜாலியா கண்டுபிடிச்சு சீக்கிரம் அனுப்புங்க!





பரிசு ரூ.2,000



அற நூல்களைப் படித்து, அதன்படி நடப்பதே சுவர்க்கம்

மீனாட்சி கலிவெண்பா	ரூ.35.00
ல ராமாயணம்	ரூ.22.00
ல பாரதம்	ரூ.30.00
ல கந்தபுராணம்	ரூ.21.00
ணக் குழந்தைகள்	ரூ.33.00
ருகனைப் பாடிய மூவர் கதைகள்	ரூ.20.00
தங்கள் கூறும் தர்ம சாஸ்திரங்கள்	ரூ.30.00
ந்து மத நன்னெறிகளும் சம்பிரதாயங்களும்	ரூ.50.00
ந்து மத உபாக்கியானம்	ரூ.40.00
ம யாத்திரை (பத்ரி, கேதார், துவாரகா etc)	ரூ.35.00
n Introduction to the Vedas	ரூ.60.00
ோதிர்லிங்க தல யாத்திரை	ரூ.60.00
ஹாராஷ்டிர மாநில தல யாத்திரை	ரூ.40.00
ஙக்கிரக தல யாத்திரை	ரூ.70.00
பாமியின் பொன் மொழிகள்	ரூ.65.00
ருஅருள்மொழி திரட்டு விளக்கம்	ரூ.32.00
யர்ந்த மனிதர்களின் உன்னதமான கருத்துகள்	ரூ.36.00
லக மதங்கள் கூறும் நல்லுரைகள்	ரூ.35.00
ங்கல வாழ்வுக்கு மணியான யோசனைகள்	ரூ.24.75
ான்களின் அறிவுரைகள்	ரூ.35.00
ீ ராமகிருஷ்ண பரமஹம்சர்	ரூ.35.00
கில பாரத திருத்தல யாத்திரை (2 பாகம்)	ரூ.140.00
ம்மாழ்வார் நோக்கில் நவதிருப்பதிகள்	ரூ.35.00
யாய சாஸ்திர விளக்கம்	ரூ.20.00
லட்சண சாஸ்திரம்	ரூ.40.00
ரணத் தத்துவங்கள் 1008	ரூ.55.00
ரணக் கேள்விகள் 1008	ரூ.42.00
ரணத் தகவல்கள்	ரூ.30.00
டமொழி இலக்கியம்	ரூ.15.00
மாயணத்தில் உபகதா பாத்திரங்கள்	ரூ.20.00
ராமத்துத் தேவதைகள்	ரூ.65.00
கான் ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள்	ரூ.28.00

சைவ தத்துவம்

Dr. க.வ. தணிசே (தமிழில் கடிஸ்ரீ.ஸ்ரீ.) அனைத்து சைவ கோட்பாடுகளையும் அடக்கிய

ஒரே தமிழ் நூல் – ரூ. 100/–

பி.என். பரசுராமன்

அப்படாவக்ரர் உபதேசங்கள்	ரூ.35.00
பீஷ்மர் சொன்ன தத்துவக் கதைகள்	ரூ.60.00
பர்த்ருஹரியின் நீதி சதகம்	ரூ.21.00
பர்த்ருஹரியின் வைராக்கிய சதகம்	ரூ.20.00
சனத்குமாரரின் உபதேசங்கள்	ரூ.40.00
சித்தர்கள் சரித்திரம்	ரூ.35.00
பட்சப் பிரச்னம் – பிரச்னோத்ர ரத்னமாலிகா	ரூ.25.00
ஊருக்கு நல்லது சொல்வேன்	ரூ.50.00
அம்மன் சந்நிதி அற்புதங்கள்	ரூ.30.00
சித்ரகுப்தன் கதைகள்	ரூ.24.00
வாரியார் சொற்பொழிவில் கேட்டவை II	ரூ.33.00
மஹா ஸ்வாமிகள் மணிமொழிகள்	ரூ.40.00
நுணுக் துணுக்குகள்	ரூ.21.00

காஞ்சி காமகோடி ஜகத்குரு

பூஜ்யஸ்ரீ மஹா ஸ்வாமிகள் வரலாறு

(2 பாகங்கள்) ரூ. 500.00

சிலப்பியின் ஓவியங்கள் மற்றும் ஏராளமான புகைப்படங்களுடன்

A.V. சுகவனேச்வரன்

வேதம் வணங்கும் தெய்வங்கள்	ரூ.60.00
வேத காலத்தில் பெண்கள் நிலை	ரூ.30.00
வேதம் சொல்லும் கதைகள் –	ரூ.60.00
உள்ளம் கவரும் உபநிடதக் கதைகள் –	ரூ.22.00

கி.வா.ஜ

வழிகாட்டி (திருமுருகாற்றுப்படை விளக்கம்) –	ரூ.50.00
சுந்தாலங்காரச் சொற்பொழிவுகள் (6 பாகங்கள்) –	ரூ.735.00
கவி பாடலாம் –	ரூ.65.00
கிழவியின் தந்திரம் –	ரூ.15.00
சிரிக்க வைக்கிறார் கி.வா.ஜ. (சிலேடைகள்) –	ரூ.35.00

A.V. சுப்ரமணியம்

நயம் நிறைந்த நீதிகள்	
(சமஸ்கிருதத்திலிருந்து சுவையான நீதிகள்) –	ரூ.45.00
வடமொழி இலக்கிய வழிகாட்டி	
(வேதம் முதல் இன்று வரை) –	ரூ.60.00
கடவுளைக் கூப்பிடு –	ரூ.50.00
(ஆண்டவனின் அருளை அறுகுவது எப்படி)	

M. ராதாகிருஷ்ண பிள்ளை

தென்னாட்டுக் கோயில்கள் (4 Vols) –	ரூ.250.00
வடநாட்டுக் கோயில்கள் –	ரூ.42.00
சுகர் கூறிய கண்ணன் கதை –	ரூ.30.00
பாகவதக் கதைகள் –	ரூ.30.00
பாரத நதிகள் –	ரூ.16.50

பி.ஸ்ரீ

அறுபடை வீடுகள் (6 Vols) –	ரூ.210.00
ஆழ்வார்கள் வரலாறு (8 Vols) –	ரூ.306.00
கந்த புராணக் கதைகள் –	ரூ.40.00
நாரதர் கதை –	ரூ.25.00
நவராத்திரியின் கதைகள் –	ரூ.23.00
ராஜரிஷி விசுவாமித்திரர் –	ரூ.30.00
தாயுமானவர் –	ரூ.45.00
தசாவதாரக் கதைகள் –	ரூ.32.00
ஔவையார் –	ரூ.16.50

சுவையான கதைகள் – மெருகூட்டும் திருப்பங்கள் – நன்கு வடிக்கப்பட்ட குணச்சித்திரங்கள் – மனதைக் கவரும் ஸ்லோகங்கள் இவை ஒருங்கே அமையப்பெற்ற

சமஸ்கிருத நாடகங்கள் – எளிய தமிழில்

(ஏ.வி. சுகவனேச்வரன் – பி.எஸ். ராமமூர்த்தி எழுதியவை)

சாகுந்தலம்	– ரூ.28.00	சுவப்னவாசவதத்தம்	– ரூ.23.00
ரத்னாவளி	– ரூ.21.00	நாகானந்தம்	– ரூ.20.00
அபிமாரகம்	– ரூ.18.00	இரு ஓரங்க நாடகங்கள்	– ரூ.16.00
மிருச்ச கடிகம்	– ரூ.28.00		
முத்ரா ராக்ஷஸம்	– ரூ.22.00	மாளவிகாக்னிமித்ரம்	– ரூ.22.00

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

அல்லயன்ஸ்

புதிய எண். 64, (பழைய எண் : 244)
ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி எண்: 617, மயிலாப்பூர்,
சென்னை – 600 004, தொலைபேசி: 2464 1314
e-mail : srinivasan@alliancebook.com
visit us at : www.alliancebook.com

பண்பலையால் கண்ணீர் சீரியல்களுக்குப் பாதிப்பா?

● எஸ்.எஸ்.மணி, திருவனந்தபுரம்

? தேர்தல் முடிவுகள் கலைஞரின் வெற்றியா? அம்மாவின் தோல்வியா?

! எண்ணிக்கை அடிப்படையில் கலைஞரின் வெற்றி; அவர் கூட்டணியில் தோன்றிய சலசலப்பு, அது கலகலத்துப் போகும் அளவுக்கு முற்றியிருப்பதால் அம்மாவின் வெற்றி!

● ஆரூர் சேகர், சென்னை - 94

? டாஸ்மாக் ஊழியர்களுக்குப் பத்து சதவிகிதம் தீபாவளி போனஸ் போதவில்லையாமே?

! விற்பனை அதிகரித்திருந்தாலும் தமிழக மக்கள் தங்கள் கவலைகளை மறக்குமளவுக்கு அவர்களுக்குப் போதை ஏற்றியது போதவில்லை என்று தமிழக அரசு கருதுகிறதோ, என்னவோ!

● டி.முருகேசன், திருவாரூர்

? விஜயகாந்தை ஜெயலிதா குடிகாரன் என்று சொல்லியிருப்பது சரியா?

! "நான் அவரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை; பொதுவாக அரசியல்வாதிகள் பற்றிப் பேசினேன்" என்ற விளக்கம், ஓர் அநாகரிகப் பேச்சை, அநாகரிகத்தின் உச்சிக்கே கொண்டு சென்றுவிட்டது!



• மெய்வழி வாழ்த்து!



• அழுகல் அரசியல்!

● உஷா, சென்னை - 4

? சமீபகாலமாக தனியார் பண்பலை வானொலி நிலையங்கள் நிறைய தொடங்கப்பட்டுள்ளனவே... இதனால் தொலைக்காட்சியின் 'மவுசு' - குறிப்பாக அழுகை சீரியல்கள் பார்ப்போரின் எண்ணிக்கை, கணிசமாகக் குறையும் அல்லவா?

! அப்படிக் குறைந்ததாகத் தெரியவில்லை; எஃப்.எம்.மை பெரும்பாலும் பயணங்களின்போதோ, டி.வி. தொடர்கள் முடிந்த பின்னிரவிலோதான் ரசிகர்கள் கேட்கிறார்கள். இந்த எஃப்.எம். நிகழ்ச்சிகள் பலவற்றுள் செக்ஸ் புகுத்தப்பட்டு, மக்களின் ரசனையும் ஒழுக்கமும் வெகுவாகக் குறையும் அபாயம் நிறைய.

● ஸ்ரீ வித்யா காளிதாஸ், சிதம்பரம்

? பாக். நியூசிலாந்து இடையேயான மொஹலி கிரிக்கெட் போட்டியைத் தடுக்கப்போவதாகக் கூறுகிறதே சிவசேனா?

! பாகிஸ்தான் இந்தியாவுடன் கிரிக்கெட் விளையாடுவதை எதிர்ப்பது பிஞ்சு அரசியல்; பாகிஸ்தான் இதர நாடுகளுடன் ஆடுவதை எதிர்ப்பது அழுகல் அரசியல்.



• குதிருக்குள் அப்பன்!



• விபரீத விளக்கம்!

தராசு

● சி.கார்த்திகேயன், சாத்தூர்

? அப்துல் கலாமின் பிறந்தநாளை நம் நாடு அவ்வளவு சிறப்பாகக் கொண்டாடியதாகத் தெரியவில்லையே?

! அவரது பிறந்தநாளைக் கொண்டாடுவதைவிட, அவர் சொல்லும் யோசனைகளை, வழிமுறைகளைக் கொண்டாடி நடைமுறைப்படுத்துவோம். அவருக்குச் செய்யும் உண்மையான மரியாதை அதுதான்!

● ஏ.எஸ்.யோகானந்தம், கலிங்கியம்

? 'நடிப்புலக நடிகன் நாயகம்' என்று பிறந்தநாளைப் போஸ்டரில் குறிப்பிட்டு கமலைப் பிரச்னையில் மாட்ட வைத்த ரசிகர்கள் பற்றி...?

! கடவுளை மறுக்கும் கமலை, இரட்டிப்புச் சங்கடத்துக்குள்ளாக்கி விட்டார்கள்!

● ஆ.கண்ணதாசன், சென்னை-87

? இந்தியாவில் படித்தவர்களை மதித்திருந்தால் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றிருப்பார்களா?

! படித்தவர்கள் என்பது வேறு; ஆற்றல் மிக்கவர்கள் என்பது வேறு. மதிப்பது வேறு; பயன்படுத்திக் கொள்வது வேறு. மேல்நாடுகளில், ஆற்றல்மிக்கவர்களை இனம் கண்டு, முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் சாணக்கியம் அதிகம். அந்தப் போக்கு இந்தியாவிலும் இன்று துளிர்விட ஆரம்பித்திருக்கிறது.

● தூசிமுத்து, சென்னை - 11 ❐

? உள்ளாட்சித் தேர்தலைக் குறித்த ஓர் அலசல் கூட்டத்துக்கு அரசு அனுமதி மறுத்துவிட்டதே?



! இது அடிப்படை உரிமைகளின் மீறல் என்பதுடன் 'என் அப்பன் குதிருக்குள் இல்லை' என்கிற மாதிரியான தி.மு.க.வின் ஒப்புதல் வாக்குமூலம்!

● எஸ்.கருணையானந்தம், உசிலம்பட்டி ★

? அரசு ஊழியர் ஒருவர், ஒரு கம்பெனியிலிருந்து இலவசமாக ஏதாவது பெற்றால் அது 'லஞ்சம்!' ஆனால் அரசாங்கமே நூற்றுக்கணக்கான கார்களை, கம்பெனியிடமிருந்து இலவசமாகப் பெறுகிறதே - அதற்கு என்ன பெயர்?

! 'அன்பளிப்பு' என்று பெயர். அதற்கு ஈடாக நிறுவனம் அரசிடமிருந்து 'பெற'க்கூடியவற்றுக்குச் 'சலுகைகள்' என்று பெயர். ●

● இரட்டைச் சங்கடம்!



ரூ.100 பரிசு பெறுபவர் :
தூசிமுத்து,
25, முனியப்பன் தெரு,
பெரம்பூர்,
சென்னை - 600 011.

ரூ.50 பரிசு பெறுபவர் :
எஸ்.கருணையானந்தம்,
கார்த்தி ஸ்டோர்,
முருகன் கோயில் தெரு,
உசிலம்பட்டி - 625 532

தத்தரிகிட தித்தோம்!

ஸ்ரீபுரம் இரண்டு இடங்களில் இருப்பதாகக் கணக்கு. சில முறைகளில் ஸ்ரீபுரம் என்பது எங்கே இருக்கிறது என்றால், அண்ட-பகிரண்டத்துக்கும் மேலே, எல்லாவற்றுக்கும் மேலே இருக்கக்கூடியது ஸ்ரீபுரம். இன்னொரு கணக்கு என்னவென்றால், மேருமலைக்கு மேலே இருக்கக்கூடியது ஸ்ரீபுரம்.

இதையே அம்பாள் உபாஸனையிலே மானசிகமாக, ஆத்மார்த்தமாக உபாஸனை செய்யக்கூடிய முறையில் அந்த ஸ்ரீபுரம் எங்கே இருக்கிறது என்றால், மனித உடலில் பிரம்மரந்திரத்துக்கு மேலே சஹஸ்ராரகமலம் என்று சொல்லக்கூடிய இடத்தில் இருக்கிறது என்பது ஒரு கணக்கு. - இது தந்திரயோக மார்க்கம்.

இதைத் தவிர, பக்தி மார்க்கத்தில் சொல்லப்படுவது என்னவெனில், அவரவர் மனத்தில் இருக்கக்கூடிய அம்பிகையின் வாஸஸ்தலம்தான் ஸ்ரீபுரம். அபிராமி பட்டர் அவளை 'அந்தரி' என்று குறிப்பிடுவார். உள்ளுக்குள்ளே - மனத்துக்குள்ளே - அந்தரத்தில் வாஸம் செய்யக்கூடியவள் அந்தரி. துர்கா தேவிக்கே அந்தரி என்று ஒரு பெயர் உண்டு.

'அந்தரி சூட்ட கனாக் கண்டேன்' என்று ஆண்டாள் நாச்சியார் திருமணக் கனவைப் பாடினாளே... கண்ணனுடனான அவள் திருமணத்தில் 'அந்தரி' வந்து அவளுக்குக் கூறைப் புடைவை உடுத்தி விடுவதாகக் கனவு! கூறைப் புடைவை உடுத்திவிடும் அந்த அந்தரி யார் என்றால், மாப்பிள்ளையான கண்ணனின் சகோதரி ஸ்தானத்தில் உள்ள அம்பிகைதான் :

இந்திரன் உள்ளிட்ட தேவர்குழாம் எல்லாம்
வந்திருந்தென்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரக்கோடி உடுத்தி மணமாலை
அந்தரி சூட்ட கனா கண்டேன்...

அந்தரி என்பது அம்பிகையின் பெயர். நம் மனத்துள் வாஸம் செய்பவள் அந்தரி.


அக்னி குண்ட ஸம்பூதா; **தேவ கார்ய ஸமுத்யதா** 'தேவகார்யத்தை நிறைவேற்றுவதற்காக அக்னிகுண்டத்திலிருந்து தோன்றியவள்' என்று பொருள். தேவ காரியம் என்றால் என்ன...? தேவர்கள் யாகம் செய்தார்கள். அந்தத் தேவர்களுடைய காரியத்தை ஸித்தி செய்வதற்காக, அவர்கள் கேட்டுக் கொண்ட மாதிரி பண்டாஸுரனை வதம் செய்வதற்காக, தேவர்களுக்கு அவர்களுடைய ராஜ்யத்தை மீட்டுத் தருவதற்காகத் தோன்றியவள் - என்று பொருளாகிறது. இதை இப்படியே விட்டோமானால் இந்த கதையோடு இந்த நாமத்தின் பொருள் முடிந்து போகும். ஆனால், அங்கே சிறியதாக ஓர் அக்ஷரம் வந்து சேர்ந்தது... ஓர் அக்ஷரம் என்பதை விட இரண்டு அக்ஷரங்கள் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்.

சத்-சித்-ஆனந்தம்

வெறும் 'அக்னி குண்ட' ஸம்பூதா என்று சொன்னால் அது தேவேந்திரன் பண்ணிய யாகத்தை மட்டுமே குறிக்கும். 'சிதக்னி' என்று சொல்கிறபோது, அது நமக்கு உள்ளே இருக்கக்கூடிய 'சித்' என்பதைக் குறிக்கிறது. சச்சிதானந்தம் என்று சொல்வோமே, சத்-சித்-ஆனந்தம்; அதிலே வருகிற 'சத்' என்பது எல்லாவற்றுக்கும் சத்தியமாக இருக்கக்கூடிய சர்வத்துக்கும் சத்தியமாக இருக்கக்கூடிய

சுதா சேஷய்யன்

புன்னைநல்லூர் மாரியம்மன்



- பரமாத்மா. இந்த 'சத்' உடன் 'சித்' போய்ச் சேர்ந்தால் அது ஆனந்தமாகிற நிலைமை. அதுதான் சச்சிதானந்தம்.

சித் என்பது என்ன? சைதன்யம் - அதாவது பரமாத்மாவின ஸ்வரூபமான ஒவ்வொரு ஜீவனுக்குள்ளேயும் இருக்கக் கூடிய வஸ்து. ஆதிசங்கரர் சொல்கிறார் : "ஒவ்வொரு ஜீவனுக்குள்ளேயும் அந்த வஸ்து இருக்கிறது. அந்த வஸ்துவுக்கு என்ன பெயர் சொல்வது? அது பரமாத்மாவின் வஸ்து!" என்கிறார்.

அதனால்தான் சிதாகாசம் என்று சொல்கிறோம். சிதம்பரத்தில் நடராஜர் ஆடுகிறார் என்றால், ஏதோ சிதம்பரம் என்கிற ஊரில் ஆடுகிறார் என்று பொருள் அன்று. சிதம்பரத்துக்கே ஆகாச ஸ்தலம் என்று பெயர். சிதாகாசத்தில் அவர் ஆடிக்கொண்டிருக்கிறார் என்று அர்த்தம். ஆகாசம் என்பது, இந்த 'சித்' போய்ச் சேரக்கூடிய இடம். அதுதான் சிதாகாசம்.

> **"நெருப்பைக் கொண்டு போய் இதய பொந்தில் வைத்தேன். அதில் வேண்டாத குப்பைகள் இருந்தன. குப்பையெல்லாம் பொசுங்கிப் போய்விட்டது."**

அக்னிக் குஞ்சு!

பாரதி ஒரு பெரிய அம்பாள் உபாஸகர். அவர் ஓர் அழகான பாட்டு பாடுவார் - நெருப்பைப் பார்த்தேன் என்று பாடுவார். சிறிய நெருப்புப் பொறி; பெரிய நெருப்பல்ல... அந்தச் சின்னூண்டு நெருப்புப் பொறியைப் பார்த்தவர், அதை எங்கேயாவது கொண்டுபோய் ஒளித்து வைத்துவிட எண்ணினார். அது பாட்டுக்கு இங்கே மினுக் மினுக்கென்கிறதே, எங்கேனும் கொண்டு போய், அதை ஒளித்து வைத்தால் என்ன என்று எடுத்துப் போனார். எங்கே ஒளித்து வைப்பது...? ஒரு பெரிய காடு இருந்தது. அதிலே ஒரு மரம் - நிறைய மரங்களு[ள்] ஒரு மரம்; அந்த மரத்தில் ஒரு பொந்[து] அந்தப் பொந்துக்குள்ளே கொண்டுபோ[ய்] வைத்து விட்டார் - அந்தத் தீ[ப்] பொறியை :

> **அக்னிக் குஞ்சொன்று கண்டேன் - அ[தை]**
> **ஆங்கோர் காட்டிலோர் பொந்திடை வைத்தே[ன்]**

ஒவ்வொரு வார்த்தைக்கும் எவ்வள[வு] அர்த்தம் பாருங்கள்! அக்னிக் குஞ்சு[] வெறும் அக்னி அன்று. அதைக் 'காட்டி[ல்] வைத்தேன்' என்று சொல்லாம[ல்] 'ஆங்கோர்' காடு என்கிறார். காடு ப[க்]கத்தில் இல்லை; எங்கேயோ தூரத்தி[ல்] இருக்கிறது. அக்னிக் குஞ்சு பக்கத்தி[ல்] இருக்க வேண்டாம் என்று எங்கேயோ ஒரு காட்டில் கொண்டு வைத்துவிட்[டு] அதை மறந்து விட்டார்.

> **வெந்து தணிந்தது காடு தழல்**
> **வீரத்தில் மூப்பென்றும் குஞ்சென்று[ம்] உண்டோ[]**
> **தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்**
> **தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்**

தத்தரிகிட தத்தரிகிட தித்தோ[ம்] என்கிறபோது அந்த நெருப்பு எப்படி[ப்] பட்ட நெருப்பு என்பதை உணர்த்துகிற[து].

தேவ - அசுரர்கள்

பாரதியைக் கொஞ்ச நேரத்துக்[கு] விட்டு விடுவோம்; லலிதா ஸஹஸ்[ர] நாமத்தைச் சற்று அப்பால் வைப்போ[ம்]. நமக்கு ரொம்பப் பிடித்த ஒரு விஷயம் அல்லது ரொம்ப நாளாக ஆசைப்பட்ட[] விஷயம்-அது ரொம்ப சின்ன விஷ[ய]மாகக் கூட இருக்கலாம். கைநிறைய சர்[க்]கரையை எடுத்து வாயில் போட்டு[ச்] சாப்பிட வேண்டும் என்று ஆசை[.] ரொம்ப நாட்களாக நிறைவேறவில்லை[.] யாராவது பார்த்து விடுவார்களோ என்[று] வெட்கம் இருந்தது. ஒரு நாளைக்கு அ[து] சாத்தியப்பட்டது... எவ்வளவு ச[ந்]தோஷம்! அதுதான் வேண்டும் என்[று] ஆசைப்பட்டவர்களுக்கு அது ரொம்ப[ப்] பெரிய விஷயம்தானே! அப்போது நா[ம்] என்ன சொல்வோம்? "அப்படியே ஆ[ட] வேண்டும் போல் இருக்கிறது; குதிக்[க] வேண்டும் போல் தோன்றுகிறது



அப்போது உணர்ந்தேன் - தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ! சத்-சித் இடையே இது இளையது அது மூத்தது என்று உண்டா? கிடையாது! சத்தும் சித்தும் ஒன்றாகச் சேர்ந்த ஆனந்தம் தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்!

அந்த சத்-சித்-ஆனந்தம் இருக்கிறதே, சத்தும் சித்தும் சேர்கிற நிலைமை - அதைக் குறிப்பது தான் சிதக்னிகுண்ட ஸம்பூதா. எங்களுக்காக அம்பிகை அக்னியிலிருந்து புறப்பட்டு வந்தாளே - எந்த அக்னியிலிருந்து...? யாரோ என்றைக்கோ செய்த யாக அக்னியி லிருந்து அவள் தோன்றினாள் என்பது இல்லை. நம் மனத்துக்குள் தினந்தோறும் இந்தச் சித்துக்குள்ளே செய்யக்கூடிய யாகமிருக்கிறதே அந்தச் 'சித் அக்னி குண்ட'த்திலிருந்து வந்தவள்.

அப்படியானால் தேவ கார்ய ஸமுத்யதா என்பதற்கு என்ன அர்த்தம்...?

எங்களுடைய சித்தத்திலிருந்து - சிதா காசத்திலிருந்து வந்திருக்கக்கூடியவள் என்றால் தேவ கார்யத்துக்கு வந்ததாக எப்படி ஆகும்? அடுத்த நாமமே முப்பத்து முக்கோடி தேவர்களுக்கான காரியத்தை நிறைவேற்ற அவள் வந்ததாகச் சொல்கிறதே என்கிற கேள்வி வரும்.

மிகப் பெரிய உண்மையை - சநாதன தர்மம் என்றைக்கும் சொல்லக்கூடிய உண்மையை - இந்தத் 'தேவ கார்ய ஸமுத்யதா' உணர்த்துகிறது...

(தொடரும்)

என்போம். எல்லை மீறிய மகிழ்ச்சியிலே - ஆனந்தத்தின் எல்லைக்குப் போகும் போதுதான் அந்த ஆட்டம் வரும். பாரதி அந்த ஆனந்தத்தின் எல்லைக்குப் போனார். அதனால்தான் தத்தரிகிட தித்தோம்!

ஏன் தத்திரிகிட தித்தோம் வந்தது? 'சின்ன பொறிதானே என்று நினைத்து நெருப்பைக் கொண்டுபோய் இதயமாகிற பொந்தில் வைத்தேன்.... என்னைச் சுற்றி என் மனத்துக்குள் வேண்டாத காடும் குப்பையும் இருந்தன. நெருப்புப் பொறியை உள்ளே வைத்துவிட்டு அதை நான் மறந்து போய்விட்டேன். ஆனால், 'வெந்து தணிந்தது காடு!' சுற்றியிருந்த குப்பையெல்லாம் பொசுங்கிப் போய் விட்டது. அப்போதுதான் ஓர் உண்மை புரிந்தது. இங்கே - என்னுள்ளே கொண்டு வைத்த இத்தனூண்டு 'சித்' என்பதும் 'அங்கே' இருக்கக்கூடிய 'சத்' என்பதும் - இரண்டின்றி ஒன்றாகச் சேர்ந்தன.

திருத்தம்!

29.10.2006 இதழில் (ஸ்ரீ லலிதா - 5) குறிப்பிடப்பட்ட அறிஞர் ஜான் ஷட்ராஃப். (கார்டன் ஷட்ராஃப் அல்ல). இவரே ஆர்தர் ஆவலான் என்கிற பெயரிலும் அம்பிகையைப் பற்றி எழுதியவர்.

சுட்டிக் காட்டிய வாசகர்களுக்கு நன்றி.

- ஆர்.



மன அழுத்தத்தால்

முப்பது வயது நபர் ஒருவர் அஜீரணக் கோளாறுடன் என்னைக் காண வந்தார். அடிக்கடி மலம் கழிக்க வேண்டியிருந்ததாகவும் (சில சமயங்களில் கட்டியாக, மற்ற சமயங்களில் தண்ணியாக) வாழ்க்கையே இதனால் பாதிக்கப் பட்டிருப்பதாகவும் வருந்தினார்.

இரத்தப் பரிசோதனை, மலப் பரிசோதனை, கோலனோஸ்கோபி எனப்படும் மலக்குடல் பரிசோதனை என்று அனைத்தும் செய்து பார்த்தாயிற்று என்றும், பிரச்னையை நிர்ணயிக்கவோ தீர்க்கவோ முடியவில்லை என்றும் வருந்தினார்.

இவருக்கு, கறிவேப்பிலை சேர்ந்த கைடர்யாதி கஷாயம், வில்வமூலம் சேர்ந்த வில்வாதி குளிகை மற்றும் க்ருஹண்யாந்தக நெய் கொடுக்கப்பட்டது. உணவில் மாதுளம்பழச்சாறு, மோர், வெந்தயக் கீரையுடன் கடைந்த பாசிப் பருப்பு தரப்பட்டன. ஒரு மாதத்தில் இவருடைய பிரச்னை குணமாயிற்று.

இந்த மாதிரி நோயை நாங்கள் 'க்ரஹணி' என்று அழைப்போம். க்ரஹணி என்பது உணவைச் செரிமானம் செய்து சத்தையும் மலத்தையும் பிரிக்கும் உடல்பாகம். இப் பாகத்தின் பெயராலேயே நோயையும் அழைக்கிறோம்.

மலம் அடிக்கடி வெளியேறுதல் தவிர, புளித்த ஏப்பம், பொருமல், அஜீரணம், வாயில் நீர் ஊறுதல் போன்றவை க்ரஹணியின் அறிகுறிகள். காது இரைச்சல் கூட க்ரஹணியின் அறிகுறியாய் இருக்கலாம்!

வாதம் அதிகரித்து க்ரஹணி, ஏற்பட்டால் அது 'க்ரானிக் காஸ்ட்ரைடிஸ்' என ஆங்கில மருத்துவம் குறிப்பிடுகிற அடையாளங்களை உண்டாக்கும். இரிடபிள் பவல் சின்ட்ரோம் எனப்படும் அடிக்கடி சிறிது சிறிதாக மலம் வெளியேற்றும் தொல்லையும் வாதக்ரஹணியால் விளைவதே. இந்தத் தொல்லை இன்றைக்கு ரொம்ப பரவலாகி வருகிறது. இந் நோயினால் பாதிக்கப்படுவோர் பெரும்பாலும் வாதத் தன்மை உடையவராய் இருப்பர். (வாதம், பித்தம், கபம், வாயு என்ற நான்கு பிரகிருதிப் பிரிவுகளுள் ஏதேனும் ஒன்றில் பெரும்பாலான நோயாளிகள் அடங்குவர்).

கவலை, மன அழுத்தம், பரபரப்பான வாழ்க்கை முறை போன்றவற்றால் குடல் பாதிக்கப்படுகிறது என்பது தெரியும். மூளையைப் போன்ற அமைப்பு ஒன்று நமது குடலிலும் உண்டு. கட் பிரெய்ன் (gut brain) என்று இதைக் குறிப்பிடுவார்கள். நரம்பு மண்டலத்தில் காணப்படுகிற நூறு கோடி நரம்புத் திசுக்கள் வயிற்றிலும் காணப்படுகின்றன. இதனால்தான் குடல் என்பது மிக முக்கியமான உறுப்பாகக் கருதப்படுகிறது.

டாக்டர். எல். மஹாதேவன்

குடலில் பாதிப்பு!



இந்த உறுப்பில் புண் (அல்சர்) ஏற்பட்டு நாள்பட நீடித்தால், அது ஆபத்தில் போய் முடியும். தவறான உணவைத் தவிர, மது அருந்துதல், புகைப்பிடித்தல் போன்றவையும் க்ரஹணியை விளைவிக்கும், அல்லது தீவிரமாக்கும்.

எனவே உடல் தன்மைக்கேற்ப ஒவ்வொருவரும் கட்டுப்பாடுடன் உணவுப் பழக்கங்களைக் கைகொள்வது அத்தியாவசியம்!

வாத க்ரஹணியில் ஒரு வகைத் தொல்லை என்றால் பித்தம் அதிகமாக உள்ள க்ரஹணியில் கோலைடிஸ் எனப்படும் குடல் புண் ஏற்படுகிறது. துர்நாற்றம் மற்றும் எரிச்சலுடன் இரத்தம் கலந்த மலம் வெளியேறுகிறது.

இராமலிங்கம் என்ற நோயாளிக்கு இந்தப் பித்த க்ரஹணி படுத்தியபோது கோரைக்கிழங்கு பால் எடுத்து கஷாயம் கொடுத்தேன். கங்காதர சூரணத்தைத் தேனில் சேர்த்து இரண்டு வேளையும் கொடுத்தேன். இலவம் பிசின், பால், ஆல், அரசு, அத்தி, இத்தி, தேன், நெய் - இவற்றால் செய்யப்பட்ட இயற்கை எனிமா (மலம் வெளியேற்றும் சிகிச்சை) அளித்தேன். குணம் ஏற்பட்டது.

கபத்தின் விளைவான க்ரஹணிக்கும் சிகிச்சை உண்டு. கணைய நோய் (pancreatitis), சத்துப் பொருள்களை ஏற்காமை, பால் ஒவ்வாமை (கைக்குழந்தைகளுக்கு இது வரக்கூடும்) போன்றவை கப க்ரஹணியால் வருபவை. பால் ஒவ்வாமை உள்ள குழந்தைகளுக்கு மஞ்சள் பொடி, கோரைக் கிழங்கு, சுக்கு - இவற்றுடன் சேர்த்துப் பாலைக் காய்ச்சிக் கொடுத்தால் ஒவ்வாமை ஏற்படாமல் குடிக்க வாய்ப்பு உண்டு. இதை மருத்துவர் மேற்பார்வையில் செய்ய வேண்டும்.

தூங்கும்போது ஏற்படும் வயிற்று வலி, சங்கடம், குடத்தில் நீர் முகர்வது போன்ற 'கொடகொட' இரைச்சல் போன்றவை சங்கிரக க்ரஹணி ரகத்தைச் சேர்ந்த இன்னல்கள்.

பொதுவாக க்ரஹணிக்கான சிகிச்சை என்பது அஜீரணத்துக்கான சிகிச்சையாகவே ஆரம்பிக்கும். இதற்கு வயிற்றுப் போக்குக்கான மருந்துகளும் தரப்படும். ஆயுர்வேத நிபுணர்கள் கூர்ந்து கவனித்து, பாகுபடுத்தி மருந்து தருவார்கள். வீட்டில் கைவைத்தியமாக மோரை நன்கு நீர் விட்டுப் பெருக்கிப் பயன்படுத்தலாம். நல்ல பலன் கிட்டும். தயிரைத் தவிர்ப்பதும் அவசியம். பசியைத் தூண்டுதல், மலத்தைக் கட்டுதல், ஜீரணத்துக்கு உதவு



தல் என்று மோருக்கு மூன்று குணங்களை ஆயுர்வேத வல்லுநர்கள் சொல்கிறார்கள். கபத் தன்மை இருந்தாலும் மோர் தைரியமாகக் குடிக்கலாம்.

வீட்டில் செய்யக்கூடிய மோர் மருந்து குறிப்புகள் இதோ... பத்திரப் படுத்தி வைத்துக் கொள்ளுங்கள்.



சிறு கண்டங்கத்திரியை அரைத்து, அதை நெய் தடவிய பழைய மண் பானையின் உள்புறத்தில் தடவி, அந்தப் பானையில் மோரை ஊற்றி வைத்து சில மணி நேரம் கழித்து பருகினால் எப்பேர்ப்பட்ட வியாதியும் மாறும் என்று ஆயுர்வேத நூல்கள் சொல்கின்றன.

வாதம் சம்பந்தமான வயிற்று நோய்களில் மோருடன் திப்பிலியும் இந்துப்பும் சேர்த்துக் கொடுக்கலாம். கபம் சம்பந்தமானது எனில் மோருடன் தேன், சீரகம், திரிகடுகு சேர்த்துத் தரலாம். வயிற்றுநீர் என்னும் உதர நோயில் மோருடன் திரிகடுகும்; (சுக்கு மிளகு திப்பிலி) மண்ணீரல் நோய்க்கு மோருடன் வசம்பும் சேர்த்துக் கொடுக்கலாம். மலத்தடை ஏற்படும் நிலைகளில் மோருடன் ஓமம் சேர்த்துச் சாப்பிடலாம்.

கூளம் என்பது மோர்க்குழம்பைப் போன்றது. வாணலியை அடுப்பில் வைத்து, அதில் சிறிதளவு எண்ணெய் ஊற்றி, கடுகு, மிளகாய், வெந்தயம், கறிவேப்பிலை ஆகியவற்றை அளவாகத் தாளிதம் செய்ய வேண்டும். இதனோடு மோரைச் சேர்த்து, மஞ்சள் பொடி தூவி, அதிகமாகக் கொதிக்க விடாமல், நுரைத்து வரும்போதே இறக்கி வைத்துவிட வேண்டும். இறக்கிய பிறகே சிறிதளவு உப்பு போட்டு கலக்க வேண்டும். இது கிரஹணி, அதிஸாரம் போன்ற நிலைகளுக்கு ஏற்ற உணவு வகை.

கிரஹணி தெரியும். அதிஸாரம் என்றால் என்ன என்று கேட்கிறீர்களா...? அதுவும் குடல் சம்பந்தமான உபாதைதான். அதைப் பற்றி அடுத்தவாரம் சொல்கிறேன் - விவரமாக.

கறிவேப்பிலைப் பொடி

தேவையான பொருட்கள் : கறிவேப்பிலை, நல்ல மிளகு, கறுப்பு உளுத்தம் பருப்பு, சீரகம், பெருங்காயம், இந்துப்பு, சிறிது வெந்தயம்

செய்முறை : கறிவேப்பிலையை நன்றாகத் தண்ணீரில் அலசி எடுத்து, மெல்லிய துணியில் பரப்பி, ஈரம் காய உலர்த்தவும். ஒரு டேபிள் ஸ்பூன் கறுப்புளுந்து, வெந்தயம், மிளகு, பெருங்காயம் ஆகியவற்றை எண்ணெய் விடாமல் தனித்தனியே வாணலியில் வறுத்து எடுத்துக் கொள்ளவும்.

கறிவேப்பிலையையும் (உலர்ந்தபின்) வாணலியில் எண்ணெய் விடாமல் வறுக்க வேண்டும். அளவாக இந்துப்பு சேர்த்து எல்லாவற்றையும் மிக்ஸியில் போட்டுப் பொடி செய்து வைத்துக் கொள்ளுங்கள். சாதத்துடன் கலந்தோ அல்லது பலகாரத்துக்குத் தொட்டுக் கொண்டோ சாப்பிடலாம். இதுவும் கிரஹணி, அதிஸாரம் போன்றவற்றுக்கு நல்ல குணமளிக்கும்.

தன்வந்தரி டாலர்
பரிசுப் போட்டி - 3

மோரைக் கொண்டு செய்யக்கூடிய சிறந்த கைவைத்தியக் குறிப்பை அனுப்பி வையுங்கள் - அஞ்சல் அட்டையில் மட்டும் எழுதலாம்.

மிகச் சிறந்த குறிப்பைத் தேர்வு செய்து டாக்டர் மஹாதேவன் **தன்வந்தரி டாலர்** பரிசளிப்பார்.

இரண்டாம் பரிசாக அவரது **தேவமருந்து முதல்பாகம் புத்தகம்.**


கடைசி தேதி **15.11.06**


ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

சிறுகதை

மௌனம்!

சீதாரவி





"எனக்குச் சாப்பாடும் வேண்டாம்; ஒரு மண்ணும் வேண்டாம் போ!" மீனு தன் டீன்ஏஜ் கோபத்தை முழுதும் பிரயோகித்துத் தட்டை ஒதுக்கினாள்.

"ஏன்மா! உங்கம்மா சமைச்ச சாப்பாடு வேண்டாம்னு சொன்னாலும், மண்ணு வேண்டாம்னு சொன்னாலும் ஒண்ணு தானே... இதுல மண்ணும் வேண்டாம்னு தனியா வேற சொல்லணுமா!" என்னவர் மிடில் ஏஜ் எய்தியும் மாறாத கிண்டலுடன் கமெண்ட் அடித்தார்.

"போதும்பா உங்க ஜோக்கும் நீங்களும்... மீனுவுடைய கண்களில் குழாய் திறக்கத் தயாராயிற்று.

"ஈசுவரா! கருணாகரா...!" - மிடில் ஏஜிலேயே வெரி ஓல்ட் ஏஜ் போல் உணர்ந்த நான், இப்படிப்பட்ட அல்ப பிரச்னைகளுக்குத் துணைக்கு வர மாட்டார் என்று தெரிந்தும் கடவுளைக் கூப்பிட்டேன்.

அதுவே மீனுவின் வாதம் வலுக்க துணையாகியது.

"நீ இப்படி சும்மா ஈசுவரா, கருணாகரான்னு பயம் காட்டினியானால் அந்த இரண்டு பேரும் நல்ல ஹாலிடே ரிசார்ட்டா பார்த்து வகேஷன் போய்டு வாங்க... அப்புறம் யாரைக் கூப்பிடுவே?" என்றாள் துக்கத்தினிடையே துளித்த நக்கலுடன்.

"அதுக்காகத்தான் ஒண்ணும் பேசாம மௌனமா இருக்கேன்னு சொல்றேன்."

"வாட்? மௌனமா...? எத்தனை நாளைக்கு, கபி...?" என்று ஆவலோடு என்னைப் பார்த்தார் தியாகு.

"வியாழக்கிழமைகள்ல மட்டும்தான். அதுவும் காலையில மட்டும்... பன்னிரண்டு மணி வரைக்கும்..." என்று என் முடிவைத் தெரியப்படுத்தினேன்.

"வியாழக்கிழமை மௌன குருவான தக்ஷிணாமூர்த்திக்கு உகந்த நாள் அல்லவா... பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்– அன்றைய தினம் மௌனம் அனுஷ்டித்தால் ரொம்ப சிலாக்கியம். சதா பேயாய் அலையும் மனம் உன் நோக்கித் திரும்பும்..."

"அப்படித் திரும்பினா எல்லாத்தை

விடப் பெரிய பேயை அது பார்க்குமே!" என்று சைக்கிள் கேப்பில் டிராக்டர் ஓட்டிய தியாகுவைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்தேன்.

நான் என்ன ஒரு மண்டலமா மௌனம் இருக்கப் போறேன்..? ஆஃப்டர் ஆல் ஜஸ்ட் ஹாஃப் அ டே... அதுக்கு என் குடும்பம் என்னோட ஒத்துழைக் கலைன்னா யார் ஒத்துழைப்பா...?"

"நான் ஒத்துழைக்க மாட்டேன்னு சொல்லலியே. உன் விரதத்தை அடுத்த வியாழக்கிழமைலேர்ந்து வைச் சுக்கோன்னு தானே சொல் றேன்... இந்த வியாழக் கிழமை ஸ்கூல்ல பேரன்ட்ஸ் மீட்டிங் இருக்கு..."

"மணல் திருட்டுல போலீஸ் நாய் மோப்பம் புடிக்க மாட்டேங் குதே... ஏன்?"
"அதுக்கு டஸ்ட் அலர்ஜி உண்டு!"
- அம்பை தேவா

"என் கண்ணில்லே மீனு, அப்பா வருவார் பேரன்ட்ஸ் மீட்டிங்குக்கு. இந்த வியாழன் ஆரம்பிக்கணும்னு மனசுல நினைச்சுண்டுட்டேன். ப்ளீஸ், அதுபடி ஆரம்பிச்சுடறேன்..."

அதுவரை ஆதரவு அளிக்கத் தயாரா யிருந்த தியாகு அந்தர்பல்டி அடித்தார்!

"குழந்தை சொன்னா கேளு சசி.. நீதான் பேரன்ட்ஸ் மீட்டிங்குக்கு வரணும்னு அவ ஆசைப்படறா. அன்னிக் குப் போய் 'உம்'முன்னு உட்கார்ந்திருந்தா மீனுவுக்கு எப்படி இருக்கும்!"

"எந்த அப்பாவும் பேரன்ட்ஸ் மீட்டுங் குக்கு வரதில்லே... எல்லாம் அம் மாஸ்தான். எனக்கு மட்டும் அப்பா வந்தா எப்படி இருக்கும்... அசிங்கமா இருக் காதா.... அதுக்குத்தான் உன்னை வரச் சொல்றேன்..." என்றாள் மீனுவும்.

'மௌன விரதம் இருக்கும் என் முதல் முயற்சியே தடைபட்டு நின்றது. 'அதனா லென்ன, இதுவும் பகவான் சித்தம்' என்று ரொம்ப பவ்யமாக என்னை நானே சமா தானப்படுத்திக் கொள்ள வேண்டியிருந் தது. அடுத்த வாரம் பார்த்துக் கொள்ள லாம் என்று விட்டுவிட்டேன்.

அடுத்த வியாழக்கிழமைக்கான காலை வேளை நினைவூட்டல்களையும் அத்தியாவசியப் பரிமாற்றங்களையும் வெகு நிதானமாக யோசித்து முன் கூட்டியே எழுதி வைத்தேன். மௌனம் என்று இருந்துகொண்டு கை காலை ஆட்டி அபிநயிப்பதும், தாளில் எழுதிக் காட்டுவதும் தவிர்க்கப்பட வேண்டும் என்று ராமகிருஷ்ண விஜயத்தில் படித் தது ஞாபகத்தில் இருந்தது.

"இப்படிக் குட்டிக் குட்டியா எழுதினா என்னால தமிழ் வாசிக்க முடியாது. பெரிசா எழுதிக் கொடு" என்று மீனு தாள்களைத் திருப்பித் தந்தாள்.

"எனக்கும் கண்ணாடி உடைஞ்சு போச்சு... நல்ல கொட்டை எழுத்தா எழுதிக் கொடு..." - இது மீனுவின் அப்பா.

"ஸ்ரீராமஜெயம் எழுதினாலும் புண்ணியமுண்டு. இதைப் போய்த் திருப்பி எழுதணுமா! சம்சார சன்னை..." என்று நான் அலுத்துக் கொண்டே எழுத.

"பேசாம எல்லா நாளைக்குமே மௌன விரதம் இருக்கலாம்" என்று என் அன்பானவர் கறித்துக் கொட்ட, மறுநாள் மௌன விரதமிருப்பதற்கான எனது ஆயத்தங்கள் இனிதே நிறைவடைந்தன.

படுக்கப் போகுமுன் வழக்கம் போல் அலாரம் வைத்துக்கொண்டபோது இலேசாக பயம் வந்து விட்டது. மறந்து போய் நாளை காலை வழக்கம்போல் பேசி விட்டால்...?

மீனு அப்பாவைத் தட்டி எழுப்பி என் சந்தேகத்தை வெளியிட்டேன். தலையி லடித்துக் கொண்டு மறுபுறம் திரும்பி மௌனமாகப் படுத்துவிட்டார்!

மௌனவிரதம் ஆரம்பமாயிற்று. பேசாமலிருப்பது சுகமாகவே இருந்தது. இந்த விரதத்தைச் சிபாரிசு செய்திருந்த

யோகா மாஸ்டர், "பெரிய தொரு புன்னகையோடு மௌன விரதம் இருக்கணும். ஓர் அழகான மாளிகையில - அதுதான் நம்ம ஆத்மா - கடவுளோட நெருங்கி அமர்ந்திருக்கிறாப்போல கற்பனை பண்ணிக்கணும்.... சரியா?" என்று சொல்லியிருந்தார்.

இப்போது அந்தக் கற்பனையெல்லாம் சரி வரவில்லை! விண்டு விண்டு எழுதித் தந்த வீட்டுக் குறிப்புகளைச் சட்டை செய்யாமல் மீனு அப்பா கசங்கிய சட்டையைப் போட்டுக் கொண்டு ஆபீஸ் போவதைப் பார்த்துப் புன்னகை கலைந்து போயிற்று. மீனு லஞ்ச் பாக்ஸை வாசல் வரை எடுத்துச் சென்றுவிட்டு ஷூவை மாட்டிக் கொண்டு சோற்றை மறந்து வைத்து விட்டுப் போனபோது கடவுள் என் ஆத்மாவின் காதைத் திருகுவது போலிருந்தது.

ஒருவாறாக எல்லாவற்றையும் துடைத்துப் போட்டுவிட்டுச் சில நிமிடங்கள் சுவாமி முன்னால் கண் மூடி அமர்ந்தேன். போன் அடித்தது. சிகப்பி ஆயா எடுத்துப் பேசுவது கேட்டது. "மத்தியானம் பன்னண்டு மணிக்கு மேல கூப்டு.. இப்போ பேசாது" என்றாள்.

சுலோகங்களை முடித்துவிட்டு நான் எழுந்ததுதான் தாமதம். "ஐயாவோட அம்மா கூப்டாங்க... அப்பால கூப்ட சொல்லிட்டேன்..." என்றாள்.

எண்பது வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் மாமியார் எதற்காகக் கூப்பிட்டிருப்பார்? அவசரமோ? உடம்பு ஏதாவது...? கவலை மௌனமாக அரிக்க ஆரம்பித்தது.

'ஒன்றும் இராது... சும்மாதான் கூப்பிட்டிருப்பார்...'

'இல்லையே, காரணமில்லாமல் கூப்பிடுபவர் இல்லையே!'

'ஏதாவது அவசரமாயிருந்தால்...?'

'எப்படியிருந்தாலும் வேலூரில் இருக்கிறார்கள்... இங்கிருந்து என்ன உதவி செய்ய முடியும்?'

'அதற்காகப் பேசாமலிருப்பதா...?'

மனத்தை அடக்க முடியாமல் போனை எடுத்துப்... பேசினேன்.

"கசியா..? தியாகு இப்பத்தான் போன் பண்ணி வைச்சான். நீ மௌனம்னு சொன்னானே..?"


"அவர் பண்ணியிருப்பார்னு நினைக்கலைம்மா... நீங்க எதுக்குக் கூப்பிட்டீங்க...?"

"டீ.வி.யில உனக்குப் பிடிச்ச சௌகார் ஜானகி படம் இரண்டு மணிக்கு... மௌனம் அதுக்குள்ள முடிஞ்சுடறதே..."

முடிவதற்குள்ளாகவே அன்று மௌனம் முறிந்து விட்டது! போனில் பேசியதால் மட்டும் அல்ல. சிகப்பி ஆயா 'சோப்பு வாங்க வேண்டும்; பாத்திரம் துலக்கும் விம் தீர்ந்து விட்டது; நாளை பால் கார்டு வாங்க பணம் இப்போதே தந்தால் தான் முடியும்' என்று பலவாறாக என்னை ஏவ, ரூபாய் நோட்டுகளுடனும் அவளுடனும் ஒரு மல்யுத்தம் நடந்த வேண்டியதாகிவிட்டது.

அதற்கு அடுத்த வியாழனுக்கு மேலும் தீவிரமான ஆயத்தங்கள்...

என் பிரார்த்தனை வீண் போகவில்லை. வியாழன் காலை பதினொரு மணி வரை, கண்ணை மூடிக் கொள்ளாமலே மனத்தில் அமைதி தவழ்ந்தது. எனது ஆத்மா - அல்லது ஆத்மா என்று நான் எண்ணிக் கொண்ட ஒரு வஸ்து - கடவுளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு ஒரு மேலான அனுபவத்துக்குத் தயாராகிக் கொண்டிருந்தது... அப்போது சரியாகப் பதினொரு மணி. தடதடவென்று தண்ணீர் கொட்டும் சப்தம்.



'ஆத்மா என்ற அழகிய மாளிகையின் கூரை பொத்துக் கொண்டு விட்டதா என்ன...?' இல்லையில்லை- ஓசை கொல்லைப் பக்கத்திலிருந்து வருகிறது!

ஓடிப் போய்ப் பார்த்தால்... பாத்திரம் கழுவும் தோட்டத்துப் பித்தளைக் குழாயை யாரோ பகல் திருடன் கழற்றிக் கொண்டு போய் விட்டிருந்தான். ஓவர்ஹெட் டாங்க் தண்ணீர் மொத்தமும் வெளியேறும் முன் வால்வுகளை மூடியாக வேண்டும்!

ஓடிப் போய் போனை எடுத்துப் பக்கத்து வீட்டு பிரேமாவுக்கு போன்

செய்தேன்.

"என்ன? மௌனம்னு சொல்லிட்டு போன் பண்றே...?"

"சுப்புவுக்கு ஸ்டடி லீவ்தானே... கொஞ்சம் உடனே அனுப்பு. டேங்க்கோட வால்வுகளை மூடணும்..." விளக்கிச் சொன்ன பிறகு சுப்பு வந்தான். தண்ணீர் கொட்டுவது நின்றது.

அடுத்த வியாழக்கிழமைக்கு நான் எந்த ஆயத்தமும் செய்யவில்லை... ரொம்பத் திட்டமிட்டு சவிஸ்தாரமாக முயன்றால் எதுவுமே கிடைக்காது. 'ஜஸ்ட் பீ'; நடப்பது நடக்கட்டும்; என்றெல்லாம் ஜே.கே., ஸ்ரீ ஸ்ரீ, கிப்ரான், இத்யாதி தத்துவ மேதைகள் காட்டிய வழியில் 'சும்மா' இருந்து விட்டேன்.

புதன் இரவு மீனு ஹோட்டலில் சாப்பிட வேண்டும் என்று அடம்பிடித்தாள். 'நாளை மௌனம்; ஆதலால் இன்றே ஸாத்விகமாய் உண்ண வேண்டும்' என்றெல்லாம் அவளிடம் வாதிடாமல் ஹோட்டலில் மசால் தோசை ஐஸ்க்ரீம் என்று பிடித்ததைச் சாப்பிட்டேன்.

"இன்னிக்கு அம்மா ரொம்ப குட் மூட்ல இருக்காங்க, இல்லையாப்பா...?" என்றாள் மீனு.

"நாளைக்கு மௌன விரதமில்லையா... அதான்" என்றார் தியாகு - கண்களைச் சிமிட்டியபடி.

"மௌனமெல்லாம் இனிமே கிடையாது..."

"தோபார்டா! அம்மா கன்வர்ட் ஆயிட்டாங்க. கொண்டாட வேண்டாமா!" - மீனா இன்னொரு ஐஸ்க்ரீம் ஆர்டர் செய்தாள் எல்லோருக்கும்.

வியாழன் காலை எழுந்திருக்கும் போது என் தொண்டை பாறையாகக் கட்டியிருந்தது. இரண்டு ஐஸ்க்ரீம்கள் சாப்பிட்ட விசேஷமாக இருக்க வேண்டும்...

"அம்மா... காப்பி வேணும்" மீனா கேட்டாள்.

"ரெடியாயிருக்குடீ...." என்று குரல் கொடுக்க முயன்றபோது தொண்டை சுத்தமாக எழவில்லை.

அதிமௌனமாக என் பணிகளை வழக்கம் போல் செய்து முடித்தேன்- எந்த இடையூறுமில்லாமல்!



ஒன்றைக் கவனித்திருக்கிறீர்களா? ஒரு ஏரியாவில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும். நேற்று பார்த்த எத்தனையோ வீடுகளும் கடைகளும் கால மாற்றத்தில் காணாமல் போயிருக்கும். ஆனால் போட்டோ ஸ்டுடியோவுக்கு மட்டும் இடப்பெயர்ச்சி என்பதே இருக்காது.

இதற்கு ஒரே காரணம்தான். புகைப்படக் கலையைத் தொழிலாக எடுத்துக்கொண்டவர்களுக்கு நஷ்டம் என்பதே வராது. தன்னை நம்பி வந்தவர்களை வளமாக வைத்துக்கொள்ளும் தொழில் இது.

வாழ்க்கையில் ஒருமுறையேனும் கேமராவை க்ளிக் செய்து அழகான அல்லது அவுட் ஆஃப் ஃபோகஸில், புகைப்படம் எடுத்திருப்பீர்கள் இல்லையா? இப்படித்தான் இந்தக் கலை ஒருவரிடம் ஆரம்பமாகிறது. பலரும் இதை ஹாபியாக ஏற்றுக்கொள்வார்களே தவிர, இதையே தொழிலாக மாற்றும் சிந்தனை தோன்றாது. ஏனெனில் தமிழ்நாட்டில் புகைப்படக் கலைக்கென்று முறையான அரசுப் பயிலகங்கள் இடையாது. வீட்டிலும் தலையில் தட்டி உட்கார வைத்துவிடுவார்கள்.



நம்பியவர்களைக் கைவிடாது!

புகைப்படக் கலைஞர்

ஆண்டனி ஸ்ரீதர்

ஆனால், உண்மை என்ன தெரியுமா? நாகரிகம் வளர வளர புகைப்படக் கலைஞர்களுக்கான தேவையும் அவசியமும் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. தேவை இப்படி எகிறிக்கொண்டிருக்க, புகைப்படக் கலைஞர்களின் எண்ணிக்கையோ குறைவாகவே உள்ளது.

இதைப் படிக்கும் பலருக்கும் போட்டோகிராபி மீது ஆர்வம் இருக்கும். ஆனால் இதை எப்படித் தொழிலாக மாற்றுவது என்பதில் உங்களுக்குச் சந்தேகம். சரிதானே?

இந்தத் தொழிலுக்கு வயதுப் பாகுபாடு கிடையாது. எந்த வயதிலும் உள்ளே நுழையலாம். முதலில் சிறிய கேமராக்கள் மூலம் நல்ல புகைப்படங்கள் எடுக்கப் பழக வேண்டும். எந்தத் தருணத்தில் 'நாம் அடுத்த கட்டம் போக வேண்டும்' என்று எண்ணுகிறீர்களோ' அப்போது ஒரு நல்ல புகைப்படக் கலைஞரிடம் உதவியாளராகச் சேருங்கள். இன்று எல்லாக் கல்லூரிகளிலும் விஸ்காம் என்றொரு படிப்பு உள்ளது. அதில் புகைப்படக் கலையையும் சொல்லித் தருகிறார்கள். சென்னையைப் போன்ற பெருநகரங்களில் சில தனியார் நிறுவனங்களும் புகைப்படக் கலையைக் கற்றுத் தருகின்றன.



பொழுதுபோக்கைத் தொழிலாக மாற்றும்போது என்னென்ன வாய்ப்புகள் உண்டு? ஒவ்வொன்றாகப் பார்ப்போமே!

தெருவுக்குத் தெரு முளைத்திருந்தாலும் போட்டோ ஸ்டுடியோ என்பது எப்பொழுதுமே இலாபகரமான விஷயம்தான். பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்களில் ஆரம்பித்து, கல்யாணம் போன்ற விழாக்கள்

வரை மாதம் இருபதாயிரம் முதல் லட்ச ரூபாய் வரை வியாபாரம் பார்த்துவிட முடியும்.

அடுத்தது, மாடலிங் துறை. புதிதாக மாடலிங் துறைக்குள் காலடி எடுத்து வைக்கும் இளம் பெண்கள் 'போர்ட்ஃபோலியோ' என்கிற விதவிதமான புகைப்படங்களை எடுத்துக்கொள்வது இன்றைய சூழலில் கட்டாயமாகிவிட்டது. ஆறு மாதம் அல்லது வருடத்துக்கு ஒருமுறை தங்களுடைய அழகை வெளிப்படுத்தவும் வாய்ப்புகளைப் பெறவும் நடிகைகளும் மாடல்களும் போர்ட்ஃபோலியோ செய்வார்கள். இதனால் மாதம் ஐந்து போர்ட்ஃபோலியோக்களாவது ஒரு போட்டோகிராபருக்குக் கிடைத்துவிடும்.



டிஜிட்டல் கேமரா, லைட்ஸ், ஸ்டுடியோ என எல்லாமே இன்று வாடகைக்குக் கிடைக்கின்றன.

மாடலிங் புகைப்படங்களைப் பார்த்துவிட்டு சினிமாவிலிருந்தும் வாய்ப்புகள் கிடைக்க ஆரம்பிக்கும். முழுப் படத்துக்கும் பணியாற்றத் தேவையில்லை. இன்விடேஷன், ஹோர்டிங்ஸ் போன்றவற்றில் மட்டும் நமது பங்களிப்பைத் தரலாம். பத்திரிகைகளிலும் பணியாற்றிப் பல பிரபலங்களை நேரில் பார்க்கும் சந்தர்ப்பத்தைப் பெறலாம். கே.வி. ஆனந்த், கோபிநாத், வைட் ஆங்கிள் ரவிசங்கர் போன்ற பிரபல சினிமா கேமரா மேன்கள் பலரும் முதலில் பத்திரிகைப் புகைப்படக் கலைஞராக தங்கள் வாழ்க்கையை ஆரம்பித்தவர்கள்தான்.

இவை தவிர, தொழிற்சாலைகளுக்கென்று தனியாக போட்டோகிராபர்கள் தேவைப்படுகிறார்கள். ஜுவல்லரி ஷாப்களின் விளம்பரங்களை எடுப்பதற்கென்றும் ஸ்பெஷலிஸ்ட் போட்டோகிராபர்கள் வேண்டப்படுகிறார்கள்.

இப்படி போட்டோகிராபர்களின் தயவு எல்லா இடங்களிலும் தேவைப்படுகிறது. இந்தத் தொழிலில்தான் மாதம் பத்தாயிரம் முதல் ஐந்து லட்சம் வரைக்கும்கூட சம்பாதிக்க முடியும். தேவை கடுமையான உழைப்பும் ஆர்வமும்தான்.

டென் டு சிக்ஸ் வேலை கிடையாது; மாதம் முழுவதும் வேலை இருக்காது. ஓய்வு நேரங்களில் புகைப்படக் கலைக்கென்று வரும் பிரத்யேகப் பத்திரிகைகளைப் படித்து அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

ஒரு சாப்ட்வேர் இன்ஜினியரால் தாம் பண்ணும் ஒரு ப்ரோகிராமை அடுத்தவரிடம் காட்டி மகிழ முடியுமா? ஆனால் ஒரு நொடிக்குள் கேமரா வழியாக புகைப்படக் கலைஞர்கள் செய்யும் அற்புதங்கள் காலத்துக்கும் நிற்கக் கூடியவை. நம்பி வாங்க! கைவிடாத துறை இது!


- ச.ந.கண்ணன்

மரம் இயற்கை நமக்களித்த வரம்

அதை பாதுகாப்பது நமது கடமை.
பதிலுக்கு நம் வீட்டு கதவுகளாகவும் ஜன்னல்களாகவும்
நம்மை நீண்டநாள் பாதுகாக்கும்.
மரத்திற்கு உள்ள தேவைக்கேற்ற உறுதி, அழகு, நம்பகத்தன்மை
வேறு எந்த பொருளுக்கும் இல்லை.

Timber facts...


IDEAL MOISTURE CONTENT



Timber retains its shape only when its moisture content is between 14 to 18%. Timber, even after 6 months of Air-Drying contains moisture between 30% to 50%. Kiln Seasoning as per IS Code 1141 alone can bring down the moisture to the ideal level.

TERMITE PROTECTION

While it is common to apply wood preservative oil, maximum durability is achieved under pressure impregnation method by injecting CCB Chemicals as per IS code 401.



TIMBER IS NO MORE A LUXURY

Treated Rubber Wood is Affordable. It is approved for Door, Window & Cupboards under IS code. 12896

Door is not product of Mere caorpentry.Use the wood only after Treatment & Seasoning. Even for Teakwood seasoning is a MUST. Take care Before you make your doors.

Contact:

MAYURAM TIMBER

257 G.S.T. Road, Tambaram,
Chennai 600 045 Phone: 22415297, 22411261

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.